# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969



## கிறிஸ்மஸ் - புத்தாண்டுச் சிறப்பிதழ்

டிசம்பர் 2001 – ஜனவரி 2002

25/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

டிசம்பர் 2001 - ஜனவரி 2002

மலர் 33 ❄ இதழ் 09

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்



முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723



விலை - 25/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)


## உள்ளே


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 1 |
| ஆயரின் வாழ்த்துச் செய்தி | 3 |
| மனிதத்துவப் போரின் ...... | 4 |
| அக்கினிக் குஞ்சு | 5 |
| இயேசு எனும் பெயர் | 7 |
| கிறிஸ்தவ நடைமுறைகள்.... | 8 |
| இலக்கிய மஞ்சரி | 11 |
| இலக்கை நோக்கி... | 12 |
| பொங்கலோ பொங்கல் | 14 |
| இயேசு மா காவியம் | 15 |
| இரவில் உதித்த யேசு | 17 |
| கனவிடை தோய்ந்து... | 19 |
| பாலனே உன்னை... | 21 |
| கிறிஸ்து பிறப்பு விழா | 22 |
| குடும்ப உறவு | 24 |
| தடையில்லாது வலம்வருவோம் | 25 |
| மாணவர் பக்கம் | 26 |
| திருச்சபைச் செய்திகள் | 28 |
| அன்பியத்தின் அவசியம் | 30 |
| கிறிஸ்து பிறப்பு | 33 |
| புலவரின் புலமைத்திறம் | 35 |
| கிறிஸ்தவ ஒன்றிப்பு | 36 |
| பத்தாவது ஆண்டு..... | 39 |
| பாரம் கரைந்த கதை | 40 |
| ஜனநாயகத்தில் நம்பிக்கை | 43 |
| புத்தாண்டுக் கனவுகள் | 44 |
| செபம் | 45 |
| நீர் இறைமகனென்றால் | 46 |
| விவிலியம் கற்போம் | 47 |
| அறிவை வளர்ப்போம் | 48 |





# இறைவாக்கு

ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர்
உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.
லூாக் 8/11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

விரும்பியோ, விரும்பாமலோ
இலங்கை அரசியல் வரலாற்றில்
திடீர்த் திருப்பம் ஏற்பட்டு
பன்னிரெண்டாவது பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது.
தேர்தல்தான் நடந்து முடிந்துவிட்டது.
ஆனால் தேர்தலுக்கு முன்னும், பின்னும்
நடந்த, நடக்கின்ற சம்பவங்கள் இன்னும் முடியவில்லை.
வாக்கெண்ணிக்கை போல் வளர்ந்து செல்லும்
வன்முறைகள்தான் கவலையைத் தருகின்றன.

12வது பாராளுமன்ற தேர்தல் - அதற்கு
கிடைத்த பெறுபேறுகள் - நம்மைச்
சிந்திக்கத் தூண்டுகின்றன.
காலத்தின் தேவைக்கு ஏற்ப
சில தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து விட்டன.
காலம் தப்பிப் பிறந்த ஞானமானாலும்
இன்னும் காலம் கடந்து விடவில்லை.
தமிழ் மக்களுக்காகவும், குறிப்பாக
தமிழின விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்தவர்களை
வலுப்படுத்தவுமே - களமிறங்கியுள்ளோம்
எனப் பலரகமான பிரச்சாரங்கள்
செய்தவர்கள் பலர்.
பிரச்சாரங்களையே கேட்டுக் கேட்டு
புளித்துப் போன மக்கள்
பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்று எண்ணிய சிலரை
கூட்டுக் கட்சி சார்பாக தெரிவு செய்துள்ளனர்

வடகிழக்கில் மட்டுமல்ல
அகில இலங்கை முழுவதிலுமே
சமாதானத்தை முன்வைத்தோர் வெற்றிபெற்றுள்ளனர்
இந்த வெற்றிகள் நமக்குத் தெளிவான செய்தியைத் தருகிறது.
"யுத்தம் வேண்டாம். சமாதானமே வேண்டும்"
என்ற தீர்ப்பை மக்கள் வழங்கிவிட்டார்கள்.
போர், போர் என அலுத்துப் போன மக்களுக்கு
சமாதானம் எனும் புத்தொளி பிறக்க வேண்டும்
மீண்டும் சமாதானத்தின் ஒளிக்கீற்றுக்கள்
தென்படத் தொடங்கி விட்டன.
அப்படி நம்புகிறார்கள்
இந்த நம்பிக்கை பொய்யாகி விடக் கூடாதே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான் எமது பிரார்த்தனை
இந்த நம்பிக்கை நிஜமாக வேண்டுமானால்..
ஒவ்வோர் இனமும், மதமும்- ஏன்
நானும், நீயும் - ஒருவரையொருவர்
புரிந்து கொள்ள வேண்டும்.
புது உணர்வு பிறக்க வேண்டும்.
அமைதியின், சமாதானத்தின் வேந்தர் இயேசு
கொண்டு வந்த மீட்பின் செய்தியும் இதுதான்
இயேசு குழந்தையாகப் பிறந்த போது
படித்த ஞானிகளும், படியாத பாமரமக்களும்
அவரில் ஒன்றிணைந்தனர்.

இதே போன்ற உறவுகளும், இணைப்புக்களும்
சமுதாய அமைப்புக்களில் மலர,
மலரவைக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.
எனது இனம் மட்டுமல்ல அடுத்த இனமும்
வாழவேண்டும் என எல்லா மக்களும் உணரவேண்டும்.
நானும் வாழ வேண்டும், நீயும் வாழ வேண்டும் என
நீயும், நானும் உணர வேண்டும்.
ஒருவரையொருவர் அடக்கி வாழ முற்பட்டதால்,
ஏற்பட்ட அனர்த்தங்கள்
இலங்கையில் கறை படிந்த காவியமாகி விட்டன.

பிறக்கப் போகும் புதிய ஆண்டிலாவது
புதிய காவியமொன்றை ஏன் நாம் படைக்கக் கூடாது?
இக் காவியத்தைப் படைத்து
கள்ளமற்ற உள்ளத்தோடும்,
திறந்த மனத்தோடும்
நாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்
கறை படிந்த அத்தியாயங்கள் முடிக்கப்பட்டு
கலவரமற்ற சமுதாய நிகழ்வுகளால்
புதிய அத்தியாயங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்

கூடி விட்டோம், குலையமாட்டோம்.
கூடியவரையில், குலைந்து கிடப்போரை
ஒரு குடையின் கீழ் கொண்டு வருவோம் - என்று
செயல்பட்டால்
கூடிய விரைவில் நாம் காணப் போவது,
புதிய வானமும், புதிய பூமியுமே

**"X" mas நல்வாழ்த்துக்களுடன்**
**புதிய வருட நல்லாசீர்களும் உங்களுக்கே"**

ஆசிரியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயரின் வாழ்த்துச் செய்தி



ஆண்டவராகிய 'மெசியா' என்னும் மீட்பர் உங்களுக் காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். எல்லா மக்களுக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொருந்துவதாகவும், நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ள இந்நற்செய்தி போரினாலும், அழிவுகளினாலும், இடப்பெயர்வுகளினாலும், இன்னும் பல்வேறு துன்பங்களினாலும் வாடிநிற்கும் மக்களுக்கு ஆறுதல் தருவதாக உள்ளது.

இள ஞாயிறு நம்பால் எழுந்துவந்துள்ளது.

விடிவு நம்மைத் தேடி வந்துள்ளது. ~ எனவே நம் துன்பங்களுக்கும், கவலைகளுக்கும், தோல்விகளுக்கும், ஏமாற்றங்களுக்கும் முடிவு நெருங்கிவிட்டது என்ற மீட்புச் செய்தி நமது ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துவின் பிறப்பினூடாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, எழுந்துள்ள ஒளி நம்மில் பரவ நாம் வழிவிட வேண்டும்; பிறந்துள்ள மீட்பருக்கு நாம் இடம் கொடுக்க வேண்டும்.

கடந்த இரு தசாப்தங்களாக வன்முறைகளாலும் இனவாதங்களினாலும், போரினாலும், பகையாலும், பழிவாங்கலாலும் நம்மை நாமே இருளாக்கிக் கொண்டோம். நீதியை நோக்கிய நகர்வுக்குப் பிடிவாதங்களினால் கடிவாளமிட்டுக் கொண்டோம். சமரசங்காண எடுக்கப்பட்ட முயற்சிகளெல்லாம் சந்தேகங்களினாலும், புரிந்து கொள்ளாமையாலும், விட்டுக் கொடுக்காத போக்குகளினாலும் முடமாகிப் போயின. தாங்க முடியாத சுமைகளைச் சுமந்து அனைவரும் அனைத்தும் அழிந்து போவதை விட ஒருவரை ஒருவர் புரிந்து, நியாயமாக விட்டுக் கொடுத்து அனைவரும் சமாதானமாக வாழ்வோம் என்னும் சிந்தனை நமக்குள் முனைப்புப் பெறவேண்டும்.

நமதாண்டவர் இயேசுக்கிறீஸ்து தமது தெய்வீகப் பெருமைகளை எல்லாம் நமக்காகத் துறந்து, விட்டுக் கொடுத்து நம்முள் ஒருவரானார். ஒற்றுமைக்கும், சமாதானத்துக்கும் விட்டுக்கொடுத்தல் தேவை என்பதை விளக்க இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

காலத்தின் குறிகளை உணர்ந்து, யதார்த்தங்களைப் புரிந்து நமது சிந்தனைக்கு, வாழ்க்கைக்கு புதிய வடிவம் கொடுக்கின்ற நேரம் வந்துள்ளது. பழையன கழித்து புதியன புகுத்துவது விவேகமானதும் அவசியமானதுமாகும். அதற்கான சூழல் நமது நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் ஏற்பட்டுள்ளது.

நடந்து முடிந்த தேர்தல், போரிலும், வன்முறையிலும் மக்கள் கொண்டுள்ள வெறுப்பை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. சண்டையை விடுத்து சமாதானத்தை முன்னெடுப்போம் என்று கூறியவர்களுக்கே மக்கள் வாக்களித்துள்ளனர். போர் வேண்டாம், சமாதானம் வேண்டும் என்று இந்நாட்டின் பெரும்பாலான மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். அதற்குச் செவி சாய்க்க வேண்டியது பொறுப்புள்ளவர்களின் கடமையாகும். மக்களிடம் எழுந்துள்ள இம்மனநிலையைப் பக்குவமாகக் கட்டிக் காத்து இந்நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். ஆயுதக்கலாசாரத்திலும், போர் மனோபாவத்திலுமிருந்து நாம் விடுபட்டு ஒப்புரவு, மன்னிப்பு, நல்லிணக்கம் போன்ற மனித நாகரிகத்துக்கு இயைந்த மனப்பாங்குகளை வளர்த்துக் கொள்வது அவசியமாகும். ஆகவே, முடிந்து போனவைகளை நினைத்து பகைமை பாராட்டாது புதிய சிந்தனையோடும், பொறுப்போடும் புதிய ஆண்டிலே நாம் அடியெடுத்துவைப்போம். "கடவுள் நம்மோடு"என்ற உறுதியான விசுவாசத்தோடு சமாதானப் பாதையில் துணிந்து நடந்து செல்வோம்.

கிறிஸ்து கொண்டுவந்த சமாதானம் நம் உள்ளங்களையும் இல்லங்களையும் நமது நாட்டையும் நிரப்புவதாக! **அனைவருக்கும் நத்தார்-புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**✝ பேரருள்திரு. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
*ஆயர், திருமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதத்துவப் போரின் முதல் மாவீரன்



கு. ச. பிரியங்கனி
தாளையடி

"வார்த்தை மனுவுருவானார்" இது யேசுவின் பிறப்பைச் சுட்டி நிற்கும் விவிலியக் கூற்றாகும். இறைவனின் திருவார்த்தை மனித உருக்கொண்டு உலகிற்கு வந்தது. இதை நாம் இன்று ஒளிவிழா, நத்தார், யேசுவின் பிறப்பு விழா, கிறிஸ்மஸ் எனப் பல பெயர்களில் கொண்டாடுகின்றோம். அன்று ஒதுக்குப் புறமான மாட்டுத்தொழுவத்திலே ஆடுகளினதும், மாடுகளினதும் சாணமும், சலமும் துர்நாற்றம் வீச, பழைய துணிகளிடையே சுற்றப்பட்டு சூழ நின்ற குளிரின் இடையேயும், வைக்கோல் கந்தைகளின் சிறிய கணகணப்பில் அவதரித்த இறைமகனுக்கு இன்று கோலாகலமான விழா எடுப்பு. நத்தார் பண்டிகையின் களை உலா வரத்தொடங்கிவிட்டால் வீசும் காற்றிலும் அதன் மணம் கலந்து விடும். சவுக்கு மரங்கள் சிலவற்றிற்கு பாசக் கயிறு எறியப்படும். தத்தம் வசதி நிலைக்கேற்ப மணல் வெளி, புற்றரை, பஞ்சுமெத்தை என சகல இடங்களிலும் பாலன் சொரூபங்கள்! நவீனரக மின் விளக்குகள்!

மண்ணுலகில் அவதரித்த இந்த தேவ மகனுக்கு இத்துணை வரவேற்பு விழா எடுக்கும் நாம் அவரின் வாழ்வுப் பின்னணியை, கொள்கைகளை, தத்துவங்களை. மாதிரிவாழ்வை எந்தளவிற்கு உள்வாங்குகின்றோம்? மனுவுருவான "வார்த்தை" வெறும் வார்த்தையை மட்டும் பேசவில்லை. அந்த வார்த்தையின் பின்னால் உறங்கிக் கொண்டிருக்கும் மனிதத்துவத்தை பேசுகின்றது. இயேசு, சமூகம் எனும் கருவூலத்தில் பலவிதமாகத் தம்மை, தம்வார்த்தையை உருமாற்றிக் காட்டுகின்றார். ஒரு தனிமனிதனாக, இளைஞனாக, தாயாக, தந்தையாக, சோதரனாக, ஆசிரியனாக, போராளியாக இன்னும் பலபல வெட்டு முகங்களில் தோன்றி நம்முடன் பேசுகின்றார்.

கிறிஸ்துவின் வார்த்தைகள் உயிருள்ளது என்று கூறப்படுகின்றது. இதையிட்டு நாம் ஏதாவது சிந்தித்திருக்கிறோமா? அது எப்படி உயிருள்ளது? ஒருவருடைய பிரச்சினைக்கு இறைவார்த்தை ஒன்று நிச்சயமாக அவனுக்குப் பதிலளிக்கின்றது. வார்த்தை ஒன்று, ஆனால் அதனை எந்தப் பிரச்சனைக்காகத் தேடுகின்றோமோ அதற்கு ஏற்ப பதில் தரவல்லது. இதனால் தான் இது உயிருள்ளதாக இருக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் எம்மண்ணின் மனித சமுதாயத்தை எடுத்து நோக்குவோமானால் பிணக்குகளையே எம் வாழ்வுக்கு அத்திவாரமாக்கிக் கொண்டு ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் இன்றைய மனிதன் சிந்தனைப் பெருக்கினாலும், அறிவியல் முதிர்ச்சியினாலும், விஞ்ஞான அழுத்தங்களினாலும் அறிந்தோ, அறியாமலோ மனிதத்துவத்திற்குக் கல்லறை அமைத்து விடுகின்றான். மனிதனுக்காகவே மதங்கள் தோன்றின. எனவே மனிதனை ஆக்கிரமித்துள்ள ஒவ்வொரு பிரச்சனைகளும் பிணக்குகளும் மதரீதியிலும் அவனைத் தாக்குகின்றது. இந்த வகையில், இம்மண்ணில் சமூக, அரசியல், பொருளாதாரச் சிக்கல்களுக்கு கிறிஸ்தவ ரீதியில் விடுவிப்பு எப்படி என்பதை சிந்திப்பது நல்லது.

மனிதத்துவம் புதைக்கப்பட்ட இந்த மண்ணிலே அதை மீட்டெடுப்பதே யேசுவின் முக்கிய பணியாக விளங்கியது. அதற்காக அவர் ஒரு நீதியான, சமாதானமான யுத்தம் ஒன்றை அன்று ஆரம்பித்தார். 12 சக போராளிகளுடன் ஆரம்பித்த இந்த மனிதத்துவ மீட்பு யுத்தமானது, பல நெருக்குதல் மத்தியிலும் தன் பாதையில் திடகாத்திரமான பயணத்தைத் தொடர்ந்தது. இந்த யுத்தத்தின் தேவைபற்றி அங்கு அவர் பிரச்சாரத்தொனியில் கூட பல கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். மலைப் பொழிவுகள், உவமைகள், அருங்குறிகள் வழியாக மனிதத்துவத்துக்கான விடுதலைப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில், அக்கால அரசியல் வாதிகளால் கைது செய்யப்பட்ட இயேசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றார். வசைக்கு மேல் வசைகள், குற்றச்சாட்டின் மேல் குற்றச்சாட்டுக்கள், அவர்மீது தொடுக்கப்பட்டது. சமுதாயச் சாக்கடையில் இருக்கக்கூடிய போலிமுக மூடிகளான சிலரால் அவர் இந்நிலைக்குத் தள்ளப்பட்டார். சகபோராளி யூதாஸ் துரோகியாக மாறினான். இராயப்பர் கட்சி மாறினார். மறுதலித்தார். இவ்வளவிற்கும் இயேசு விசாரணையில் உறுதியுடன் பதில் தருகின்றார். கடைசித்துளி இரத்தத்தையும் மனிதத்துவ விடுதலைக்காக சிந்த தயாராக நின்றார். அதிகமான குற்றச்சாட்டு, கேள்விகளுக்கு மௌனமாக இருந்து அகிம்சை வழியில் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

இத்தகைய இந்த விடுதலை வீரன், எதிரிகளால் தாக்கப்பட்டு, உடைக்கப்பட்டு, கீறிக்கிழிக்கப்பட்டு, வஞ்சம் தீர்க்கப்படுகின்றார். இறுதி வேளையிலும் அவ் வீரன், '**இவர்கள் அறியாது செய்கின்றார்கள் இவர்களை மன்னியும்**' என தந்தையை வேண்டி தன் மனித நேயக்கொள்கைகளுக்காக உயிர்கொடுத்து அச்சிலுவை மரத்திலே வீர மரணமடைகின்றார். அப்போது இயற்கை அழுதது, அன்றைய மானுடம் சிரித்தது, பூமி ஒருகணம் அதிர்ந்தது, மனிதத்துவப் போரின் முதல் மாவீரன் இயேசுவின் இறப்பால் சிலுவை உயிர்பெற்றது. இயேசு அன்று புதைக்கப்படவில்லை; விதைக்கப்பட்டார். அதனால்தான் சின்னப்பர் என்றும், முடியப்பர் என்றும் எத்தனையோ ஆன்மீகப் போராளிகள் அவரது புதிய கல்லறையிலிருந்து முளைவிட்டு இன்று பரிசுத்த பாப்பரசர், ஆயர், குருக்கள், என இவ்யுத்தம் உலகளாவிய ரீதியில் நடைபெறுகிறது.

அன்று மனிதர்களிடம் கையளிக்கப்பட்ட இயேசு இன்றும் மனிதராகிய எம் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடவில்லை. எம் செயல்கள் ஒவ்வொன்றும் அவருக்குக் கசையடியாக, முள்முடியாக, ஈட்டியாக, ஆணியாக, சித்திரவதை செய்கின்றது. இத்தனைக்கும் பின்பும் '**இவர்கள் அறியாது செய்கின்றார்கள் ...**' அவரது இந்த வார்த்தை மனித விடுதலையை அவர் இன்றும் கைவிடாமல் உறுதியாக நிற்பதைக் காட்டுகின்றது. 20 நூற்றாண்டுகளாக நடைபெற்றுவரும் இவ்யுத்தத்தினை நாம் எப்பொழுது முடிவுக்குக்கொண்டுவரப்போகின்றோம். எம் உள்ளங்களில் அன்பு, பகிர்வு, பணிவு, ஒற்றுமை, தாழ்ச்சி போன்ற நற்குணங்கள் பெருகி உண்மையான மனிதத்துவத்தை உணர்ந்து முழு மனித ஆத்மீக விடுதலையை அடையும்போது இத்தனை நூற்றாண்டுகளாக அவ்விடுதலைக்கு சிந்திய இரத்தங்களுக்கு நாம் புதிய பரிமாணத்தைக் கொடுப்பவர்களாக மாறுவோம்.

## மனம் ஒரு குரங்கு!

கொடை வள்ளல் கர்ணன் தங்க எண்ணெய்க் கிண்ணத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிக்கத் தயாராகி கொண்டிருந்தான். அப்போது கர்ணா 'ஏதாவது தர்மம் கொடு' என்று பிராமணர் கேட்டார். கர்ணன் உடனே இடது கையிலிருந்த தங்கக் கிண்ணத்தைக் கொடுத்தான். பிராமணர் பதறி 'கர்ணா இடது கையால் தர்மம் செய்தால் தர்மம் செய்தாருக்கு கஷ்ரம் வரும்; கையை கழுவிவிட்டு வலது கையால் கொடு' என்றார்

அதற்குக் கர்ணன் 'பிராமணரே! எனக்கும் அந்த சாஸ்திரம் தெரியும். ஆனால் நான் இடது கையிலிருந்து வலது கைக்கு மாற்றுவதற்கு முன் எனது மனசு மாறினாலும் மாறும்; அதனால் தான் என்ன கஷ்ரம் வந்தாலும் பரவாயில்லையென்று தர்மத்தை தாமதியாமல் செய்கின்றேன்' என்றான்

*பாலையூற்று மரியதாஸ்*

காதலுக்காக ஏங்கியிருந்த அம்பிகாபதிக்குக்காதல்கிடைத்தது. வெற்றிக்காக ஏங்கியிருந்த நெப்போலியனுக்கு எலினாத்தீவு கிடைத்தது. எதற்காகவும் ஏங்காமலிலுந்த புத்தபிரானுக்கு போதி மரத்தடி கிடைத்தது அதிலிருந்து ஞானம் உண்டானது.



# அக்கினிக் குஞ்சு

மின்வெட்டுக்களைப்
பொய்யாக்கி விட்டு
கண்கூச
மின்னல் வெற்றிகொள்ளா
ஒளித்தணல்,
அதுவும்
மிக்கு குளிர்தணல்.
சருகுகூடக் கருகாமல்
வந்திறங்கியது,
வைக்கோற் பரப்பில்........

இப்போதும்
போர்க்கொடிகளை மட்டும்
உயர்த்திப் பிடிக்கும்
மாளிகைகள் நிறைந்த
அம் மண்ணில்
வெள்ளைக் கொடிகளைப்
பறக்கவிட்டது
அந்தக்
குஞ்சு பிறந்த
குடில் மட்டும்தான்.

அந்த்ராக்ஸைவிட
அவசரமாய்
கொல்லத் துடித்த
மனித கிருமியால்
அதைவிட அவசரமாய்
அத் தணல்
புறப்பட வேண்டியிருந்தது.
புனிதப் போருக்கல்ல
முப்பது ஆண்டுகளில்
பற்றவைக்க வேண்டிய
தீயை
இப்போதைக்கு
அணையாமல் காத்துக்கொள்ள

என்னும்
ஈராயிரம் ஆண்டு கழித்தும்
அதே
அக்கினிக் குஞ்சை
அணைக்க வந்தவர்களின்
தொடர்ச்சியாய்
இன்று
நானும் நீயும் .....!

இனியேனும்
கரம் சேர்ப்போம்
என்றும் அணையாத
அத்தணலில்
நாமெல்லாம்
சுட்டெரிந்து சுத்தமாக

A.அமல்ராஜ்
மூதூர்



# பயனில்லாப் புதிய ஆண்டே பாருக்கு நீ வரவேண்டாம்

எத்தனை வருடம் வந்தும்
எம்நிலை உயர வில்லை!
இத்தரை வாழ்வு தீயாய்
எரிகிற தேயிந் நாட்டில்!
யுத்தமே தீர்வா யானால்
உருப்படு வதுதா னென்றோ?
நித்தமும் அழிவே கண்டு
நிம்மதி இழந்தோம் நாங்கள்!

புதிதென வருடம் வந்தும்
புரிவதோ ஒன்றும் இல்லை!
கொதிக்கிற நீராய் வாழ்வு
கூட்டுதே துன்பந் தன்னை!
விதியென நொந்து கொள்வோம்
வேறுதான் என்ன செய்ய?
உதிக்கிற ஆண்டி லாச்சும்
உதிக்குமா நல்ல தீர்வு?

தேர்தலால் எம்.பி. மாறும்
தேடிநாம் கொண்டோம்! ஆனால்
தீர்ந்தபா டில்லை துன்பம்
தேய்பிறை யாச்சு வாழ்வு!
ஊர்முழு தும்தான் சண்டை
உருப்பெற வில்லை அமைதி!
யாரிடம் சொல்ல? அவலம்
எங்களைத் தொடரும் நிலையை?

வந்துதான் என்ன செய்ய?
வருடமாய்ப் புதிய பிறப்பும்?
தந்ததா உரிமை? வாழ்க்கைத்
தரந்தான் உயர்ந்து உளதா?
நிந்தனை கூடி எங்கள்
நிம்மதி யழிக்க மீண்டும்
வந்திட வேண்டாம் ஆண்டே
வருவதால் பயனே
இல்லை!

எம். எல். எம் அன்ஸார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு என்னும் பெயர்



**'யேசு'** என்பது எபிரேய மொழிப் பெயர் 'மீட்பவர்' என்று பொருள். ஏனெனில், அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பவர். *(மத் 1:21)*

ஆங்கிலேயர் 'ஜீஸஸ்' என்று அழைக்கின்றனர் 'இரட்சகர்' என்று பொருள். 'இரட்சகர்' என்றால் காப்பவர், மீட்பவர், விடுவிப்பவர், புதுவாழ்வு தருபவர், மன்னிக்கிறவர், குணப்படுத்துகிறவர், சமாதானப் படுத்துகிறவர் என்று பொருள். "ஜீஸஸ்" என்பதைத் தமிழில் "யேசு, சேசு நாதர்" என்று முன்பு கூறினார்கள்.

"இயேசு" என்பது IESOUS' என்ற கிரேக்கப் பெயரிலிருந்து 'YESHUA" யோசுவா என்ற ஹீப்ரு பெயரிலிருந்தும் வந்தது. "அபிசேகம் பண்ணப்பட்டவர்" என்பது பொருள். இப்பெயரைத் தமிழில் ஏசு, ஏசுநாதர், யேசு என்றெல்லாம் எழுதினார்கள். இப்பொழுது 'இயேசு' என்று செல்லப்படுகிறது; எழுதப்படுகிறது.

இயேசுநாதர் (நாதர் முடிமேலிருக்கும் நல்ல பாம்பே – பாம்பாட்டிச் சித்தர்) கர்த்தர் (பார்ப்பாரைக் கர்த்தர் பறையறைப் போலவே தீர்ப்பாய்ப் படைத் தாரடி குதம்பாய்" –குதம்பாய் சித்தர்) என்ற பெயர்கள் தமிழ் வழக்கையொட்டி ஏற்பட்டவை. திருவரங்கம் கோவிலிலே "கர்த்தர்" அரங்கம் என்னும் ஒரு மேடை உள்ளது.

"மகாபவிஸ்யம்" என்ற வடமொழிப் புராணம் யேசுவை ஈசா (issa) என்று கூறுகிறது. அரேபியரும் ஈசா (issa) என்றே சொல்லுகிறார்கள். (திருக்குரான் 'ஈசாநபி' என்று கூறுகிறது)

'ஈசுவரன்' (எல்லாவற்றையும் அடக்கி ஆளுபவர்) என்ற வடமொழிச் சொல்லே 'ஈசா' என்று ஆயிற்று. யேசு ஒரு கன்னியின் வயிற்றில் அவதரித்தார். சிலுவையில் அறையப்பட்டார். அவர் தேவதூதர் என்று இப் புராணம் கூறுகிறது. ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இப்புராணத்தில் இயேசுவின் வரலாறு பிற்காலத்தில் இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று அமெரிக்காவைச் சேர்ந்த அருள் திரு ஆல்வில் வி.பி. ஹார்ட் (KRISHNA CONSCIOUSNESS AND CHRISTIANITY – நியூயோர்க் 1992) கருதுகிறார்.

தமிழில் முதல் கிறிஸ்தவ இலக்கியமான 'தம்பிரான் வணக்கம்' (1577) இயேசுவை 'இயேசுக் கிரீசித்து' என்று கூறுகிறது.

இயேசுவை 'மேசியா' என்று எபிரேய மொழியில் அழைத்தார்கள். கிரேக்க மொழியில் 'கிறீஸ்தோஸ்' என்றார்கள். இரண்டுக்கும் 'அபிஷேகம் செய்யப்பட்டவர்' 'அருள் பொழிவு பெற்றவர்' என்று பொருள். அந்நாளில் இஸ்ராயேல் மன்னர்கள் எண்ணெய் அபிஷேகம் பண்ணப்பட்டு அருள்பொழிவு செய்யப்பட்டார்கள். அவர்கள் 'அபிஷேகம் செய்யப்பட்டவர்கள்' 'அருள்பொழிவு பெற்றவர்கள்' என்று சொல்லப்பட்டார்கள்.

இயேசுவுக்கும் சிறப்பான முறையில் இப்பெயர் கொடுக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் எசாயா சொன்னது தம்மிடம் நிறைவேறியதாக இயேசுவே அறிவித்தார். 'ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்'

*(லூக் 4:18)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ நடைமுறைகளை முன்னெடுத்துச்செல்ல இளைஞருக்கு ஓர் அறைகூவல்

திரு. R. ஸ்ரான்லி பிரபாகரன் B.A. *Dip. in Ed, CY.A* ஆலோசகர்

உலகைக் கட்டியெழுப்புவதில் இன்றைய இளைஞர் தியாக சிந்தையுடன் செயற்பட முன்வர வேண்டும். ஒரு சமுதாயத்தில் பராமரிக்கப்படுபவர்களாக வயோதிபர்களும், சமுதாயத்தை வழி நடத்துபவர்களாக அனுபவசாலிகளும், சமுதாயத்தை செயற்றிறன் மிக்கதாகவும் உயிரோட்டமுடையதாகவும் இயங்கவைப்பவர்களாக, இளைஞர்களும், சமூகத்தில் அறிமுகமாகுபவர்களாகச் சிறுவர்களும் இருக்க வேண்டும். இத்தகைய திட்டமுடைய சமுதாயத்தில் சமநிலை குலைந்துபோக சந்தர்ப்பமில்லை. அச் சமூகம் தன் பொறுப்புக்களை, நிதானத்துடனும் முழுமையாகவும் நிறைவேற்றும். இந்தச் சூழ்நிலையில் இளைஞர்களும், தமது பங்கை உணர்ந்து செயற்பட முன்வருதல் காலத்தின் தேவையாகும்.

எக்காலத்திலும் சமூகம் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் அது சரியான பாதையில் இயங்குகின்றதா, என்பதை இனங்கண்டு இயக்க இன்றைய இளைஞனுக்கு ஓர் அறைகூவல் விடப்படுகின்றது. எந்தச் சவாலையும் துணிவோடு எதிர்கொள்ளும் இளைஞர்களுக்கு இந்த அறை கூவல் சுவாரசியமானதாகவே அமையும். உலகின் எல்லாத் துறைகளிலும் இளைஞரின் பங்களிப்பு இன்று ஓர் இன்றியமையாத தேவையாகின்றது. திருச்சபையும், தனது புதிதாக்கலில் இளைஞரின் பணியை நாடிநிற்கின்றது. கிறிஸ்தவ விழுமியங்களுக்குச் சரியான அர்த்தம் கொடுத்து, ஆன்மீக வாழ்வை இழந்து கொண்டிருக்கும் மக்களை மீட்டெடுக்க இளைஞர் முன்வரவேண்டும்

இயேசு, கிறிஸ்தவ நெறிமுறைகளை உருவாக்குகின்ற போது மனிதகுலம் அதன் இறைச் சாயலை மீண்டும் பெற்றுக்கொள்ளும் வகையில்தான் உருவாக்கினார். மனிதன் தன் வாழ்வின் உட்பொருளை அறிந்து கொள்ள பல விடயங்களைக் கற்பித்தார். உலகின் மாந்தரை இயேசுவின் பாதையில் நல் வழிப்படுத்த எண்ணிய திருச்சபையும், இறைவெளிப்பாடு, இறைவனை மனிதன் சென்றடைதல் தொடர்பான பல விடயங்களைக்காலத்தின் தேவைக்கேற்ப அறிமுகப்படுத்திக் கொண்டு வருகிறது. மனிதனின் மத வாழ்வை அவனது சமுதாயத்தின் பின்புலங்களோடுதான் திருச்சபை தூண்டி வருகின்றது. இவ்வுலகப்பார்வையினால் புரிந்துகொள்ள முடியாத இறைவன் பற்றிய அனுபவங்களை மனிதன் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் ஒழுங்கமைக்கின்ற போது மதவியல் நடைமுறைகள் உலகிற்குப் புலப்படும் வகையில், உலகினரால் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் உருவெடுக்கின்றது. இறையனுபவங்களை புரிந்து கொள்ளுவதில் சிலர் தவறுகின்ற போதுதான் கிறிஸ்தவ நடைமுறைகள் பிழையான பாதையில் செல்லுகின்றது. இன்றைய இத்தகைய சூழ்நிலையில் இளைஞர் பெரும் பங்காற்றுகின்றனர் என்பது இவ்விடத்தில் குறிப்பிடப் பட வேண்டியதொன்றாகும்.

இயேசுவின் பிறப்பு தினம் ஒவ்வோர் ஆண்டும் டிசெம்பர் மாதம் 25ம் திகதி கொண்டாடப்படுகிறது. இது ஒரு சமூக நிகழ்வு என்கின்ற வகையில் எத்தகைய இடத்தைப் பெறுகின்றது என்பது ஆராயப் படவேண்டிய ஒரு விடயமாகும். கிறிஸ்து பிறப்பு உண்மையில் ஒரு கொண்டாட்டமா? அல்லது வழிபாடா? அல்லது அர்த்தமுள்ள ஒரு ஞாபகார்த்த நாளா? எனும் மூன்று ஆழமான வினாக்களை எழுப்பி இதனை ஆராயலாம். கிறிஸ்து பிறந்த இன்றைய 2000ஆண்டுகளுக்கு முன்பு தொடக்கம் இன்று வரை, கிறிஸ்துவின் பிறப்பு அர்த்தப்படுத்தப்பட்டு வருவதை அடிப்படையாக வைத்துத்தான் இந்த மூன்று வினாக்களும் எழுப்பப்படுகின்றன. மேற்சொன்ன இந்த மூன்று அம்சங்களும் கிறிஸ்துவின் பிறப்பு தொடர்பாக இணைந்து நின்று அர்த்தம் தருவதாக அமைகின்றது. இவ்வாறு அர்த்தம் தரவேண்டிய இந்த மூன்று அம்சங்களும் சிதைந்து போவதையும் நினைவுகூர வேண்டும்.

01. கிறிஸ்து பிறப்பு ஒரு கொண்டாட்டமாக...

தேவமகன் மண்ணில் வந்தார் என்ற வகையில் இது ஒரு மகிழ்ச்சியான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் '...... இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்' (லூக் *2:10*) என வானதூதரால் இடையர்களுக்கு வழங்கப்பட்ட நற்செய்தி பல துறைகளிலும் பாதிக்கப்பட்டோருக்கு மகிழ்ச்சியும், ஆறுதலும் தருகின்றது என்பதனால், கிறிஸ்து பிறப்பு கொண்டாடப்படவேண்டிய ஒன்றாகும்.

02 கிறிஸ்து பிறப்பு ஒரு வழிபாடாக ..........

இறைவனைப் புகழ்தல், நன்றி கூறுதல், இறைவெளிபாட்டிற்கு கவனம் செலுத்துதல், மனிதனின் இயலாமை/பாவநிலை என்பவற்றை நினைத்து மனம் வருந்துதல், இறையருளை வேண்டுதல் என்பன வழிபாட்டில் உள்ள விடயங்களாகும். இயேசுவின் பிறப்பு ஒரு இறை பிரசன்னமாகும். ஆதலால் மேற்சொன்ன வழிபாட்டுக்குரிய விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

03. கிறிஸ்துவின் பிறப்பு ஓர் அர்த்தமுள்ள ஞாபகார்த்த நாளாக ........

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிறிஸ்துவே ஒளி, அவரே முன்மாதிரியான இலக்கு. ஆகவே அவரது பிறப்புநாள் நினைவு கூரப்படவேண்டியது. ஒவ்வொரு காலகட்டங்களிலும், புதியபுதிய நோக்குகளுடன் உலகிற்கு பறைசாற்றப்படுகின்றது. வளர்ந்துவரும் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தப் படுகின்றது.

கிறிஸ்துவின் பிறப்பு மனித வரலாற்று நிகழ்வாகும். அதேவேளை தெய்வீகச் செயலாகவும் உள்ளது. இதில் இரண்டு விடயங்களைக் காண்கின்றோம்.

ஒன்று மனிதனும் அவனை உருவாக்கியதும், அவனால் உருவாக்கப்பட்டதுமான மனிதச்சூழல்.

இரண்டாவது இறைவனின் இயல்புகளும், இறைத்திட்டம் அடங்கப் பெற்ற இறையாட்சி. அல்லது இறை பிரசன்னம்.

இந்த இரண்டு அம்சங்களின் சங்கமிப்புத் தான் கிறிஸ்தவ மத வாழ்வின் நடைமுறைகளாகும். எனவே மனிதச் சூழலில் இருந்து இறைபிர சன்னத்தை நோக்குகின்ற மனிதன் தெய்வீகச் செயலை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் மனிதச் சூழலில் இருந்துதான் மத நடைமுறை களை மேற்கொள்ளுகின்றோம். இந்த மத நடை முறைகளின் இலக்கு இறை பிரசன்னமே. ஆனால் கிறிஸ்மஸ் போன்ற தினங்களில் அந்த இலக்கை விட்டு அது தவறிவிடுகின்றது. புதுமையையும் மகிழ்ச்சியான வாழ்வையும் விரும்புகின்ற இளைஞர் இதனுள் அகப்பட்டு விட்டதை நாம் காணுகின்றோம்.

இயேசு இவ்வுலகில் வித்திட்டுச் சென்ற கிறிஸ்தவம் அதன் கத்தோலிக்கம் என்ற பண்பின் காரணமாக நாடுகளையும், கண்டங்களையும் இனங்களையும் கடந்து இன்று வளர்ந்துவிட்டது. பரந்துகிடக்கின்ற மனித சமுதாயத்தில் வாழ்வியல் தொடர்பான அம்சங்களில் மதம் இன்றியமையாததாகச்செயற்படுகின்றது. கிறிஸ்தவம் சமய வாழ்விற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. உலகம் சமய வாழ்விற்கு முன்னுரிமை கொடுப்பதற்கும், கிறிஸ்தவம் முன்னுரிமை கொடுப்பதற்கும் இடையே பாரிய வேறுபாடு உண்டு. உலகப்பாங்காக சமய வாழ்வை வாழ்கின்ற போது பலம், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல், அற்புதங்களை விரும்புதல் என்பனதான் வாழ்வில் சமய நடைமுறைகளையும், சமய நம்பிக்கைகளையும் நிலைநிறுத்தி வைத்திருக்கின்றன. கிறிஸ்தவ சமயத்தை பொறுத்தவரை சமய நடைமுறைகள் இறை வெளிப்பாட்டின் அடிப்படையில் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளன. அவ்வாறாயின் உலக நடை முறையை முற்று முழுதாக கிறிஸ்தவ வழிபாடுகள் புறக்கணித்து விட்டது என்பது பொருளல்ல. ஏற்கனவே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று உலகோர் விளங்கிக் கொண்ட இறை அனுப வத்திற்கு ஏற்ப வழிபாடுகள் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் இளைஞர் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால் நிலையில்லாத, இறைவன் விரும்பாத விடயங்களின் பக்கம் தாமும், சமுதாயமும் சரிந்து போகாத வண்ணம் விழிப்பாய் இருத்தலாகும். முற்போக்குச் சிந்தனையுடைய இளைஞர் இது தொடர்பாக செயற்களங்களில் இறங்க வேண்டும்.

**இளைஞர் செய்யவேண்டியது என்ன!**

01. உலகு தொடர்பான விடயங்கள் எந்தளவிற்கு அவசியமானவை என்பதை இனம் கண்டு தேவையான அளவிற்கு மட்டுமே அச்செயல்களில் ஈடுபட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. கல்வி, தொழில், பண்பாடு, முதலான துறைகளின் அர்த்தங்களையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயற்படல், இவற்றிற்கு கிறிஸ்தவம் எத்தகைய அர்த்தங்களைக்கொடுக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

03. கிறிஸ்துவையும், கிறித்தவ மத விழுமியங்களையும் அறியாத மனிதர்களுடன் பழகும்போது அடிப்படைக் கிறிஸ்தவ விழுமியங்கள் அவர்களுக்கு பிழையான அர்த்தங்களைக் கொடுக்காமல் பார்த்துக் கொள்வதோடு அது தொடர்பான சரியான விளக்கங்களைக் கொடுத்தல்.

04. கிறிஸ்மஸ் தினம் என்றவுடன் அது ஓர் உலகியல் மகிழ்ச்சிக்குரிய நாள் என்பதை எண்ணும் மனநிலையை ஒவ்வொரு இளைஞரும் மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டு அது விண்ணக உண்மையை எமக்கு உணர்த்தும் ஓர் அம்சம் என்பதை மனதில் உறுதியாக பதித்துக் கொள்ள வேண்டும்.

05. பழைய மரபுகளில் ஸ்தம்பித்துப்போன சில நடைமுறைகளுக்குப் பதிலாக புதிய சமூகத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டாக்கத்தக்க, சமூகத்தால் உள்வாங்கக் கூடிய வழிபாட்டு அம்சங்களை நடைமுறைப்படுத்துதல்

06 உலகியல் பாங்கான அர்த்தங்களோடு கிறிஸ்துவின் பிறப்புக்கு அர்த்தம் கொடுக்கும் கூட்டத்தினரை இனங்கண்டு அவர்களோடு அர்த்தமுள்ள உரையாடலை நிகழ்த்தி சரியான பாதைக்கு அழைத்துச் செல்லல்.

அடுத்து உலகை ஆள இருப்பவர்கள் இன்றைய இளைஞரே. ஆதலால், அவர்கள் இன்றே செயற்பட வேண்டியவர்கள். திசைமாறிச் செல்லும் கிறிஸ்தவ நடைமுறைகளுக்கு அடிப்படை அர்த்தத்தை மீண்டும் பெற்றுத்தந்து புதியதும், அமைதியானதுமான உலகைக் கட்டியெழுப்ப இளைஞராகிய நாம் முன்வருவோம்.

## தொண்டன் வாசகர்களே! ஆதரவாளர்களே!

உங்கள் ஆதரவுக்கும், அபிமானத்துக்குமுரிய தொண்டன் வரும் பெப்ருவரி மாதத்துடன் முப்பத்தினான்காவது ஆண்டில் காலடி எடுத்துவைக்கின்றது.

பத்திரிகையாகப் பிறந்து, சஞ்சிகையாக உருமாறி மூன்று தசாப்தங்களைக் கடந்து வெளிவந்து கொண்டிருக்கும் தொண்டன், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட சஞ்சிகையானாலும் மறைமாவட்ட எல்லைகளைக் கடந்தும், கடல்தாண்டியும் பக்கங்களை விரிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு சஞ்சிகை வெளியீடு என்பது எத்துணை சிரமமானதும், சுமை மிகுந்ததுமான பணி என்பது அறிந்தவருக்குப் புரியும். நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் தொண்டனுக்கான உற்பத்திச் செலவும் உயர ஏறிக்கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் பல ஆயிரங்களை நட்டங்களாக்கித்தான் தொண்டன் உங்கள் கைகளை வந்தடைகின்றது.

மறைப்பணியுடன் சமூக, கலை, இலக்கியமும் வளர என தனது இலக்கை விரித்துக் கொண்டுள்ள தொண்டன் சஞ்சிகைக்கு பலதரப்பட்ட வாசகர்களும் உண்டு என்பது மகிழ்ச்சி தருவதுதான். ஆனாலும் தொண்டனின் இருப்பும், வளர்ச்சியும் வாசகர்கள், விற்பனையாளர்கள் எழுத்தாளர்கள் தொடர்ந்து வழங்கும் ஆதரவிலும், உற்சாகத்திலும் தான் தங்கி உள்ளது.

தொண்டன் வாசகர் பரப்பை இன்னும் விரிவுபடுத்துவதோடு, புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தும் நிலுவைகளை ஒழுங்காகச் செலுத்தியும் உங்கள் அதிகரித்த ஆதரவைத் தொடர்ச்சியாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

**தொண்டன் உங்கள் சஞ்சிகை**

**ஆதரவு தாருங்கள்!**
**தொண்டன் வளர எமக்குத் தோள் கொடுங்கள்!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## ஜீவாவும் பட்டமும்

தனியொரு மனிதனாக, விடாமுயற்சியுடன் மல்லிகை சஞ்சிகையை வெளியிட்டுவரும் 'மல்லிகை ஜீவா' அவர்கள் பாராட்டிற்குரியவர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. பல்வேறு பிரச்சினைகள், யுத்தமுனைப்புகள் என்பனவற்றின் மத்தியில் 'வியாபாரத்தன மற்ற' மல்லிகையை தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதானது ஓர் அசுர சாதனைதான். அத்துடன் இதழின் 'இலக்கியத்தரத்தையும் தொடர்ந்து அவர் பேணிவருவது பற்றியும் பலரும் பாராட்டக் கேட்டுள்ளேன்.

அண்மையில் வெள்ளவத்தை இராமக்கிருஷ்ணமிசன் மண்டபத்தில், கொழும்பு திருமறைக் கலாமன்றத்தினரின் கலை நிகழ்வொன்றில் 'மல்லிகை ஜீவா' அவர்களை நேரில் காணும் வாய்ப்புக்கிடைத்தது. திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்பணி கலாநிதி சேவியர் அடிகளாரைப் பாராட்டி ஜீவா அவர்கள் உரையாற்றினார்கள். இப்பேச்சு அவரை நல்ல உரையாளராகவும் இனம் காட்டியது. இந் நிகழ்வில் மட்டக்களப்பு திருமறைக்கலா மன்றத்தினரின் நாட்டுக் கூத்தும் இடம்பெற்றது. நமது வள்ளுவன், ஹரிச்சந்திரன் ஆகியோரும் அங்கு காணப்பட்டனர்.

ஜீவா அவர்களுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ முதுகலைமானிபட்டம் அளிக்கவிருந்தது. ஆனால் அவர், அதனை ஏற்கமறுத்துவிட்டார். இப்பட்டமளிப்பு பல சர்ச்சைகளை உண்டாக்கி விட்டிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்மீதே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. முதுகலைமானி என்பது கல்வி சார் பட்டம் எனவும் கௌரவ கலாநிதிப்பட்டமே 'ஜீவா' அவர்களுக்கு பொருத்தமானது எனவும் கூறப்படுகின்றது. இவ்வுயர்கல்வி நிறுவனம் ஏன் இவ்வாறு செய்தது?

சாதாரண சங்கங்களும், அமைப்புகளும் வழங்கும் பட்டங்களுக்கே ஆலாய்ப்பறக்கும் மனிதர்கள் மத்தியில் பல்கலைக்கழக மொன்றின் பட்டமே வேண்டாம் என்று ஒதுக்கி விட்ட 'மல்லிகை ஜீவா' அவர்கள் மனதில் உயர்ந்து நின்று மணம் வீசுகின்றார்.

### இன்றைய இலக்கியம்

புத்தாயிரம் ஆண்டு இப்போதுதான் பிறந்தது போன்று இருக்கின்றது. ஆனால் இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டில் நாம் நிற்கின்றோம். காலம் செல்லச் செல்ல இலக்கியமும் மாறுகின்றது. ஆனால் அது குறுகிய வட்டத்தினரைத்தான் சென்றடைகின்றது. நம் தமிழ் இலக்கிய நூல்கள் அனைவரிடமும் செல்ல வேண்டும். அதற்காக ஏராளமான பிரதிகள் அச்சடிக்கப்பட வேண்டும் என்று அர்த்தமில்லை: எமது பதிப்புகளை 'இணையத்தில்'ஏற்ற வேண்டும். நம் நாட்டின் சில தேசிய நாளிதழ்கள் மட்டுமே இணையப்பதிப்பாக வெளிவருகின்றன.

புலம் பெயர்ந்த நம்மவர்கள் உலகெங்கும் தூவப்பட்டுள்ளனர். அவர்கள் எமது சமகால இலக்கியங்களை அறிந்துகொள்ள இணையம் பெரிதும் உதவும். ஆங்கில மொழிக்கு அடுத்ததாக தமிழ் மொழிதான் இணையத்தில் அதிகளவில் வருகின்றது.

சற்றுச் செலவான காரியம் போல் தோன்றும்; ஆனால் வெளியீட்டாளர்கள் மனம் வைத்தால் வேலை சுலபம்; சர்வதேச ரீதியில் நம் படைப்புகள் பரவும்.

### யுகமொன்று உடைகிறது

ஆரையம்பதியூர் ஆ. தங்கராசாவின் 'யுகமொன்று உடைகின்றது' கண்டேன். அழகிய அட்டை: சிறப்பான அச்சுப்பதிப்பு: நல்லதோர் முயற்சி: பதினெட்டுச் சிறுகதைகள் கொண்ட தொகுப்பு: தந்தையின் படைப்புகளை தனயன் நூலுருப்படுத்தியுள்ளார்: பாராட்டுகள்!

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இதுபற்றி ஆராய்வோம். எனினும் கலாநிதி செ. யோகராசா அவர்களின் முன்னுரையில் சிறுகதைகள் இப்போது நூலுருப் பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமே; அதுவும் அவர் அறுபது தொடக்கம் இன்றுவரை இடையறாது எழுதி வருகின்ற எழுத்தாளரென்பது கவனத்திற்குரியவொன்றாகும். ஏனெனில் இந் நீண்டகாலப்பகுதியில் மட்டக்களப்புச் சமூகம் கண்டுள்ள மாற்றங்கள் பலவாகும். ஆக அத்தகைய மாற்றங்கள் இத்தொகுதிகள் கதைகள் மூலம் எந்தளவிற்கு வெளிக்காட்டப்படுகின்றன என்றொரு கேள்வி எழுவதும் அதற்கு விடை காண்பதும் இவ்வேளை யில் தவிர்க்க இயலாததாகி விடுகின்றது

இலக்கிய மஞ்சரி வாசகர்கள் அனைவருக்கும் இனிப்பான நத்தார், புத்தாண்டு, பொங்கல் சோபனங்கள் இதயத்திலிருந்து!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கை நோக்கி............

அஞ்சலீன் F. சுப்பிரமணியம்
92, தபாற்கந்தோர் வீதி,
திருக்கோணமலை

**வா**ழ்க்கை என்னும் பயணத்தில் ஓடிக்கொண்டிருக்கிறோம். அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நம் ஓட்டத்தின் வேகத்திற்கு அளவேயில்லை. ஆம், வாழ்க்கை ஒரு ஓட்டந்தான். 'நமது ஓட்டத்தின் இலக்கு என்ன?' இந்த வினாவிற்கு நாம் அளிக்கவிருக்கும் சரியான பதில் என்ன?

புனித சின்னப்பர் (பிலி 3:14) தனது ஓட்டத்தின் இலக்கை இப்படிச் சொல்கிறார்.' கடந்ததை மறந்துவிட்டு, முன்னிருப்பதைக்கண்டுக் கொண்டு பரிசு பெற வேண்டி இலக்கை நோக்கி முனைந்து ஓடுகிறேன்,'

இப்படி நம்மில் எத்தனை பேர் சொல்லத் தைரியமாயிருக்கிறோம்?

சின்னப்பரின் வாழ்வைச் சற்று உற்று நோக்குவோமாயின் ...........

அவர் தனது நற்செய்திப் பயணத்தின்போது பலமுறை பலவிதமாக எதிர்ப்புகளை ஏற்கவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். குறிப்பாக, ஒருமுறை கல்லடி பட்டவேளை, இறந்துவிட்டதாக எண்ணப்பட்டு நகருக்குப் புறம்பே இழுத்துப் போடப்பட்டவராவர்.

அவர், அடிபட்டார், உதைபட்டார், ஆயினும் அவற்றை யேசுவுக்காக ஏற்றுக்கொள்வதை ஒரு சிறப்பு அம்சமாகக் கருதியிருந்தார்.

அதற்காக அவர் சொல்லும் காரணங்களில் ஒன்று 'உலகை மீட்க வந்த கிறீஸ்துவும் சிலுவையில் பாடுகளை அனுபவித்து மரணம் அடைந்துதான், தன் மீட்ப்புப்பணியை செய்து முடித்தார். இதனால், அவர் எந்தவித வெட்கமுமின்றி, தான் அனுபவித்த அவலங்களைப்பட்டியல் போட்டே காட்டுகிறார்.

'இந்நாள் வரை நாங்கள் பசியாய் இருக்கிறோம், தாகமாயிருக்கிறோம், தங்க இடமின்றித் தவிக்கிறோம், அடிபடுகிறோம், எங்கள் கையால் பாடுபட்டு உழைக்கிறோம், அதே வேளை பிறர் எங்களைப் பழித்துரைக்கும்போது ஆசி கூறுகிறோம், எங்களைத் துன்புறுத்தும்போது பொறுத்துக் கொள்கிறோம், எங்களைத் தூற்றும்போது அவர்களோடு அன்பு மிகுதியால் உறவாடுகிறோம்,' இப்படி புனித சின்னப்பரின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

நாங்களும் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம். இந்த வேளை அடிபடுகிறோம், துன்பப்படுகிறோம், தூற்றப்படுகிறோம். குறிப்பாக எமது மீட்புப் பணியில் சிறப்பாக மறைபரப்புப் பணியில் இவ்வாறு நேரும்போது துன்பத்தின் பங்கினைச் சரிவர உணர்ந்து கொள்கிறோமா?

புனித சின்னப்பர், மக்களை இறைவன் பால் திடப்படுத்தினார். போதிப்பதுடன் நின்றுவிடாது, அந்தப் போதனையைக் கேட்ட மக்களை ஒருங்கிணைத்து முறையான விசுவாசத்தில் நிலைத்திருக்க உறுதுணையாக உழைத்தார் என்று வாசிக்கிறோம். தபத்தோடு கூடிய செபத்தின் மூலம் திடம்பெற்று வரும் துன்பங்களை ஏற்கும் மனப்பான்மையை அவர்களிடம் வளர்த்தார்.

**இக்கால கட்டத்தில்,**
உலகில் நீதிக்கும் அநீதிக்கும், உண்மைக்கும் பொய்மைக்கும், நன்மைக்கும் தீமைக்கும், இடையே நடந்து கொண்டிருக்கும் போராட்டம் நம்மையெல்லாம் திகைக்க வைத்தாலும் .... இந்த மாயைப் போராட்டத்தில் உண்மையும் நன்மையும் வெல்லும் என்பது கண்கூடு. இறுதி வெற்றிக்குத் துணைபுரியும் வகையில், கிறீஸ்து ஆண்டவர் நம்மை வழிநடாத்திக் கொண்டிருக்கிறார் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமேயில்லை.

வரவிருக்கும் மெசியா, நம்மைப் பாவத்தினின்றும் நீக்கி, இறைவனில் நிறைவு காணும் சுபீட்சமான வாழ்வை நிறுவுவார் என்பது உண்மையாகும்.

நமது திருச்சபையாகிய புதிய ஜெருசலேம் விண்ணை நோக்கி பயணத்தைத் தொடர்கிறது.இப்பயணத்தின்போது, பல போராட்டங்கள், துன்ப துயரங்கள், வேத கலாபனைகள், இரத்தகளரிகள் எனபன தவிர்க்க முடியாத ஒன்றாக இடம் பெறும் ஆயினும் 'இதோ கடவுளின் இல்லம், மனிதரிடையே உயர்ந்துள்ளது. 'என்று இம்மானுவேல் கூறுவது போல், விண்ணக ஜெருசலேமில் நாம் அனைவரும் மகிழ்வுடன் வாழ, இம்மண்ணுலக ஜெருசலேம் ஒரு பயிற்சிக்களம் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

விண்ணுலக ஜெருசலேமிற்குச் செல்ல இறைவன் வகுத்துள்ள பாதை நேரான பாதையாகும். அப்பாதையில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கமிருக்கும், இருளிருக்கும், நெருக்க மிருக்கும், வேதனையிருக்கும் அதேவேளை ஒளியிருக்கும் சமா தானமிருக்கும்.

இந்தப்பாதைக்கு நிச்சயம் ஒரு இலக்கு உண்டு.

இறைவனின் அழைப்பை ஏற்ற நாம், இந்தப் பாதையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம். பந்தயத் தில் பரிசுப் பொருளைப் பெற நாம் எந்த அளவிற்கு, சரி யானதும், முறையானதுமான இலக்கை நோக்கி ஓடு வோமோ அந்த அளவிற்கு இறைவனின் இலக்கைக் குறிவைத்து ஓடக்கடவோம்

'வழி இதுவே, இதிலே நடவுங்கள்' *(இசை 30:21)* என்று வலியுறுத்தும் பாதையில் ஒடுவோம். இதில் சிறிதளவு விலகினாலும் நாம் குறித்த இலக்கை அடைய முடியாது ஏமாற்றமடைய நேரிடும். எனவே, எமக்கென்று நியமிக்கப்பட்ட அந்த நேரிய பாதையில் அவதானம், பொறுமை என்ற கவசங்களோடு ஓடக்கடவோம்,

'நான் உனக்கு அறிவு புகட்டுவேன். நீ நடக்க வேண்டிய வழியை நிச்சயம் உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் பார்வையைத் திருப்புவேன்.' *(சங் 31:8)* அந்தப் பார்வையைப் புரிந்து கொண்டு கடவுளின் இரட்சிப்பைத் தேடும்போது, மற்ற யாவும் எமக்களிக்கப் படுகின்றது.

இலக்கை நோக்கி, அவர் பாதையில் நடந்து, செல்லும் பக்குவத்தை இக்காலப் பகுதியில் பெற்றுக் கொள்ளும் தகுதியையும் திடனையும் நாம் கண்ணீ ரோடு கேட்போம்.

அவருக்காகக் காத்திருப்போம்.

கிடைக்கவிருக்கும் பரிசுப்பொருளைப் பெறத் தக்க பயிற்சிகளைப் பெறுவோம்.

அதற்காக கிறீஸ்து நமக்கு ஏற்படுத்தியுள்ள ஒழுங்கு முறைகளை அறிய முயற்சிப்போம்.

கிறீஸ்துவை நோக்கி ...................

அந்த இலக்கை நோக்கி எமது பயணம் தொட ரட்டும்.

# காற்றில் பறந்து காட்சி கண்ட சித்தர்

தமிழ்நாட்டில் பழனி மலையிலுள்ள முருகன் சிலையைச் செய்தவர் போகர் என்ற சித்தர். இவரது கல்லறையும் அங்கு இருக்கிறது. இவரது காலம் கி.பி ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி. இவர் எண்மா (அட்டமா) சித்தி பெற்ற சித்தர். காற்றில் பறக்கும் ஆற்றலும் அந்த சித்திகளில் ஒன்று. இவர் அந்த ஆற்றல் கொண்டு காற்றில் பறந்து உலகம் முழுவதும் சென்று மூலிகைகள் சேகரித்தார் என்று சொல்லப்படுவதுண்டு, அப்படிப் பறந்துசென்றபோது ரோமாபுரி, பாலஸ்தீனம், எகிப்து, சீனா, ஆகிய நாடுகளுக்குச் சென்றதாகவும் அங்கு கிறீஸ்துவின் சீடர்களையும், அவர்களின் சமாதிகளையும் பார்த்ததாகவும் 'போகர் ஏழாயிரம்' என்ற தனது சித்த மருத்துவ நூலில் பாடியிருக்கிறார்.

'சீனபதி தன்னில் சென்றேன், கடவுளாம் ஏசுவின் தன் காட்சி கண்டேன்' என்று பாடுகிறார்; போகர் எருசலேமில் 'ஏசுவின் தன் மகிமை மெத்த எடுத்துரைத்தார் சீடர் வர்க்கம் அநேகம் பேர்கள்' என்று கூறுகிறார், ரோமாபுரியில் இறங்கி அவர்கண்ட காட்சி:

'இறங்கினேன் ராசரீட சமாதி கண்டேன்
எழிலான ஏசுவின்தன் சீடன் கண்டேன்
சுரங்கமுடன் இம்மானுவேல் சமாதி கண்டேன்
சுத்தனாம் பரிசுத்தர் சமாதி கண்டேன்
வரங்கொடுக்கும் இசுரவேல் சமாதி கண்டேன்
வளமுடனே ரோமாபுரி தேசத்தார்கள்
திறமுடனே ரோமாபுரி கோட்டைக்குள்
போகுவதும் வருகுவதும் கண்டேன் தானே!

திருச்சபை 3ம் நூற்றாண்டுவரை நிலவறை களில் கூடி மறைவாகப் பிராத்தனை செய்ததை "சுரங்கமுடன் இம்மானுவேல் சமாதி கண் டேன்' என்ற வரி நினைவு படுத்துகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கலோ பொங்கல்!

பொங்கல்வந்து விட்டதென்று உழவரெ ல்லாம்
பூரித்துப் பொங்குகின்றார் வீட்டி லின்று
பொங்குதற்கு அரிசியில்லை என்றே பலபேர்
பொங்குகின்றார்; பொங்கலுக்கு சேலை கேட்டு
வாங்கவில்லை என்றுஇல்லாள் கோபத் தோடு
வாசலிலே நின்றுகண்ணீர் பொங்கு கின்றாள்
எங்களுக்கு நல்லகாலம் இல்லை யென்று
எந்நாளும் ஏழைமக்கள் பொங்கு கின்றார்.

கல்யாண வயதுவந்த கன்னி யர்கள்
கணவருக்காகத்தினம் பொங்கு கின்றார்
நல்லோர்கள் பொல்லாரின் வாழ்வு கண்டு
நாள்தோறும் பொங்குகின்றார் நன்மை காண
இல்லாரும் உள்ளத்தில் பொங்கு கின்றார்
இல்லாமை மாறவில்லை என்கி றார்கள்
கல்லாரும் கற்கவில்லை என்றே நாளும்
கவலையிலே பொங்குகின்றார் கண்ணீ ரோடே.

அடுத்தவீட்டார் சிறப்போடு வாழ்தல் கண்டு
அலையெனவே பொங்குகின்றார் சொந்த வீட்டார்
கொடுத்தபணம் திரும்பவில்லை என்றே நாளும்
வட்டிக்கடைக் காரர்களும் பொங்கு கின்றார்
தடுத்துவிட முடியாத துயரை எண்ணி
தரணியிலே பலபேர்கள் பொங்கு கின்றார்
வெடுக்கெனவே பேசுகின்ற கணவர்மாரை
வேதனையில் கண்டுஇல்லாள் பொங்கு கின்றார்

சம்பளத்தைக் கேட்வில்லை யென்றே வேலை
செய்பவர்கள் பொங்குகின்றார். மற்ற வரை
நம்பிக்கெட்ட மக்களெல்லாம் பொங்கு கின்றார்
நாதியற்றோர் நாள்தோறும் பொங்கு கின்றார்
நிம்மதியே இல்லையென்று செல்வர் கூட
நித்தம்நித்தம் பொங்குகின்றார். தைபிறந்தால்
நம்மகற்கு நல்லவரன் கிடைக்கு மென்று
பெற்றோரும் பொங்குகின்றார் நம்புகின்றார்



எழுதிவந்த பரீட்சையிலே சித்தி வருமா
என்றுபள்ளி மாணவர்கள் பொங்கு கின்றார்
வழுக்கிவிட்ட வியாபாரநட்ட மெண்ணி
வாணிபரும் பொங்குகின்றார். எழுந்தா ளரும்
எழுதிவிட்ட ஆக்கங்களை நுலாய்ப் போட
ஏற்றபணம் இல்லையென்று பொங்கு கின்றார்
பழுத்து விட்ட தலைமயிரை தடவிப் பார்த்து
பலபேர்கள் பொங்குகின்றார், பொங்கல் பொங்கல்

நாட்டினிலே நல்லாட்சி வீழக் கண்டால்
நாட்டுமக்கள் பொங்குகின்றார் நீதி கேட்டு
வீட்டினிலே பிள்ளைகளின் போக்கு கண்டு
பெற்றோரும் பெரிதாகப் பொங்கு கின்றார்
போட்டியிலே வெற்றிபெற வில்லை யென்று
போட்டியாளர் பொங்குகின்றார் புன்மை கண்டு
ஏட்டினிலும் பொங்குகின்றார் இதய முள்ளோர்
இன்னும்பல பொங்கலுண்டு இந்தப் பாரில்.



(பி. தமிழ்ச்செல்வன் மாசிலாமணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு மாகாவியம்

-நூல் அறிமுகம் -

அருட்தந்தை நவாஜி
சென்னை




நவம்பர் பதினொராம் திகதி என் வாழ் நாளில் மறக்க முடியாத நாட்களில் ஒன்று. என் வாழ்வில் எனக்கிருந்த விருப்பமாகிய கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் இலக்கிய உரையை நேரடியாகக் கேட்ட நாள். அதுமட்டுமல்லாது அவர் அருகில் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கக் கிடைத்த வாய்ப்பும் கூட. வாழ்வில் பல்வேறு நிலைகளில் கலைஞர் அவர்களின் பேச்சுக்களை பத்திரிகை, வானொலி, ஒலிநாடாக்கள், தொலைக் காட்சி ஊடாக வாசித்து, கேட்டு, பார்த்து ரசித்த நான். அவரை நேரில் சந்தித்தேன் என்பது மனதுக்கு இனிமையாகவுள்ளது. இந்தியாவிற்கு வந்த நாள் முதல் பல்வேறு இலக்கியக் கூட்டங்களுக்கு பார்வை யாளனாகச் சென்று கொண்டிருந்த நான் அன்று முதற் தடவையாக ஒரு கவிதை (காவியம்) நூலின் வெளியீட்டு விழாவிற்காக கடந்த 10.11.2001 சனிக் கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந் துள்ள கலைஞர் அரங்கிற்கு சென்றேன். அங்கு வெளியிடப்படவிருந்த கவிதை நூல் என்னவென்றால் (கவிதை என்பதை விட காவியம் என்பது தான் சிறந்தது) "இயேசு மாகாவியம்." இக் காவியத்தை படைத்த படைப்பாளி தமிழ்நாட்டின் புகழ்பூத்த பெண் கவிதையாளர் திருமதி நிர்மலா சுரேஷ். இக்காவியத்தை வெளியிட்டுவைக்க அங்கு பிரதம அதிதியாக கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் முதற் பிரதியைப் பெற வாலிபக் கவிஞர் வாலியும் பிரசன்னமாகியிருந்தனர். நூலுக்கு நயவுரை வழங்க பத்திரிகையாளர், எழுத்தாளர் வாஸந்தி அவர்களும், சினிமா இயக்குனர் கவிதாபாரதி அவர்களும் அவையை அலங்கரித்தனர். நூலுக்கு ஆசியுரை வழங்க சென்னை மயிலை உயர் மறைமாவட்டத் துணை ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ் அவர்களும் பிரசன்னமாகியிருந்தார். முழு நிகழ்வுகளையும் தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்த்துறை பேராசிரியர் திரு மைக்கல் பாரடே அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். 'இயேசு மாகாவியம்' வெளியீட்டு விழாவில் கலைஞர் அவர்களையும், கவிஞர் அவர்களையும் சந்திக்கக்கிடைத்த வாய்ப் பானது இயேசு செய்த வியத்தகு செயலே. 'இயேசு மாகாவியம்' எனும் நூல்பற்றிப் பார்க்கின்ற போது இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்பு கவிஞர் கண்ணதாசன் அவர்களால் 'இயேசு காவியம்' எனும் புதிய ஏற்பாட்டு நற்செய்தி நூல்கள் மரபுக் கவிதையாக நமக்குக்கிடைத்தது. மரபுக் கவி தையைப்புரிந்து கொள்ளக் கூடிய ஆற்றலும் திற மையும் எல்லோருக்கும் கிடையாது என்பது வெள்ளிடை மலை. இதனைக் கருத்தில் கொண்டு தான் என்னவோ கவிஞர் நிர்மலா சுரேஷ் அவர்கள் நான்கு நற்செய்திகளையும் ஒருங்கிணைத்து 'இயேசு மாகாவியம்' என புதுக் கவிதையில் நமக்கு அளித் துள்ளார்கள். நூலின் முன்னுரையில் ஆசிரியர் "பத்தாண்டுகளுக்கு முன்பு பிலிப்பைன்ஸ் வானொ லியில் இயேசு எனும் சோசலிஸ்ட் என்ற கவிதை ஒலி பரப்பாகியது. அதற்குக்கிடைத்த பாராட்டு களுக்குப் பிறகு இயேசு வரலாற்றினை அறிய மேலும் ஆர்வம் பிறந்தது" என்று குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர் நூலில் 'கிறிஸ்து' வின் தெய்வ த்தன்மையை மறைத்தும் 'இயேசு' எனும் வரலாற்று நாயகனை ஆழமாகவும் வெளிக்கொணர்ந்துள் ளார்கள். விடுதலை இறையியலின் (Liberation Theology) தாக்கம் ஆசிரியரை பெரிதும் பாதித்துள் ளது என்பதை அவரது எழுத்துக்களில் காணலாம். இக்காவியமானது மொத்தம் 144 தலை ப்புக்களுடனும், பல முக்கிய செய்திகளைக் கொண்ட பின்னிணைப்புக்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




613 பக்கங்களில் வெளிவந்துள்ளது. இதயம் பதிப்பகத்தால் பதிப்பீடு செய்யப்பட்டுள்ள இக்காவியம் தடிப்பான அட்டையில் வாசலண்டை வந்து நின்று தட்டும் இயேசு கெத்சமெனித் தோட்டத்தில் இரத்த வியர்வை வேர்த்தது ஆகிய படங்களை முன்னும் பின்னுமாகவும் கொண்டுள்ளது. முன் அட்டையில் நூல் ஆசிரியரின் படமும் சிறிதாக பொறிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் அவர்கள் 02.09.2001ல் கல்கி இதழுக்கு அளித்த பேட்டியில் 'இயேசுவை இரண்டு விதமாகப் பார்க்கலாம். வரலாற்றில் இயேசு, பைபிளில் கிறிஸ்து. நான் வரலாற்று இயேசுவின் அம்சங்களை எனது புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். இயேசு ஒரு புரட்சியாளர் அதை வெளிக்கொணர வேண்டுமென்பதுதான் என் நோக்கம்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதனை அவர் எழுத்துக்களில் பார்க்கும் போது.....

"பைபிளில் கிறிஸ்து
ஒரு மதத்துக்குச் சொந்தமானவர்
வரலாற்று இயேசுவோ
வையகத்துக்கே பொதுவானவர்"

"பணக்காரர் பக்கமாய்ச்
சார்ந்திருந்த பூமியை
எதிர்ப்பக்கமாயத்
திருப்பி வைத்தவர்"

"இயேசுவின் சுயம்
மறைந்தே நின்றது
மாயையின் முகமூடி கழன்றது"

இந்நூலினை (காவியத்தை) படைப்பதற்காக கவிஞர் கடந்த ஆண்டிலே புனித நாட்டுப் பயணத்தையே மேற்கொண்டிருந்தார் என்பது விசேடமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

நூலுக்கு நயவுரை வழங்கிய பத்திரிகையாளர் வாஸந்தி அவர்கள் ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர் (கவிஞர் திருமதி நிர்மலா சுரேஷ் – தி.மு.க. சேர்ந்தவர்) எவ்வாறு ஓர் இலட்சியவாதியின் வாழ்வினை தப்பின்றி எழுதிட முடியும் என்கின்ற பயம் இந்நூலைப் படிக்கத்தொடங்குகின்ற போது இருந்ததாகவும், இதனை படித்து முடித்தவுடன் அது நீங்கி விட்டதாகவும் காவிய ஆசிரியரை வாழ்த்தினார். சில கவிதைகளில் ஆசிரியர் தமது சொந்தக் கற்பனை வளத்திற்கு இடம் கொடுத்துள்ளார்கள். (உதாரணமாக 99, முதல் கல் எனும் கவிதையை தமது எண்ணத்திலும் தீட்டியுள்ளார்கள்) கவிஞர் வாலி அவர்கள் தமதுரையில் மிகத் தெளிவாக கலைஞர் கரம் பட்டாலே தமிழ் மாண்புறும் என்றும் கலைஞர் மீது கரம் பட்டாலே தமிழ் கலக்கமுறும் என்றும் குறிப்பிட்டு, கலைஞரின் கரம்பட்ட இந்த 'இயேசு மாகாவியம்' நிச்சயம் வெற்றி பெறும் என ஆசிரியரை வாழ்த்தினார்.

இறுதியாக நூலாசிரியரின் ஏற்புரையை அடுத்து விழா நிறைவுக்கு வந்தது. இயேசுவின் வாழ்வினை எண்ணிப்பார்க்கின்ற அனைத்து இலக்கிய ஆர்வலர்களுக்கும் இலகு தமிழில் இயேசுவின் வாழ்வு, பணி, மரணம், உயிர்ப்பினை எண்ணிப் பார்க்கக்கிடைத்த பொக்கிஷமே 'இயேசு மாகாவியம்'. இதனை கிறிஸ்தவ, தமிழ் உலகிற்குத் தந்த கவிஞரை வாழ்த்துவோம். இன்முகம் கொண்டு நூலை வரவேற்போம். இதன் விலை ரூபா.350/– (இந்திய ரூபாய்) வெளியீட்டு விழா அன்று விசேட கழிவு - ரூபா.250/-

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் உதித்த யேசு சூரியன்

- வாகரைவாணன்

சுதந்திர உணர்வு
உன் இரத்தத்தில்
எப்போதும்
சுற்றுலா நடத்தியது
ஒடுக்கப்பட்டோரை
விடுவிக்க வந்தவன் நான்
எனும்
உன் உரத்த பேச்சு
இதைத் தான்
உறுதி செய்தது

நல்லாயன் நீ
உன்னைப் போல்
வேறு ஒருவன்
இல்லவே இல்லை.

ஆட்டை நீ அறிவாய்
அது
உன்னை அறியும்
அதனால் தான்
உயிரையே அதற்காக
ஒப்புக் கொடுத்தாய்

முதல் நாள்
முகஸ்துதி செய்த மக்கள்
இரண்டாம் நாள்
இவனைச் சிலுவையில்
அறையுங்கள் என்றபோது
நிச்சயமாக நீ
சிரித்திருப்பாய்

சின்ன வயதிலேயே
பண்டிதர்களால்
உன்னைச்
சீரணிக்க முடியவில்லை

புதுக்கவிதை உன்னை
அவர்கள் எப்படிப்
புகழ்வார்கள்?

நாலும் படித்து
வருவதில்லை ஞானம்
அது
அனுபவத்தின்
அடி ஊற்று

வித்துவான்கள்
விவாதம் தான் செய்வார்கள்
என்று விட்டுவிட்டு
தோணி ஓட்டிகளைத்
தோழனாகக் கொண்டாய் நீ!

எந்த ஒரு துறவிக்கும்
ஏதோ ஒரு பற்று
இருந்தது
ஆனால்
விந்தை மனிதன்
உன்னிடமிருந்து
எல்லாமே விலகி
நின்றன

தாய் தந்தையையும்
தள்ளி வைத்தவன் நீ
பற்று இல்லை
என்பது தான் உன்
பரிசுத்த தனம்

சந்தேகக் கண் படாத
ஒரே ஒரு
சாதும் நீ தான்!
இந்தத் துறவறம் தான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசேயர் முன் உன்னை
எரிமலையாக்கியது

உலகம் ஒரு
யாகசாலை
அதற்குள் விரும்பி நுழைந்த
ஒரே ஒரு
வெள்ளாடு நீ தான்

தியாக நெருப்பே
உன்னைத்
தின்று முடித்தது



தனக்காக வாழாத
ஒரே ஒரு
தலைவன் நீதான்
பணிக்காக வாழ்ந்த
பரமன் மகன்
நீ மட்டும் தான்!

பாமர மக்களிடையே
ஒரு
பூமரமாக நின்று
பொலிந்தவனே
உன் வாசம் தானே
அவர்களை
உய்வித்தது

ஞானம்
உன் நாடி நரம்பெல்லாம்
ஓடிப் பாய்ந்தது
ஆனாலும்
உன் பக்கத்தில்
இருந்தவர்கள்
பாமரர்கள் தான்

யூதர்களுக்கு
உன்னால் தான்
யோகமே வந்தது
சிலுவை
சிறுமையின் அடையாளம்
அதில் - நீ இரத்தம்
சிந்திய பிறகு தான்
அதற்குப் பெருமை
சேர்ந்தது.

வேதத்தின் விதை நீ
அது விழுந்து முளைத்து
விருட்சமானது
பலஸ்தீனப்
பாலை மணலில் தான்

ஒரு கன்னத்தில்
அறைந்தால்
மறு கன்னத்தைக் காட்டு
என்று சொன்ன
முதல் மனிதன் நீ தான்!

அன்பின் ஆழம் நீ
அதன்
அகலமும் நீளமும்
நீதான்

உவமை அணி
உன்னிடம் இருந்துதான்
ஊற்றெடுத்தது.

கடுகுமணி இருந்து
கல்மலை வரை
எத்தனை?

சரித்திரம்
உன்னைப் போல மனிதனை
இதுவரை
சந்தித்ததே இல்லை
ஒரே ஒரு
உண்மையான துறவி
உலகிலே நீ தான் !




- வளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பு திரவெளி, வெருகல் பகுதிகளை உள்ளடக்கிய அந்தப் பரந்த பிரதேசத்திலே தீர்ந்த வெடிகாரரென்று பெயரெடுத்த வீரனும், சாமித்தம்பியும் நிறைந்த தமிழ்ப்பற்றுக் கொண்டவர்கள். இவர்கள் ஊருக்குக் குடிமகனாய் வந்து சவரத்தொழில் புரியும் லூக்காசையும் தம்மோடு சேர்த்துக் கொண்டு வேட்டைக்கு, வயல் வெளிக்குச் செல்லும் வேளைகளில் சமபந்தி போசனம் செய்து கொண்ட சமதர்மவாதிகளே யொழிய சம்பந்தம் செய்யுமளவுக்கு சமூக இறுக்கத்திலிருந்து விடுபடக் கூடியளவுக்கு அவர்கள் விருத்தியடையவில்லை.



அ.ச பாய்வா எழுதும் தொடர் நவீனம்.

லூக்காசுக்கு குருசைக் கழுத்தில் அணிந்து கொண்ட வேதக் காரனென்கிற பெயர் தானே யொழிய அவனுக்கோ ஊரோடொத்த சமயந் தான் பொருந்தும். அந்தளவுக்கு அவனோ, அவனையோ அனுசரித்துப் போகுமளவிற்கு கத்தோலிக்கர் அவ்வளவாக இல்லா திருந்ததும் ஒரு காரணமாயிருக்கலாம். லூக்காஸ் இப்போதந்த ஊரோடு அதன் சகல நிகழ்வுகளிலும் கலந்து போகக் கூடிய குடிமகனென்ற நிலை மாறி 'மச்சான்' என்று சொல்லுமளவிற்கு ஊரோடு அந்நியோன்னியமானான்.

வீரனின் மூத்த சகோதரன் சித்திரவேலுக்கு திசேரா வாடிமீதிருந்த வாரப்பாடும், உள்வீட்டுப் பிள்ளை போல அவன் நடந்து கொண்ட விதமும் வீரனுக்குப் பிடிக்காத அதேநேரம், வென்னப்புவவிலிருந்து வாடி முதலாளிமாருக்காகக் கொண்டு வரப்படும் 'மீறா' என்கிற கள்ளில் வடித்த சாராயம் வாடியில் மாத்திரமின்றி சித்திரவேலுவின் வீட்டிலும் தாராளமாய்ப் புளங்குவது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. ஒருவேளை மது

## அத்தியாயம் ~03

ஒரு சமதர்ம பானமென்பதை வீரன் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருந்தானோ என்னவோ.

அநேகமாக இவர்கள் மூன்று பேருக்கும் இந்த 'மீறா'வின் போதையில்தான் தமிழுணர்வு பீறிட்டுப் பாயும். சில வேளையில் சாமித் தம்பி பல்லை நறநறத்து 'சக்... சிங்கள வண்ட சாராயம்....' என்று கிளாசையும் உடைப்பதுண்டு.

இப்படியானதொரு, உக்குளான் (மானைப் போன்ற சிறிய வடிவிலானது) வேட்டைக்குச் சுட்டுத் தோட்டாவும், துவக்குடனும் சாமித்தம்பியும், வீரனும் புறப் பட்டதொரு செக்கன் வேளையில், எதேச்சையாக லூக்காசும் சேர்ந்து கொண்டான்.

பனங்காட்டான் மரத்தென்னங்கள்ளும், அண்ணனுக்குத் தெரியாமல் சுந்தரி மச்சாள் கொடுத்த அரைப்போத்தல் 'மீறா'வும் தமிழுணர்வைச் சுதிகூட்டியதோர் ஆவணிப் பௌர்ணமியில், மீன்பாடு மடிமடியாய் கரை கொட்டிய மித மிஞ்சிய போதையிலும் கதிர வெளியில் தங்களை இனி யாருமே அசைக்க முடியாதென்கிற மமதையிலும் திளைத்திருந்த வென்னப்புவ மீனவருக்கெதிராய், இந்து சமுத்திரமே அதிர்ந்தடங்குமளவிற்கு வீரனின் சுட்டுவிரலசைவில் முதல் வேட்டு தீர்க்கப்பட்டது. எந்தவேட்டும் தங்களைப் பாதிக்கா தென்பதற்குச் சாட்சியும் சவாலாயும் கடலிலும், தரையிலும், கட்டுமீறிய பேரினவாத இரைச்சலின் ஆக்கினையில் தன்னை இழந்து நின்றான்.

வேலாத்தை ஆத்தையின் வீட்டை அடையுமுன்பே அவளவனை வீதியிலே எதிர் கொண்டு கட்டியணைத்துக் கொண்டாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனையிழந்து உதவிகளேது மின்றி வாழ்பவளல்லவா.

'தம்பி வந்திருக்கான்' என்று அந்தப் பிராந்தியம் முழுவதும் கேட்கும் படியாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

'ஆரு வேலாத்த.....' செல்லம்மாட மகன..... எப்படி வளந்திருக்கா ... ஒன்னப் பாக்கணுமெண்டு தானிருந்தனான்' செல்லாச்சிக் கிழவி தனது மெலிந்த கைகளால் சந்திரனை தொட்டுப் பார்த்துக் கொண்டாள். காய்த்துப்போன அவளது கைகள் சொரசொரத்தது.

'நல்லாப் படிக்கிறிய ......... ஒளச்சி......... பெத்தாச்சியயுங் கவனிக்கணும் ... ஓ....' அவள் உரிமை பாராட்டியது அவனுக்குப் பிடித்திருந்தது. இந்தமண், இனம், சனம் என்பதெல்லாம் சாஸ்வதமற்றதென்றாலும், அந்தப் பந்தங்களிலிருந்து பிரிக்க முடியாதவாறு, மனிதர்களையெல்லாம் இனம் புரியாதவொரு சின்ன இழை எப்படிக் கட்டிப் போடுகின்றது!

வேலாத்தை கொக்கைத் தடியினால் பருவமான இளநீரைப் பறித்து தானே அதனைச் சீவி, வழுக்கலுடன் கலக்கி சந்திரனுக்குக் கொடுத்தாள். அமுதம் அவன் வயிற்றுள் இறங்கி, சில்லிட்டதோர் புத்துணர்வு அவன் உடலெங்கும் வியாபித்தது.

'சோதினயெல்லாம் முடிஞ்சித்தாமன...'

'இல்லாத்த இண்ணம் ரெண்டு மாசமிருக்கு லீவுதந்தவங்க. அதான் வந்தனான்'

இருவரும் சம்பாசித்துக் கொண்டிருக்கும்போது அவனுடன் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்த நடேசன் கள்ளுமுட்டி சகிதம் வேலாத்தையின் வளவுக்குள் பிரவேசித்தான். 'வேறாரு. பெருக்காலண்டமகன் நடேசி, பாள சீவக்கேட்டவன். ஆறு மரத்தக் குடுத்திருக்கன் எனக்கு வேறாருமன தாற. பிச்சச் சம்பளம் நூறு ரூவா வரும்'

'சுந்தரி அக்கையாக்கள் ஒண்டுந்தாறல்லிய....'

'தருவா அவ. அவக்குக் குடுத்த வளவில ஆயாம என்டவளவில வந்து தேங்காயிறவ..... எப்படித் தருவானக்கு...'

வேலாத்தை பொரிந்து கொண்டிருக்க, நடேஸ் அடுத்த வளவுக்குள் கள்சேகரிக்க குறுக்கு வேலியைத்தாண்ட 'டேய்... அந்த மங்கடய அடச்சித்துப்போடா. ஆடு வந்து மையோரக் கடிச்சா இனி ஒன்னக் கள்ளெறக்கயும் விடமாட்டன் ஓ.....' வெய்யிலுக்குள் நின்று ஒரு பாட்டம் அவனை வைது விட்டு, 'எனக்காருமன செய்தாற... கதிரவெளியான் வீட்டுக்குள்ளான் ஆடு மேய்ப்பானுகள் ஓ..' என்று வெயிலையும் பாரது நடேசு கடந்து சென்ற இடம்வரை சென்றாள். சந்திரனும் அவளுக்குதவியாகச் சென்றான்.

'களியாணம் முடிச்சி புள்ள பொறத் தெரியும், ஒனக்கு மங்கடய அடைக்கேலாத ......' கேட்குந் தொலைவில் நடேசனில்லை.

சந்திரனுக்கு, நடேசுக்கு இந்த வயதில் ஒரு குழந்தையும் இருக்குதென்கிற விடயம் ஆச்சரியமாய் படவில்லை. அவ்வகைக் கிராமங்களில் மிக இளவயதிலேயே இளைஞர்கள் திருமணஞ் செய்வது சாதாரணவொரு நிகழ்வுதானே. பெண்விரும்புகிறாளோ என்னவோ, இளைஞனொருவன் தான் விரும்புமொருத்தியின் வீட்டுக்குள் சென்றமர்ந்தானானால் அந்தப் பெண்ணை வேறெவரும் ஏற்கமாட்டார்கள். இவ்வகை வீட்டுக்குள் புகுந்த பிள்ளையார்மடைத் திருமணங்களே அநேகம்

'நீ எப்ப படிச்சி முடிச்சி... எப்ப களியாணம் முடிக்கிற'

'முடிப்பமாத்த எல்லாத்துக்கும் நேரம் வரட்டன்'

'ஓ...... பொல்லுல போகக் கதான் முடிப்பா போலருக்கு' என்று கூறி அவனை நெருங்கி ரகசியமான தொனியில்.

'ஒண்ட வயிர முத்தம் மாச்சிர பொட்ட செம்பகத்த நீ இப்ப பாக்கணும். சோக்காருக்காள் நான் ஈச்சிலம் பத்தைக்குப் போனப்ப. வயிரமுத்திட கதயிலருந்து சாடமாடயா அறிஞ்சனான். அவனுக்கு உன்ல ஒரு கண்ணிருக்கெண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பொட்டதானே நீ அவளத்தான் செய்யோணுமென்றதான் ஆத்தட விருப்பம்.'

வேலாத்தை விதைத்த செண்பகமென்கிற விதை, அந்த நிமிடமே சந்திரனுள் முளைவிட்டு, அவன் இதயவயலைப் பிளந்து கொண்டு அவனுள் ஒருவித இன்ப வேதனையை ஏற்படுத்திற்று

செண்பகப் பூப்போன்ற அழகிய செண்பக நாச்சி யம்மன் குடிகொண்டிருக்கும் மண்ணில் பிறந்ததால், அவளுக்கு வயிரமுத்தர் செண்பகமென்று பெயர் சூட்டி னாராம்.

அவன், அவள் ருது வாகுமுன் கண்ட அந்த உரு வத்தை ஒருகணம் மனத்திரைக் குள் கொண்டுவர முயன்றான். ருதுவான அவள் இப்போது எப் படியிருப்பாளெனக் கற்பனை செய்து கொண்டான்.

– வளரும் –

# பாலனே உன்னை வரவேற்கிறோம்

பாலகன் யேசுவே பரமனே ஓடி வாரும்
பாலர்கள் உன்பதம் போற்றித் துதிக்கவே
பாசம் மிகுந்த உன் அன்பை பருகிட
பரிந்து நீயும் ஓடி வாருமே.

கருணை மிகுந்த உன் பார்வைபடவே
கள்ளம் கபடு கசடு நீங்கவே
கண்களில் நீர் மல்கிட வேண்டினோம்
குவலயம் தன்னில் குதித்து வாருமே

இன மத சாதி பேதம்
இன்பம் எங்கும் பெருகிப் பரந்திட
இனிய அன்பனே அன்பை காட்டிட
இயேசுவே நீயும் விரைந்து வாருமே!

பாவங்கள் நீங்கி பல்லுயிர் வாழ்ந்திட
பாசங்கள் இணைந்து உறவு கொண்டாடவே
பட்டாசுகள் வெடித்து உள்ளங்கள் இன்புற
பரம் பொருளே நீர் விரைந்து வாருமே



ஆக்கம் :- *திருமதி. அ. சாகாயம்*
ஸ்பிரிங்வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விழா

## – கேட்டேன்; சொன்னார்கள் –





**செல்வி T. அருட்கவிதா**
**சூரியா பெண்கள்**
**அபிவிருத்தி நிலையம்**

பெண்களுக்கு எதிராக எத்தனையோ வன்முறைகள் இந்த நாட்டில் நடந்து கொண்டிருக்கு பாலியல் வன்முறை, சிறுமியர் துஷ்பிரயோகம் உட்பட பலவிதமான வன்முறைகளைக் குறிப்பிடலாம். நடைபெற்றுக் கொண்டிருக்கிற போரினால் கணவர்மாரை இழந்த பெண்கள் அனுபவிக்கிற துயரங்கள் சொல்ல ஏலாது. இப்படிப்பட்ட துன்பங்கள அனுபவிக்கிற இந்தப் பெண்களுக்கு கிறிஸ்து பிறந்த விழா ஒரு புதுவாழ்வைக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறன். ஏனென்றால் கிறிஸ்து அடிமைத்தனத்த நீக்கி எல்லாருக்கும் விடுதலை அளிக்க வந்தவர். ஆனால் பெண்கள எப்போதும் இரண்டாம் பட்சமாகத்தான் பார்க்கிறாங்க. இவைகள் நீங்கி பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து சமத்துவமான ஒரு சமூகம் உருவாக வேணும் என்றுதான் நான் இந்த கிறிஸ்து பிறந்த விழாவ எதிர்பார்க்கிறன்.

---

கிறிஸ்துவினுடைய பிறப்பு அமைதி எனனும் அம்சத்த வலியுறுத்துவதாக இருக்கிறது. அமைதியைப் பற்றி நாங்கள் சிந்திக்கின்ற போது மனிதனுக்குப் புறத்தே உள்ள இயற்கையும் மனிதனுக்குள்ளே இருக்கிற மனமும் வேண்டி நிற்கின்ற முக்கியமான அம்சம் இந்த அமைதி. இந்த அமைதியைப் பெறும் போது மனித மனமும் முகமும் அழகு பெறுகிறது. ஆகவே இந்த அமைதியைக் கொண்டு வருகின்ற ஒன்றாக கிறிஸ்து பிறப்பு அமைய வேண்டும் என்று விரும்புகிறேன்.





**செல்வி M. செல்வராணி**
**மறைக்கல்வி நடுநிலையம்**

---





**திரு. மைக்கல் கொலின்**
**ஊடகவியலாளர்**

கிறிஸ்மஸ் என்று ஆலயங்களில் பாலன் குடில்வைத்து கொண்டாடுவதால்மட்டும்கிறிஸ்மஸ் விழாவென்று கருதப்படமாட்டாது. இயேசு நாதரைச் சமாதானப் பிரபு என்று சொல்வார்கள். ஆகவே எங்களுக்கு எப்பொழுது உண்மையான சமாதானம் கிடைக்கின்றதோ எப்போது உண்மையான சமாதானம் நிலவுகின்றதோ அப்பொழுதான் எங்கள் அனைவருக்கும் உண்மையான கிறிஸ்மஸ் தினமாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அருட்திரு A. தேவதாசன்
இயக்குனர் C.Y.A

கிறிஸ்மஸ் விழாவை இன்றைய சூழலில் பார்க்கின்ற பொழுது எங்களுடைய நாட்டின் பின்னணியிலே வைத்து இதைப் பார்க்க வேண்டும். கிறிஸ்மஸ் விழாவை அமைதியின் விழா என்று சொல்லுகின்றோம். சமாதானத்தின் மன்னர் பிறந்திருக்கின்றார். அவர் சமாதானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார். எனவே இந்த கிறிஸ்மஸ் விழா தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் ஒன்று அமைந்திருக்கின்ற இந்த நாட்களில் எங்களுக்கு ஓர் ஆழ்ந்த அர்த்தத்தை உணர்த்துகின்றது. இனங்களுக் கிடையே சமாதானம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்ற ஓர் எதிர்பார்ப்பு. அதை எல்லா இன மக்களும் விசேடமாக தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் எல்லாரும் சேர்ந்து, ஒன்றாக, வேற்றுமைகளை மறந்துவிட்டு சமாதானத்தின் பிரபுவாகிய கிறிஸ்து கொண்டுவந்த சமாதானத்தை இலங்கை நாட்டில் நிலை நாட்ட முயற்சித்தால் எங்களுக்கு ஒரு அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவாக இருக்குமென்று நான் நம்புகிறேன். இதற்கு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவரைப் பற்றி ஒருவர் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அவருடைய இடத்தில் இருந்தால் எனக்கு எப்படி இருக்கும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படி பெரும்பான்மை இனமும் சிறுபான்மை இனமும் மற்றைய இனங்களும், மதங்களைச் சார்ந்தவர்களும் அதை உணர்ந்து கொண்டால் ஒரு புதிய சமுதாயம் பிறக்கும். இயேசுவும் அதைத்தான் விரும்பினார். சமுதாய வேதம்: அதைத்தான் இயேசு கொண்டு வந்தார். சமுதாயத்தில் மக்கள் உறவோடும் சமாதானத்தோடும் வாழுகின்ற பொழுது அதுதான் இயேசு கற்பித்த வேதமாக இருக்கிறது. ஆகவே, நாங்கள் கிறிஸ்மஸ் விழாவை சமாதானக் கண்ணோட்டத்தில் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து பார்க்க வேண்டும்.

---





திரு A. B இதயராஜ்
ஆசிரியர்

கிறிஸ்மஸ் என்று சொன்னதுமே எங்கட மனதில் ஒரு மகிழ்ச்சி வருகுது. நாங்க வாழ்த்தும் போது கூட Hapy Merry என்ற வார்த்தையைத்தான் பாவிக்கிறம். என்னைப் பொறுத்த வரையில் நத்தாருக்கு வாற இந்த மகிழ்ச்சி நத்தாரோட மட்டும் முடிஞ்சு போகக் கூடாது. தொடர்ந்து வாறநாட்கள் முழுவதும் ஒவ்வொருவரிட உள்ளத்திலயும் அந்த மகிழ்ச்சி இருக்க வேணும். பொருளாதாரப் பிரச்சினை, நாட்டில் சண்டை என்று பல காரணங்கள நாங்க சொன்னாலும் பிரச்சினைகளுக்குள்ளாக சந்தோஷமாக வாழ நாங்க பழகிக்கொள்ள வேணும். அதற்கேற்ப எங்கட உள்ளத்த இயைபாக்க மடையச் செய்து பிரச்சினைக்குள்ளாகவும் சந்தோஷமாக இருக்க முயற்சிக்க வேணும். அப்போதுதான் கிறிஸ்மஸ் தருகின்ற மகிழ்ச்சி தொடந்து வரும் நாட்களிலயும் நிலைக்க முடியும்

தொகுப்பு - மலர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவு

குடும்பம் அன்பின் அடிப்படையில் எழுகின்றது. அன்பால் உயிரோட்டம் பெறுகிறது. குடும்பம் உறவுகளால் அமைந்ததொரு சமூகம், இந்த உறவுகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவு. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவு, உற்றார் உறவினரோடு உள்ள உறவு ஆகியவற்றை உள்ளடக்கும். இந்த உறவு ஒன்றிப்பின் உள்ளார்ந்த இயல்புக்கு ஏற்ப வாழ்வதும், சமூக உறவை ஏற்படுத்துவதற்கான தொடர் முயற்சியில் ஈடுபட்டு வாழ்வதும் குடும்பத்தின் முதல் பொறுப்பாகும். இத்தகைய பொறுப்பின் உள்ளார்ந்த அடிப்படையும் நிலையான சக்தியும், இறுதியான குறிக்கோளும் அன்பே. அன்பில்லாக் குடும்பம் உறவுகளால் அமைந்ததொரு சமூகம் ஆகாது. அது போலவே அன்பு இல்லாவிட்டால் குடும்பம் உயிர்வாழ இயலாது. உறவுச் சமூகமாக வளர்ச்சியடையவும், நிறைவு பெறவும் முடியாது. அன்பின்றி மனிதனால் வாழ இயலாது. மனிதனுக்கு அன்பு காண்பிக்கப்படவேண்டும். அன்பை அவன் கண்டுபிடிக்க வேண்டும். அன்பை அனுபவத்தால் உணர்ந்து அதைத் தன்னுடையதாக்க வேண்டும். அன்பில் அவன் ஆழ்ந்த முறையில் பங்குபெற வேண்டும். அவ்வாறில்லாவிடில் அவன் தனக்கே புரியாததொரு புதிராகி விடுவான்.

திருமணத்தில் கணவனுக்கும். மனைவிக்குமிடையே உள்ள அன்பு, அவ்வன்பிலிருந்து பிறந்து விரிந்து சென்று ஒரே குடும்பத்தின் கண் வாழும் வெவ்வேறு உறுப்பினரை இணைக்கும் அன்பு. அதாவது பெற்றார் பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர் ஆகியோரிடையே நிலவும் அன்பு. உள்ளார்ந்த சக்தி வாய்ந்ததொரு நிலையான தூண்டுதலால் உயிரோட்டம் பெற்று உந்தப்படுகின்றது. இவ்வாறு குடும்பம் நாளும் அதிக விரிவான ஆழமான உறவு ஒன்றிப்பை நோக்கி இட்டுச் செல்லப்படுகிறது. இந்த உறவு ஒன்றிப்புத்தான் திருமண – குடும்ப உறவுச் சமூகத்தின் அடித்தளமும் உயிருமாகும்.

முதல் உறவு ஒன்றிப்பு, திருமணத் தம்பதியரிடையே உருவாகிப் படிப்படியாக வளர்வதாகும். திருமண அன்பினது உடன்படிக்கையிலிருந்து பிறக்கும் சக்தியால் ஆணும் பெண்ணும் 'இனி இருவர் அல்லர் ஒரே உடல்' ஒருவருக்கொருவர் தம்மையே முழுமையாகக் கையளிப்பதாக அவர்கள் அளித்த திருமண வாக்குறுதிக்கு நாள்தோறும் பிரமாணிக்கமாக வாழ்ந்து, ஒருவரோடு ஒருவர் கொள்ள வேண்டிய அன்புறவில் இடையறாது வளர்ச்சியடைய அவர்கள் அழைக்கப் படுகிறார்கள்.

தம்பதியர் தமக்கிடையே நிலவும் உறவு ஒன்றிப்பில் நாள் தோறும் தொடர்ந்து வாழவேண்டும்; வளர வேண்டும். தூயாவியின் கொடை கிறீஸ்தவ தம் பதியருக்கு வழங்கப்படும் வாழ்வுக் கட்டளை எனலாம். அதே நேரத்தில் இக் கொடை ஒவ்வொரு நாளும் கிறீஸ்தவத் தம்பதியர் தம் உடல், பண்பு, இதயம், அறிவு, உள்ளம், உணர்வு ஆகிய எல்லா நிலைகளிலும் ஒருவரோடொருவர் அதிக வளமான ஒன்றிப்பையடைய வளர்ச்சியுறும் வண்ணம் அவர்களைத் தூண்டும் உள்ளுணர்வாகவும் உள்ளது. இதன்மூலம், கிறீஸ்துவின் அருளால் வழங்கப்படுகின்ற புதிய அன்புறவைத் திருச்சபைக்கும், உலகிற்கும் திருமணத் தம்பதியர் வெளிப்படுத்துவார்கள்.

திருமணத்தின் முறிவு படவியலாத்தன்மை பிரமாணிக்கம் ஆகிய விலைமதிக்க முடியாத மதிப்பீட்டு நலன்களுக்கும் சான்று பகர்தல் இன்றைய கிறீஸ்தவ மக்களின் மிக முக்கியமான உடனடியான பொறுப்புக்களுள் ஒன்றாகும். எனவே பெரும் இன்னல்கள் எழுந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாது திருமணத்தின் முறிவுபடவியலாத் தன்மையைக் காத்து வளர்க்கின்ற கடமை எல்லா மணமக்களையும் சார்ந்தது. இம்மணமக்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை உண்மையிலேயே எளிமையோடும், துணிவோடும் நிறைவேற்றுகின்றனர். இறைவனும், இயேசுக் கிறீஸ்துவும் எத்தகைய தவறாத பிரமாணிக்கத்தோடு எல்லா மனிதர்களையும், ஒவ்வொரு மனிதனையும் அன்பு செய்கின்றனரோ, அத்தகைய பிரமாணிக்கத்தை உலகிற்கு எண்பிக்கும் ஓர்



அடையாளமாக இருப்பதுதான் மேற்கூறிய பணியாகும். சிறியதோர் அடையாளமாக இருப்பினும் கூட இது விலைமதிக்க முடியாதது.

திருமண உறவு ஒன்றிப்பு என்னும் அடித்தளத்தின் மேல் கட்டி எழுப்பப்படுவதே குடும்பத்தின் விரிந்த உறவு ஒன்றிப்பாகும். இது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவு, சகோதர சகோதரிகள் ஒருவர் ஒருவர் மட்டில் கொண்டுள்ள உறவு, உற்றார். உறவினர், வீட்டின் பிற உறுப்பினரிடையேயுள்ள உறவு ஆகியவற்றை உள்ளடக்கும். இயற்கையாகவும், அருள் வழியாகவும் எழுகின்ற பிணைப்புக்கள் திருமணத்தின் உறவு ஒன்றிப்பை உறுதிப்படுத்தி வளர்க்கின்றன.

குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் உறவு ஒன்றிப்பைத் தாம் பெற்றுக்கொண்ட தனித்தனிக் கொடைகளுக்கு ஏற்ப நாளும் வளர்ப்பதற்கான அருளையும் பொறுப்பையும் கொண்டுள்ளனர். இவ்வாறு மனிதத் தன்மையை வளமாக்கும் ஒரு பள்ளியாக குடும்பம் திகழும். உறவு ஒன்றிப்பைக் கட்டி எழுப்புவதற்கான அடிப்படையானதொரு வாய்ப்பு பெற்றாருக்கும் பிள்ளைகளுக்குமிடையே நிகழும் கல்விப் பரிமாற்றம் ஆகும். பெற்றார் மட்டில் தாங்கள் காட்டும் அன்பு, மரியாதை, கீழ்ப்படிதல், ஆகியவற்றின் வழியாகப் பிள்ளைகள் உண்மையிலேயே மனிதப் பண்புவாய்ந்த, கிறிஸ்தவப் பண்பு வாய்ந்த குடும்பத்தைக் கட்டியெழுப்பத் தங்களது தனிப்பட்ட இன்றியமையாத ஒத்துழைப்பைக் கொடுக்கின்றனர். இவ்வெதிர்பார்ப்பை அடைய பெற்றார் தங்களது கடமையை ஒரு உண்மையான பணியாகச் செயல்படுத்த வேண்டும்.

மேலும் குடும்ப அங்கத்தவர் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளுதல், சகிப்புத் தன்மை, மன்னித்தல், கருத்திசைவு, ஒப்புரவு ஆகியவற்றில் சிறந்து விளங்க தாராள மனத்தோடு முன் வருவது இன்றியமையாதது.

அருட் சகோ. தோமஸ் ஜோசப் ஜஸ்டஸ்


# தடையில்லாது வலம் வருவோம்

எனதுயிர் நண்பி!
அதிகரித்துவிட்ட - நம்
பிரிவு நாட்கள்.............
இனி முற்றுப் பெறுமா?
மீண்டும் ஒரு சுகந்தம்
என்னையும் என் தேசத்தையும் தழுவுமா?
விடை ஏது............?
துயரத்தின் எல்லையில்
எனது தேசம் நின்றுகொண்டிருந்த
ஒரு நாளில் தான்...............
நானும், நீயும்
ஒரு கைகுலுக்கலுடனும்
முத்தமிடுதலுடனும்
விடைபெற்றுக் கொண்டோம்
பிரிவுத்துயர்.............
நெஞ்சை அழுத்திய போதும்
அந்த நாளில்.............
நாம் இருவரும் அழவில்லை
எம் இலக்குகள்
ஒன்றாகிய போதும்
பாதைகள் மாறிக்கொண்டதால்
பிரிவை ஏற்றுக் கொண்டோம்.
காலமும், நேரமும்
எமக்காக காத்திருந்தால்
மீளவும் ஒரு நாளில்
நாம் நிச்சயம் சந்திப்போம்.
என்று நீ கடைசியாகக்
கூறிய வார்த்தைகள்
இன்னும் ஞாபகம் இருக்கின்றன.
இப்போது..............
காலம் எமக்காக விரிகின்றதா...........?
அப்படியாயின்......... வா நண்பி!
இன்னுமொருதடவை
கரம் கோர்ப்போம்,
நினைவுகளை மீட்போம்,
தடையில்லாது வலம் வருவோம்
எம் தேசமதில்.................

◆ G. சந்திரிக்கா
யாழ்ப்பாணம்



# மாணவர் பக்கம்



க.பொ.த. (சாதாரணம்)
– கத்தோலிக்கம் –
* மெற்றில்டா

## கலாச்சார மதிப்பீடுகளினூடாக நிறைவாழ்வைப் பெறுவோம்

19ம் பாடம்

### இலங்கையின் கிறிஸ்தவக் கலாச்சாரம்

- கலை ஆசாரம் எனும் சொற்கள் இணைந்து கலாச்சாரம் என்றானது. கலாச்சாரமென்பது நல்லொழுக்க விழுமியங்களாகும்.
- ஒரு சமுதாயமென்பது, நல்லொழுக்க விழுமியங்களை அல்லது நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டதாகும்.
- மக்கள் வாழ்வுக்கு ஏற்ற, முறையான சமுதாயத்தைப் படிப்படியாகக் கட்டியெழுப்புவதற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சமூகம் அவசியம்.
- கலாச்சார முறை உருவாக நாட்டின் நாகரீகமும், அபிவிருத்தியும் ஒன்றாக இணைந்திருப்பது இக்காரணங்களினாலேயாகும்.
- மனிதன் எக்காலங்களிலும் தனது பண்பாட்டின் வழியாகப் பெறுமதி மிக்க கல்வியறிவையும், அனுபவங்களையும், விருப்பங்களையும் வெளிப்படுத்தி அனைவரதும் திறன்களையும் பாதுகாக்கவேண்டும்.
- சமூகத்தின் சிறப்புகள் யாவும் கலாச்சாரத்திலடங்கியுள்ளன.

### கலாச்சார மதிப்பீடுகள் கட்டியெழுப்பப்படும் முறைகள்

1. சிந்தனைகளை வெளிப்படுத்தும் முறை
2. சமய ஆசாரங்கள், சம்பிரதாயங்களை வழிப்படுத்தும் முறை.
3. நீதியையும், நீதிமன்றத்தையும் ஒழுங்குபடுத்தும் முறை.
4. கலை, விஞ்ஞான வளர்ச்சிமுறை.
5. அழகியல் ஆய்வுமுறை.
6. சமுதாயத்தின் பல்வேறு முன்னேற்ற நிலைகளைக் கட்டியெழுப்பும் விதிமுறை.
7. வாழ்க்கையை நன்னிலையில் தயார்ப்படுத்திக் கொள்ளும் முறை.

- இலங்கையில் இந்து கலாச்சாரம், பௌத்த கலாச்சாரம், இஸ்லாமிய கலாச்சாரம், கிறிஸ்தவ கலாச்சாரம் ஆகியவை 2500 வருடகாலமாகக் காணப்படுகின்றன.
- நாட்டிலுள்ள பொதுவான கலாச்சார முறை குறிப்பிட்ட சாதிக்கோ. சமயத்திற்கோ, குலத்திற்கோ, மொழிக்கோ வரையறுக்கப்பட்டதல்ல.
- பல்வேறு மதத்தினரிடையேயும், பல்வேறு மொழிபேசும் இனத்தவரிடையேயும் நாகரீக முறைகள் கலந்து காணப்படுகின்றன.
- இலங்கைக் கிறிஸ்தவ கலாச்சாரத்தையும் கட்டியெழுப்புவதற்குத் திருமறை உதவுகிறது.

### நம் நாட்டின் கலாச்சார விழுமியங்கள்

1. பெற்றோரை வணங்கி, மரியாதை செய்தல்
2. மரியாதையான ஆடைகளையணிதல்.
3. பயணங்கள் செல்லுமுன் செபித்தல், வழிபாடு நடத்துதல்.
4. செல்லப் பிராணிகளைப் பாதுகாத்தல்.
5. வழிப்போக்கரின் நலன் கருதித் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்.
6. விருந்தினரை உபசரித்தல்.
7. முதியவர்கள் முன்னிலையில் எழுந்து நிற்றல்.
8. நாட்டுப் பிரசைகளைச் சகோதரர்களாக மதித்தல்.
9. புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்லல்
10. பெரியோரை மதித்து நடத்தல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எந்தவொரு கலாச்சாரத்தில் பிறந்தவரானாலும், அதற்குரிய கலாச்சார முறையினையேற்று, மதிப்பளித்துப் பாதுகாக்க வேண்டும்.

- நவீன உலகிலே ஏற்படும் புதுமைகளையும், வேறுபாடுகளையும் கலாச்சார முறைகளையும் பாதுகாக்க வேண்டும்.

- நமது இனம், மொழி, மறை ஆகியவற்றில் அவதானமாயிருக்காது நமது கலாச்சாரத்தினூடாகத் திரு மறையை ஊட்டம் பெறச் செய்தல் வேண்டும்.

- 16ம் நூற்றாண்டில் ஐரோப்பியக் கலாச்சாரத்தினூடாக நம் நாட்டுக்குக் கத்தோலிக்க சமயம் வந்தது. அதன் மூலம் துணைக்கலாச்சாரமொன்று உருவானது.

- எமது திருமறையைத் தேசிய மயமாக்க வேண்டும். எமது நாட்டின் பண்பாட்டு விழுமியங்களை மிக நுணுக்கமாக ஆராய்தறிந்து திருமறைக்கு எந்தப் பங்கமுமேற்படுத்தாமல் பின்பற்ற வேண்டும்.

### இயேசுவும் கலாச்சாரமும்

- இயேசுவும் தம் அன்றாட வாழ்வில் யூத சம்பிரதாயங்களுக்கும் பண்பாடுகளுக்கும் மதிப்பளித்தார். (லூக்கா 2: 22-24)

- அன்று நிலவிய பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, மதிப்பீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி இறையரசை அறிவித்தார்.

- நாமும் நமது நாட்டுக்கலாச்சாரத்தினூடாகத் திருமறையைப் பரப்ப பாடல், நடனம், நாடகம் ஆகிய கலையம்சங்கள் வழியாக ஆன்ம குணநலன்களையெடுத்துக் காட்டவேண்டும்.

### இறைவனின் வெளிப்படுத்துதல்

- இறைவன் பல்வேறு காலங்களில், பல்வேறு வகையாக இறைவாக்கினர் மூலமாகவும், குலமுதுவர் மூலமாகவும் பேசினார்.

- இந்த இறுதிநாட்களில் தம் திருமகன் வழியாக நம்மோடு பேசினார்.

- உலகமுழுவதும் நற்செய்தியைப் போதிக்கக் கிறிஸ்து தம் சீடருக்குக் கட்டளையிட்டார். பல்வேறு கலாச்சாரங்களினூடாக நற்செய்தியைப் பரப்புவதே அவரது விருப்பமாக இருந்தது. (மத் :28:19)

### திருச்சபையினூடாக நற்செய்தி பல்வேறு கலாச்சாரங்கள்மத்தியிலும் பரவுதல்

- பரிசுத்த திருச்சபை எல்லாக் கலாச்சாரப் பண்பாடுகளிலும் கலந்துள்ளது.

- பரிசுத்த திருச்சபை காலத்துக்குக் காலம் வேறுபட்ட கலாச்சாரத்தினால் மாறுபட்டுக் கிறிஸ்துவின் செய்தியைப் பரப்பி, அதை விளக்குவதற்கும், ஆராய்ந்து ஆழமாக மனதில் பதித்துக்கொள்வதற்கும், பலவித சமூகங்களுக்கு இறைவழிபாட்டை மிக அர்த்தமுள்ளதாகச் செயற்படுத்துவதற்கும் பண்பாடுகள் வழியாகச் செய்யப்பட்ட விளக்கவுரைகள் பயனுள்ளதென இன்றைய உலகில் திருச்சபை எனும் நூலில் 58ம் வசனத்தில் கூறப்படுகிறது.

### இலங்கையில் திருச்சபையின் தேசிய கலாச்சாரநிலை

- மக்கள் இறைவழிபாட்டைத் தமது சொந்த மொழிகளிலே நடத்துதல்.

- திருவிவிலியம் தேசிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை.

- தேசிய பண்பாட்டு முறைகளுக்கிணங்க வழிபாடு நடத்துதல்:

1. வயல்களை ஆசிர்வதித்தல்
2. அறுவடையை ஆசிர்வதித்தல்
3. திருச்சிலுவையை ஆசிர்வதித்து வீட்டில் வைத்தல்
4. விளைச்சல்களை ஆசிர்வதித்தல்
5. தோணிகள், படகுகள், வாகனங்கள், வலைகள். பலவிதத்தொழில் உபகரணங்களை ஆசிர்வதித்தல்.

### பல்சமயப் பண்பாட்டுக் கலாச்சார வைபவங்களை இணைந்து நடத்துதல்.

தமிழ், சிங்கள, வருடப்பிறப்பு விழா
வருடாந்த வைபவங்கள்
சுதந்திர தினவிழா
ஊர்வல ங்களில் கலந்து கொள்ளுதல்
வெசாக் தினவிழா
ஆரம்ப விழாக்கள்
நத்தார் தினவிழா
மறைக்கல்வி வைபவங்கள்

2ம் வத்திக்கான சங்க ஏடான 'இன்றைய உலகில் திருச்சபை, மக்கள் வழிபாடு போன்ற பிரமாணங்கள் வழியாகவும் இத்தேசிய பண்பாடுகள் பற்றிய அறிவுரைகள் தரப்படுகின்றன. அத்துடன் 1995ம் வருடம் திருச்சபை நடத்திய தேசிய மறைபரப்புச்சேவை வழியாக வெளியிட்ட சுற்றுநிருபங்களிலும் இவை பற்றியறிய முடிகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## உதவிகள் பிச்சை அல்ல

குடி பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் நன்மனதுடையோர் வழங்கும் பிச்சையாக நோக்கப்படாமல் அம்மக்களுக்கான நீதியுடன் கூடிய உரிமையாக நோக்கப்படும் வகையில் நம் செயற்பாடுகள் இருக்க வேண்டுமென அழைப்பு விடுத்தார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். குடி பெயர்ந்தோர் நலனுக்கான சர்வதேச கத்தோலிக்க அவையின் அங்கத்தினர்களை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை, ஒவ்வொரு சகோதர சகோதரிகளிலும் கிறீஸ்துவைக் கண்டு மனித மாண்பைப் பாதுகாக்க உழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். குடி பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான கத்தோலிக்கரின் பணிகள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதனுக்கு ஆற்றுவதன் மூலம் இறைவனுக்கே சேர்கிறது என்பதை கிறீஸ்தவர்கள் மட்டுமல்ல ஏனைய மதத்தினரும் புரிந்து கொள்கிறார்கள் என்ற திருத்தந்தை இவ் அவை ஏனைய கிறீஸ்தவ சபைகளோடும் ஏனைய அமைப்புகளோடும் இணைந்து பணியாற்றுவதையும் பாராட்டினார்.

## கத்தோலிக்கரின் உண்ணா நோன்பு

திருத்தந்தையின் அழைப்பை முழுமையாக ஏற்று கடந்த டிசம்பர் மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை உலகமெங்கும் அமைதிக்கான உண்ணா நோன்பை கடைப்பிடித்தனர், உலகக் கத்தோலிக்கர்கள். அது பற்றி திருப்பீடத் தலைவர் பேராயர் போர்ட் வேர்ட் பேசும்போது அந்த முயற்சியை இறைவன் நிறைவாகவே ஆசீர்வதித்துள்ளார். உலகமெங்கும் போர்கள் நீங்கி அமைதி நிலவ எடுக்கும் முயற்சிக்கு நல்ல ஆதரவும் வன் முறையால் துன்புறும் எமது சகோதர சகோதரிகளுக்கு அளிக்கும் தோழமையாகவும் இது உள்ளது என்று கூறினார், பேராயர் போட்வேட். இந்த உண்ணா நோன்பு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்று. உண்ணா நோன்பு தினம். முஸ்லிம்களின் நோன்பு முடியும் தினம் எனவே இருமதங்களுக்குமிடையே உரையாடலை தொடங்க காரணியாய் மாறும். அடுத்து உலகிலுள்ள அனைத்து மதங்களுடனும் நல்லிணக்கத்தையும் தோழமையையும் உருவாக்க இது உதவும் என்றும் கூறினார், திருத்தந்தையின் இறையியல் ஆலோசகர் மறைத்திரு ஜார்ஜஸ் கோகியர்.

## இஸ்லாமியருக்கு அழைப்பு

நாம் இணைந்து பணியாற்றக் கூடாதா என்ற கேள்வியுடன் கடந்த டிசம்பர் மாதம் நோன்புத் திருநாளைக் கொண்டாடிய முஸ்லிம் சகோதரர்களுக்கு திருப்பீட அவையின் பல்சமய உரையாடல்களுக்கான அமைப் பின் தலைவர் "கருதினால்" பிரான்சிஸ் காரின்சி தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். பல துறைகளிலும் நாம் இணைந்து செயலாற்ற வேண்டும். தோழமை சகோதரத்துவம், நல்ல மனம் இவைகள் விசுவாசிகளாகிய நம்மில் உருவாகட்டும். மனிதனை மனிதனாக மதிப்பதற்கும், மனித மதிப்பீடுகளை போற்றுவதற்கும் புதிய பாதைகளை அமைப்போம் என்று கூறினார் கருதினால். நமது அறிவியல், பொறியியல் வளர்ச்சி மனித மாண்பினைக் காக்கப்பயன்படட்டும் அத்துடன் நம்மை எல்லாம் படைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைப் போற்றப் பயன்படட்டும் என்று மேலும் கூறினார் அவர். இந்த வளர்ச்சியில் அனைத்தும் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் உருவாக்கட்டும். மனிதனை அழிக்கப் பயன்படுத்தாமல் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் நீதியையும் உருவாக்கப் பயன்படுத்துவோம் என்று கேட்டுக் கொண்டார் கருதினால். மலரட்டும் மனித மதிப்பீடுகள் என்று தனது ரம்சான் வாழ்த்தை வழங்கினார் கருதினால் பிரான்சிஸ்காரின்சி.

## இந்து அறிஞர்கள் பாராட்டு

கொங்கணியை ஓர் இந்திய மொழியாக உருவாக்கி அளித்ததில் கத்தோலிக்க துறவுச் சபையான இயேசு சபையினரின் முக்கிய பங்கைப் பாராட்டியுள்ளனர் இந்து அறிஞர்கள். 1993ம் வருடம் கொங்கணி அதிகாரபூர்வ மொழியாக அங்கீகரித்தது பற்றிக் குறிப்பிட்ட இலக்கியவாதி படேட்கர் பிரசாத்கர் இயேசு சபையினர் 16ம் நூற்றாண்டு முதல் கொங்கணிக் கலாசாரத்தை நிலை நிறுத்தி வளர்த்து வந்துள்ளதாகப் பாராட்டினர். கொங்கணி மொழியில் இலக்கியப் படைப்புக்களை இளைஞர்களிடம் உருவாக்கும் வண்ணம் 1989ம் வருடம் இலக்கிய விருது ஒன்றினை உருவாக்கி ஊக்குவித்தும் வருகின்றது கோவாவின் இயேசு சபை மையம்.

## அணுவாயுதங்கள் ஒழிக்கப்பட வேண்டும்

அணுவாயுதச் சோதனைகள் முற்றிலுமாக ஒழிக்கப்படவேண்டிய நேரம் வந்துள்ளதை உணரும் திருப்பீடம் அணு வாயுதத் தடை ஒப்பந்தம் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவதாகத் தெரிவித்தார் பேராயர் ரெனால்டோ மாட்டினோ. இவ்வுலகம் தேடும் அமைதிக்கு அணுவாயுதங்கள் தடையாக இருப்பதால் அதுகுறித்து சோதனைகளைத் தடை செய்யும் ஒப்பந்தம் வல்லரசுகளால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென அதுகுறித்த கருத்தரங்கில் உரையாற்றினார் ஐ.நா.வுக்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் மார்ட்டினோ. மக்களை அழிவிலிருந்து காப்பாற்ற அமைதியையும், வாழ்வினையும் உறுதி செய்ய அணுவாயுத ஒழிப்பு இன்றியமையாதது என்றும் கூறினார் பேராயர்

## சீன மக்களிடம் மன்னிப்புக் கோரினார் திருத்தந்தை

இயேசு சபைத்துறவி அருட்தந்தை றிச்சி அவர்கள் சீன மண்ணில் கால்வைத்து 400வதுஆண்டு நிறைவதையொட்டி ஒக்ரோபர் மாதம் 24ம் திகதி உரோமை கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் திருச்சபை சார்பாக சீன மக்களிடம் திருத்தந்தை மன்னிப்புக்கோரும் செய்தி வாசிக்கப்பட்டது. திருத்தந்தை தனது செய்தியில் கத்தோலிக்க உறுப்பினர்களால் அண்மைக் காலத்திலும் இறந்த காலத்திலும் சீன மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட அனைத்துப் பிழைகளுக்காகவும் மன்னிப்புக் கோருவதாகவும், மேலும் கத்தோலிக்க திருச்சபை சீன மக்களிடமும் அவர்களுடைய தலைவர்களிடமும் சலுகைகளை எதிர்பார்க்கவில்லை, மாறாக ஆழ்ந்த புரிந்துணர்வு, பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் நல்ல உறவைக் கட்டி எழுப்புவதற்கு உரையாடல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த விரும்புகிறதெனவும் குறிப்பிட்டார். சீன நாட்டின் வெளிநாட்டு விவகார அமைச்சர் கன்யுக்சி செய்தியாளருக்கு இதைப் பற்றித் தெரிவிக்கையில் திருத்தந்தையின் நல்உறவுக்கான அழைப்பை தாம் கருத்திற்கொண்டு படித்து வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் கூறுகையில், சீன மக்களின் நீண்டநாள் குற்றச்சாட்டு திருத்தந்தையின் இந்த மன்னிப்புக் கோருதலினால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இருப்பினும் திருத் தந்தையின் கனவாகிய சீன நாட்டு விஜயம் நிறைவேறுமா? இதற்கு சீன அரசு எப்படி பதில் கொடுக்கப்போகிறது என்னும் கேள்விகளையும் எழுப்பியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியத்தின் அவசியம்

J. பத்திநாதன்

### 1. குடும்ப உறவுத் திருச்சபை

ஆதித்திருச்சபை குடும்ப உறவில் உருவானது. அன்னைமரியாள் அப்போஸ்தலர்கள் ஒரு தாய் பிள்ளைகளாக சகோதரன் சகோதரி உறவில் இணைந்திருந்தார்கள். திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம்பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் என்று திருத்தூதர் பணி 2:42ல் நாம் படிக்கின்றோம். இந்த அன்பு உறவில், குடும்ப உறவில் ஊன்றப்பட்ட திருச்சபை அன்பினில், பகிர்வினில் ஆல் போல் தழைத்து கிளை பரப்பி முழு உலகத்திற்கும் நிழல் அளிக்கும் விருட்சமாக திகழ்ந்தது அன்று. ஆனால் அதன் வளர்ச்சியிலே ஒரு வறட்சித்தன்மை தோன்றி இந்த உறவுகளில் ஒரு விரிசல் நிலை உண்டாகி இருப்பதனை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். எனவே இக்குறைகளைக்களைந்து மீண்டும் எமது திருச்சபையை ஒரு குடும்ப உணர்வுத் திருச்சபையாக உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கு நாம் என்ன செய்யலாம்?

அ) முழு பணித்தளத்திலும் ஒரேயடியாக இக்குடும்ப உறவைக் கட்டி எடுப்பதில் வளர்ப்பதில் முயற்சிப்பதை விட சிறிய சிறிய குழுக்களுக்குள் இந்த குடும்ப உறவை வளர்த்தெடுத்தல் இலகுவானது.

ஆ) குழுக்களுக்குள் மலரும் இக்குடும்ப உறவு பின்னர் குழுக்களுக்கிடையேயும், பணித்தளத்திலும் பின் பணித்தளங்களுக்கிடையேயும் வளர்க்கப்படலாம்.

கடவுள் மனிதரை குடும்ப உறவில் படைத்தார். ஆணும் பெண்ணுமாகப் படைக்கின்றார். *(தொ.நூ:1:27)* இதன்படி புதுப்பிக்கப்பட்ட ஆதிக் கிறீஸ்தவர்களும் எவ்விதமான வேறுபாடுகளும் ஏற்றத் தாழ்வுகளுமற்ற சமத்துவ சமுதாயமாக வாழ்ந்து வந்தார்கள். 'நீங்கள் ஒன்றாய் இருப்பீர்களாக' என்ற யேசுவின் விருப்பமும். சீடர்களின் பாதங்களை கழுவுகின்ற அவரது பணியும் ஒருவரையொருவர் ஏற்று அன்பு செய்து வாழுகின்ற மனப்பக்குவமும். எமது இல்லங்களிலும், எமது சமுதாயத்திலும், அனைத்து பணித்தளங்களிலும் சிறு சிறு குழுக்களாக ஊன்றப்பட வேண்டும்.

இறை பணித்தளம் ஒரு குடும்பம் எனப்படுகிறது. குடும்பம் மறை மாவட்டத்தின் ஓர் உயிரணு என்கிறது வத்திகான் சங்கம். இந்த உயிரணுக்கள் பத்துப் பதினைந்து ஒன்றிணைந்து இறை வார்த்தையை மையமாகக் கொண்டு இறையாட்சியின் மதிப்பீடுகளாகிய அன்பு, நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவம் மலர வாழ்க்கையின் எல்லா நிலைகளையும் அனுபவத்துணையோடு அலசி ஆராய்ந்து செயல் திட்டம் தீட்டி ஓர் உறவுச் சமூகத்தை உருவாக்க முயல்வதுதான் இச்சிறு குழுவான அன்பியத்தின் பணி. சாதி, இன பேதமின்றி ஒருவரையொருவர் அறிந்து ஏற்று அன்புறவு மதிப்பீட்டை நோக்கி பயணம் செல்ல வழிசெய்யும் அமைப்பு முறை அல்லது அணுகு முறைதான் அன்பியம்.

### 2. அர்த்தமுள்ள வழிபாட்டிற்கு வழிவகுக்கும் அன்பியம்

வாழ்கையின் எதார்த்தங்களோடு வழிபாடும் வார்த்தையும் இணைகின்றபோது அதன் தாக்கமும் அதிகரிப்பது போல பல்வேறுபட்ட வசதி, வசதியீனங்களோடு தங்கள், தங்கள் வதிவிடங்களில் கூடி வருகின்ற இத் திருக்கூட்டமும் தாங்கள் வாழ்வில் சந்திக்கின்ற இன்ப துன்பங்களை ஒருவரோடு ஒருவர் சகோதர உறவோடு பகிர்ந்து கொள்ளவும் ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் செபிக்கவும். இறை வார்த்தையைப் படிக்கவும் அதனைத்தங்கள் வாழ்க்கைச் சூழலோடு பொருத்திப் பார்க்கவும் இங்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அ) ஞாயிறு திருப்பலிகள், விசேட திருவிழாத் திருப்பலிகள் அன்பிய குழுக்களின் பங்களிப்புடன் இன்னும் சிறப்பாக, பக்தி பூர்வமாக சிறப்பிக்க முடிவதுடன் அனைவரும் பங்களித்தோம் என்ற மன நிறைவையும் பணித்தள மக்களுக்கு அளிக்கக் கூடியதாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) விட்டுக் கொடுத்தல், மற்றவர்களோடு சேர்ந்து திட்டமிடுதல், பங்களித்தல், பிறரையும் பொருட்டாக மதித்தல். இலை மறை காயாய் மறைந்திருக்கும் திறமைகளைக்கண்டு பிடித்தல் அவற்றை வெளிக் கொணர்தல் எனலாம்.

### 3. பங்கேற்கும் திருச்சபையை உருவாக்கும் அன்பியம்

இறையாட்சியை இம் மண்ணில் பரப்ப வேண்டியது திருமுழுக்கு பெற்ற நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதற்கு பணிக்குருத்துவத்தார், பொது நிலையினர், துறவிகள், அனைவரும் இணைந்து செயற்படுதல் இன்றியமையாததாகும். இதனை குருக்களும் துறவியர்களும் மாத்திரம் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்ப்பது தவறானதாகும். இது அனைவரினதும் கூட்டு முயற்சியாக உருவாகுதல் வேண்டும். அன்பிய மக்கள் அனைவரும் அருள் பணியாளருக்கு அப்பணியில் உதவி செய்து அவரது இறையாட்சியை பரப்பும் பணிக்கு தோளோடு தோள் நின்று உதவி செய்வார்கள். இதனால் இப்பணி இறை மக்களால், இறை மக்களுக்காக இறைமக்களுடன் என்ற நிலை உருவாகி அதிகார திருச்சபை மறைந்து அடியவர் திருச்சபை, உருவாக முடியும். இங்கு அனைவரும் வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும், மறை பரப்புப் பணிகளிலும் சமமான முறையில் பங்கு ஏற்கவும், கருத்துக்களை வெளிப்படுத்தவும், அவைப்பற்றி கலந்துரையாடவும் வாய்ப்பு ஏற்படும்.

### 4. சமத்துவ சமுதாயம் படைக்கும் அன்பியம்

அன்பியத்தில் இணைக்கப்பட்டுள்ள அடிப்படைக் கிறிஸ்தவ குழுக்களே எதிர்காலத்தில் சமத்துவ சமுதாயம் படைக்கவல்லன. எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக *(யோவான் 17:21)* என்ற யேசுவின் வார்த்தைகளுக்கேற்ப இங்கு மக்கள் வேறுபாடுகளைக் களைந்து குடும்ப உணர்வோடு கூடிவருவர். முதலாளி, தொழிலாளி, தலைவன், தொண்டன், ஆண்டான், அடிமை நிலை மாறி ஆள்பவரும் ஆளப்படுபவரும் சரிசமம் என்ற உணர்வோடு எல்லோரும் வரவேண்டும். பொருள் படைத்தோர் கிறிஸ்தவ உணர்வோடு ஏழை மக்களுக்கு உதவ வேண்டும். பொதுப் பிரச்சினைகள் அலசி ஆராய்ந்து கூட்டு முயற்சி மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இதனால் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அருள்பணியாளர் தான் முடிவு எடுக்கவேண்டும் என்ற நிலை மாறும். குழுக்களின் பொறுப்பணர்ச்சி அதிகரிக்கும். பொது நிலையினர் புதுப்புதுக் காரியங்களில் ஈடுபடுவர். நான் வாழ பிறரும் பிறர் வாழ நானும் என்ற நிலை தோன்றும். நான் நன்கு வாழ வேண்டும் என்றால் ஏனையோரும் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணம் உதயமாகும்.

### 5. உறவுச் சமூகம் அன்பியம்

ஆதிகாலத்தில் திருச்சபையின் மக்கள் ஒரு திருச்சமூகமாக கூடிவந்தார்கள். ஒவ்வொருவரினதும் தேவைகளில் உடனிருந்து உதவி செய்வதை பழக்கமாகக்கொண்டிருந்தார்கள். நில புலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். *(தி.ப.2:45)* ஆனால் இன்று நடப்பது என்ன? ஞாயிறு திருப்பலிக்கு வரும் திருக் கூட்டம் உடனே கலைந்து விடுகிறது. ஞாயிறு தினம் ஓய்வு நாளாக இருந்தும் கூட திருப்பலியின் கடைசி ஆசீருக்கு முன் புறப்பட்டு விடும் திருக் கூட்டத்தாரும் நம்மிடையே உண்டு. கோயிலில் அருகருகே அமர்ந்திருந்தவன் கூட யார் என்று தெரியாத புரிந்துகொள்ள விரும்பாத நிலை காணப்படுகின்றது. அருகே அமர்ந்திருந்தவன் யார் என்று தெரியாவிட்டால். அவனது தேவை என்ன? அவனது மனக்குறை என்ன என்று நமக்கு எங்கே தெரியப்போகின்றது? ஆனால் அன்பியக் குழுக்களில் சேர்ந்து பழக, அதனால் ஒருவரையொருவர் அறிந்து உறவாட பெயர்சொல்லி உரிமையோடு அழைக்கக் கூடிய நிலை உருவாகும் போது ஓர் உறவுச் சமூகம் பிறக்கின்றது. இங்கு யாரும் தனித்து விடப்படுவதில்லை. ஒவ்வொரு ஆளும் என் தேவையில் நான் தனியாக இல்லை. எனக்குப் பின்னால் என் சமூகம் இருக்கின்றது என்ற நம்பிக்கை நிலைக்கு வருவர். அவரது தனிமை உணர்வு அகற்றப்படும். குழு மனப்பான்மை உருவாகி மற்றவர் தேவையிலும் அவர் பங்கேற்கக் கூடியவராவார். இங்கு ஒரு குடும்ப உணர்வு அடித்தளத்தில் இருந்து உருவாகும் இவ்வுணர்வில் ஒருவர் தன்னோடும், பிறரோடும் சமூகத்தோடும் இயற்கை யோடும் எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனோடும் ஒப்புரவாகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. திருச்சபையை மக்கள் மயமாக்கும் அன்பியம்**

இறைமக்களின் திருக் கூட்டமே திருச்சபை என்கிறது வத்திகான் சங்கம். மேல் இருந்து கீழ் நோக்கி என்று திருச்சபையில் இருந்த செயற்பாடுகள் அனைத்தையும் கீழ் இருந்து மேல் என்ற நிலைக்கு இக் கிறீஸ்தவ குழுக்கள் மாற்றமடையச் செய்யும். இச் சிறு கிறிஸ்தவ குழுமங்களில் பங்கு பற்றும் ஏழைகளும், வசதி படைத்தோரும் இணைந்து முன் வைக்கும் செயற்திட்டங்கள் பணித்தளங்களில், கோட்டங்களில், மறை மாவட்டங்களில் என்று ஏறிச் சென்று திருச்சபையின் கருத்தாக மாறும். அருள் பணியாளர்கள் பங்குப்பேரவையினர். அன்பிய அங்கத்தவர்கள் சேர்ந்து எடுக்கும் தீர்மானங்கள் பெறுமானம் மிக்கதாக அமையும்.

**7. தலைமைப் பண்பைத் தரும் அன்பியம்**

அன்பியக் குழுக்களிலே நிலையான தலைவர், செயலாளர் என்ற நிலை இல்லை. இருப்பினும் தலைவர் நிலைலயில் இருக்க அனைவருக்குமே வாய்ப்புக் கிடைக்கும். இதன் மூலம் அனைவரினதும் தலைமைப் பண்பு வளர- பங்கு பேரவைக்கு தகுதியான உறுப்பினர்கள் தெரிவாக. ஒவ்வொருவரின் திறமைகளும் வளர்க்கப்பட சந்தர்ப்பங்கள் கிடைக்கும். திருக் கூட்டத்தாரை வழி நடத்தவும், அவர்கள் முன் பேசவும், சாதாரண மக்களும் தகுதி பெறுகின்றார்கள். இன்னும் சிறப்பாக ஒவ்வொரு அன்பியத்திலும் கலைக்குழு, திருவழிபாட்டுக் குழ, குடும்ப நலவாழ்வுக் குழு, ஆலோசனைக் குழு, சிறுவர் குழு போன்றவை அமைக்கப்பட்டால் ஒரு ஓட்டு மொத்தமான கூட்டு முன்னேற்றம், தலைமைப்பண்பு பணித்தளங்களில் உருவாகும்.

**8. புதுப் பிறப்பாகும் அன்பியம்.**

குடும்பத்தில் இருந்து சமுதாயம் மலர்கின்றது. இதே போல பணித்தளங்களில் உள்ள எல்லாக் குடும்பங்களும் சிறு சிறு குழுக்களாக கூடிவந்து தங்களுக்கு முடிந்தவற்றை பணித்தளங்களில் ஆற்றும் போது கிறிஸ்தவ சமூகம் கட்டி எழுப்பப்படுகின்றது. இங்கு வேறுபாடுகள் களையப்படும், ஒற்றுமை பெருகும், தனித்து விடப்பட்டோர் கவனிக்கப்படாதோர் என்று யாரும் இருக்கமாட்டார்கள், இதுவே யேசுகண்ட இறையாட்சி சமுதாயமாக இருக்கும்.

இவ்வாறு ஆதிக்கிறீஸ்தவ சமூகத்தைப் போல நம் பணித்தளங்களில் ஓர் உறவுச் சமுதாயம் படைக்க முன்வருவோம். நமது வாழ்க்கையை நற்செய்தி ஒளியில் அலசி, இறை நம்பிக்கையை ஆழப்படுத்தவும், ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து அனைவரும் இணைந்து செபிக்கவும். பிறரது இன்ப துன்பங்களில் எல்லோரும் பங்கேற்கச் செய்வதும் இன்றியமையாததாகும். இறை மக்கள் மனங்களில் பகிர்தல் மனப்பான்மையை உருவாக்குவதும். இணைந்து திட்டமிட்டு செயல் படுவதும் இதைத் திறனாய்வு செய்வதும் சிறு சிறு குழுக்களிலே எளிதாக அமையும். இச்சிறு குழுக்களிலே உள்ள திறமைகளை இனங்கண்டு வளர்க்கவும். அவற்றைப் பயன்படுத்தவும் இலகுவாக வாய்ப்புக் கிடைக்கும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தலைமைத்துவப் பண்பை உருவாக்கவும். அந்தத் தலைமைத்துவப் பண்பைக் கொண்டு சமூக நலனையே மனத்தில் இருத்தி சமூக, பொருளாதார, அரசியல் காரியங்களில் கூட விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றில் மக்களை ஈடுபடுத்தவும் கூடியதாகவும் அமையும். மறைமாவட்டப் பேரவையின் செயற்பாட்டை அடிமட்டத்திற்கும் அடி மட்ட மக்களின் வேண்டுகோள்களை மறைமாவட்டப் பேரவைக்கும் கொண்டு செல்லக் கூடியதாக அமையும். இவை நிறைவேறும் சமயத்தில் இறைவன் கண்ட இறையாட்சியும், புதுச்சமுதாயமும் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ்**

**மார்ச் மாதத் தொண்டன் உயிர்ப்பு விழாச் சிறப்பு மலராக மலரும். ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் பெப்ரவரி 15ம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு



உலகெங்கும் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் மகிழ்வுடன் கொண்டாடும் பெருவிழா கிறிஸ்து பிறப்பு விழாவாகும். விண்ணாளும் வேந்தன் இம் மண்ணுக்கு மனிதனாகி வந்த நாள். காலங்களைக் கடந்தவர் கால வரையறைக்குள் தன்னை உட்படுத்தினார். படைப்பின் தலைவர் படைப்பாளர். வாழுமுன் வரலாறு வகுத்தவர் வரலாற்றுக்குள் நுழைந்தார். சுருங்கக் கூறின் கடவுள் மனிதனைத் தேடிவந்த திரு நாள்தான் கிறிஸ்மஸ் பெரு விழாவாகும்.

இத்தகைய ஒரு முக்கியமான நாளில் எம் மனதிலே சில வினாக்கள் எழுவது இயற்கையே. கிறிஸ்மஸ் எனும் போது கிறிஸ்து பிறப்பைப் பற்றிச் சிந்திப்பதா? அல்லது கிறிஸ்து பிறப்பு விழாவைப்பற்றிச் சிந்திப்பதா? 2000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த வரலாற்று நிகழ்வைப் பற்றி ஆராய்வதா? அல்லது இன்றைய சூழலில் அவரது பிறப்பின் அர்த்தம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முற்படுவதா? கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட மதத்தினரின் சொத்தா? அல்லது அவர் மனித குலத் துக்குச் சொந்தமானவரா? இது போன்ற வினாக்களுக்கு விடை தேடும்போது நிச்சயமாக கிறிஸ்து பிறப்பின் மகத்துவத்தை உணரலாம் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் அவதரித்த கிறிஸ்துவின் பிறப்பை இன்றைய வரலாற்றுச் சூழலில் அறிந்து கொள்வதில்தான் அர்த்தம் உள்ளது எனக் கருது கிறேன்.

இன்றைய உலகச் சூழலைப் பார்க்கும்போது ஓர் அடிப்படையான யதார்த்தம் நம் கண்களுக்குப் பளிச் சென்று புலனாகின்றது. மனிதகுலம் சாவுக்கும் வாழ்வுக்குமிடையே, அழிவுக்கும் ஆக்கத்திற்குமிடையே, வீழ்ச்சிக்கும் எழுச்சிக்குமிடையே தவித்துக் கொண்டிருக்கிறது. மனித குலத்தை வேரோடு அறுத்தெறியக்கூடிய சக்திகளில் முதன்மையாகத் திகழ்வது ஆயுத வன்முறையாகும். ஆயுத பலத்தால் எவரையும் அடக்கிவிட முடியும் என்ற கருத்து பரவலாக மக்களிடையே எழுந்து விட்டது.

ஆயுதக் கலாச்சாரத்தின் பலங்களை நாம் தினமும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இத்தகைய நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவே அமைதியின் தூதர் அவதரித்தார். அவர்தம் ஆட்சியில் நிலவும் முடிவில்லா அமைதி பற்றி இறைவாக்கினர் எசாயா பின் வருமாறு காட்சி கண்டார்.

'அவர்கள் தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கரிவாள் களாகவும் அடித்துக் கொள்வார்கள். ஓர் இனத்திற்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது;அவர்கள் இனி ஒரு போதும் போரப் பயிற்சி பெற மாட்டார்கள்'

(எசாயா 2:4)

அமைதியின் தூதரான கிறிஸ்து வன் முறையில் இறங்கவில்லை. வன்முறையைப் போதிக்கவும் இல்லை. 'வாள் எடுத்தவன் வாளால் மடிவான்' என்று கூறிய கிறிஸ்து நீதிக்காக, நேர்மைக்காக, உண்மைக்காக; மக்களின் நல்வாழ்வுக்காக போராடினார். அரசியல் தலைவர்களையும், சமயத்தலைவர்களையும் கடுமையாக எச்சரித்தார். அவர்களின் போலி வேடங்களை உரித்தெறிந்தார். அதற்கு அவருக்குக் கிடைத்த பரிசு சிலுவை மரணம்.

கிறிஸ்து பிறந்து 2000 ஆண்டுகள் முடிந்த பின்பும் அவர் கண்ட இலட்சியக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு பகற்கனவாகி விட்டதா என்ற வினா எல்லோரை யும் சிந்திக்கவைக்கிறது. இயேசுவின் இலட்சியக் கனவை நனவாக்குவதும், பகற்கனவாக் குவதும் அவரைப் பின்பற்றுகிறவர்களாகிய எம் கரங்களிலேயே உண்டு. கிறிஸ்துவைப் பற்றி ஆயிரம் போதித்தும் பயனில்லை. இன்று மக்கள் வார்த்தையை விட வாழ்க்கைச் சான்றையே எதிர்நோக் குகின்றனர். இயேசுவைப் போல் இருப்பதும், இயேசு வைப்போல் சமுதாயத்தில் செயல்படுவதும் தான் இன்றைய சூழலில் ஏற்புடைய நற்செய்திப் பணியாகும். வன்செயலுக்கெதிராக அறிக்கையிடுவது, வன் முறைகள் குறைய வேண்டுவது; வன்செயலினால் பாதிக்கப் பட்டவர்களுக்காக உதவி செய்வது போன்ற செயற்பாடுகளுடன் மட்டும் திருப்தியடையாது, அதிகா ரத்தில் உள்ளவர்கள் தொடக்கம் சாதாரண பொது நிலையினர் வரை அனைவரும் இணைந்து மக்கள் இயக்கமாக எழுச்சிபெற்று வன்செயல்களுக்கெதிராக போர்க்கொடி தூக்கி தெருவில் இறங்கிப் போராட முன்வர வேண்டும். வன்செயலை வன்செயலால் நிறுத்த முடியாது. அகிம்சை வழியே எம்பெருமான் இயேசு காட்டிய வழி யென உலகுக்கு நிரூபிப்போம்.

ஆயுத வன்முறைக்கு அடுத்ததாக பொருளா தாரப் பலாத்காரம் தலைதூக்கியுள்ளது. பணக்கார முதலைகள் கொழுத்து வளர்கின்றன. ஏழைகள் நசுக்கப் பட்டு ஒடுக்கப்படுகின்றார்கள். உள்ளவன் இல்லாதவன், பணக்காரன் ஏழை என்ற விரிசல் நாளுக்கு நாள் விரிவடைந்து வருகிறது. இத்தகைய நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முன்வந்தார் கிறிஸ்து. தமது பிறப்பின் நோக்கத்தை எசாயா இறைவாக்கினர் முன்ன றிவித்திருக்கின்றார் என்பதனை பணியின் ஆரம்பத் திலேயே தெளிவு படுத்துகின்றார்.

‘ ஆண்டவருடைய ஆவி
என்மேல் உள்ளதுது
ஏனெனில் அவர் எனக்கு
அருள் பொழிவு செய்துள்ளார்
ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும்
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்
பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும்
ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு
அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்’

(லூக் 4: 18-19)

இயேசு எளிமையிலே பிறந்தார். ஏழையாக வாழ்ந்தார். ஏழைகளையே தம் நணபராக்கினார். இயேசு வின் தனிப்பட்ட கரிசனைக்கு உள்ளான மக்களைக் குறிக்க நற்செய்தி நூல் பல்வேறு சொற்களை பயன் படுத்துகின்றது. இயேசுவின் இலட்சியக் கனவு ஒரு சமத்துவமான சமூகமாகும். இதற்காக உழைக்க வேண் டியது திருச்சபையின் கடமையாகும். ஆனால் திருச் சபையாகிய நாம் இன்று பல்வேறு மட்டங்களில் பணத்தை முடக்கிக் கொண்டு, இருக்கின்றோமே யொழிய, நிரந் தரமான வறுமை ஒழிப்புத் திட்டமொன் றினைத் தீட்டி சமூகச் சீரமைப்புக்கு வழிகோல முயலவில்லை. வெளி நாட்டுப் பணத்தை நம்பியிருக்கின் றோமோயொழிய எமக்கென எதிர்காலத் திட்டடங்களை வகுத்து ‘வாங்கு பவர்கள் இல்லை; கொடுப்பவர்கள் உண்டு’ என்ற நிலை உருவாக வழி வகுக்கவில்லை.

மனித உள்ளங்களில் வாசம் பண்ண வந்த மனுமகனைக் குறிப்பிட்ட மதத்துக்குள், மனித மதிற் சுவர் களுக்குள் அடக்கிவிட முயல்கின்றோம். இயேசு மனித குலத்திற்குச் சொந்தமானவர். வரலாற்றில் எழுந்த கிறிஸ்தவ சமயம் இயேசுவைத் தனக்கே உரித்தான சொத்து என்று கருதுவது பொருத்தமற்றது.

அவர் பிறந்தபோது வானதூதர் அறிவித்த நற் செய்தி எல்லாருக்கும் பொதுவானது. ‘இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற் செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்’ (லூக் 2:10) மதிற் சுவர்களுக்குள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருள்ள ஆவியை முடக்கிவிட முயல்கின்றோம். நமது ஆலயங்களில் நடைபெறும் வழிபாடுகள், கையால் கட்டப்படாத ஆலயங்களின் வழிபாட்டுக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

'காலம் வருகிறது: ஏன் வந்தே விட்து! அப் போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர்'
(யோவான் 4:23)

நான்; எனது குடும்பம்; எனது உறவினர்; எனது சாதி; எனதுமொழி; எனது இனம் என்ற குறுகிய பார்வையை விட்டு விட்டு நாம்; நமது என்ற விரிந்த எண்ணத்துடன் வாழ முயல்வோம். கிறிஸ்து பிறப்பின் அர்த்தமும் அப்போதுதான் புலனாகும். ◆

◆ **அருள் தந்தை பீ. ஜோசப்**

# புலவரின் புலமைத்திறம்!

**நாற் குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா**
**ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா – வேற்படையும்**
**வாளுமே கண்ணாவதன மதிக்குடைக்கீழ்**
**ஆளுமே பெண்மை அரசு**

நளவெண்பாவில் வரும் ஒரு வெண்பா இது நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எனப்படும் நான்கு பெண்மைக் குணங்களுமே நால்வகைச் சேனைகளாகவும்மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்புலன்களுமே நல்ல அமைச்சர்களாகவும் ஒலி முழங்கும் காற்சிலம்பே அழகிய முரசாகவும் கண்களே வேற்படையும் வாளுமாகவும் கொண்டு தன் முகமாகிய நிலாவட்டக்குடையின் கீழ் பெண்மை அரசு செய்கிறது இவள்தான் தமயந்தி ஆவாள்

நாம் எவருமே தமயந்தியைக் கண்டதில்லை ஆனாலும் புலவரின் கவிதை அவளை உருவகப்படுத்தி படம் போல நமக்குக் காட்டுகிறது. எவ்வளவு அற்புதமான கற்பனை நயம் செறிந்த பாடல் இது! புதிதாக புதுக் கவிதையில் கைவைத்தவர்கள் தயவுசெய்து இப்படியான கவிதைகளில் கண்வைக்க வேண்டும். பழைய மரபுக்கவிதைகளில் எதுவுமே இல்லையென்று சும்மா எழுந்த மானத்திற்கு சொல்லல் சுலபம். பழைய மரபுக்கவிதைகளைப் படித்தால் புதுக்கவிதையில் எதுவும் இல்லை என்பதை சுலபமாகச் சொல்லி விடுவார்கள்.

**செ. குணரத்தினம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் 2002

இயேசுக்கிறிஸ்து தனது பன்னிரு திருத்தூதர்களின் அடித்தளத்திலே திருச்சபையை உருவாக்கிய பொழுது, அது பிளவுபடாமல் காலமெல்லாம் ஒரே சபையாகக் கிறிஸ்தவ ஒற்றுமையின் சின்னமாகத் திகழ வேண்டுமென்பதையே தனது குறிக்கோளாகவும் கொண்டிருந்தார் என்பதில் எந்த ஐயமும் கிடையாது.

"நான் உனக்குக் கூறுகிறேன் : உன் பெயர் பாறை. இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா". (மத். 16 : 8).

"எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே, நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பதுபோல், அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்". (யோவா. 17 : 21)



புனித மத்தேயு, புனித யோவான் ஆகியோர் எழுதிய நற்செய்தி ஏடுகளில் காணக்கிடக்கும் இவ் வார்த்தைகள் திருச்சபை மட்டில் கிறிஸ்து கொண்டிருந்த மனநிலையையும் எதிர் நேக்கையும் தெளிவாகச் சித்தரித்துக் காட்டுகின்றன. இதனை நினைவிற் கொண்டே, திருச்சபையின் விசுவாசப் பிரகடனத்திலும் திருச் சபையின் ஏகத்துவம் துல்லியமாகத் தொகுக் கப்பட்டுள்ளது :

"ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, திருச்சபையை விசுவசிக் கின்றேன்".

ஆரம்ப காலத்திலிருந்தே திருச்சபையின் இந்த ஒருமைப்பாட்டிற்குப் பலவகையான இடர்களும் இடையூறுகளும், சவால்களும் தோன்றாமலில்லை. மாறுபட்ட போதனைகளாலும், விசுவாச விளக்கங்களாலும், நடைமுறைப் பிரச்சினைகளாலும் பல பிளவுகள் ஏற்பட்டன. திருச்சபையின் ஒற்றுமையும் ஏகத்து வமும் குலைந்து போகக்கூடி சந்தர்ப்பங்களும் உருவாகின. ஆயினும் ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட இப்பிளவுகள் திருச்சபையின் ஒருமைப்பாட்டை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. பொதுச் சங்கங்கள் மூலமாகப் பிரச்சினைகளுக்கும், பிரிவினை வாதங் களுக்கும் தீர்வு காணப்பட்டன.

இவ்வாறு கி.பி. 190ல் திருச்சபையிலே, கிறிஸ்துவின் உயிர்ப்புத் திருநாள் (Easter) எப்போது கொண்டாடப்படல் வேண்டும் என்பதையிட்டு வாக்குவாதங்களும் சர்ச்சைகளும் ஏற்பட்டன. அவ்வேளை பாப்பரசராய் இருந்த புனித முதலாம் விக்டர் (Pope St. Victor I) இப்பிரச்சினையினால் பாதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் இருந்த ஆயர்கள் ஒன்று கூடி, ஆராய்ந்து, தங்கள் கருத்துக்களையும் கண்டுபிடிப்புக்களையும் தனக்கு அறிவிக்குமாறு பணித்தார். இதனால் பலஸ்தீனாவிலும், சின்னாசியாவிலும், பிரான்சிலும் பல சங்கங்கள் கூடிக் கலந்தாலோசித்தன. அறுபது ஆண்டுகளின் பின் வட ஆபிரிக்காவின் புனித சீப்பிரியனுடைய காலத்துடன் இப்பிரச்சினை ஓரளவு தீர்ந்து போவதையும், அமைதி ஏற்படுவதையும் காண முடிகின்றது.

நான்காம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், ஆபிரிக்காவில் உருவாகின டொனற்றிஸ்ட் (Heresy of Donatism) பிரிவினை வாதமும், அதற்குச் சில வருடங்களுக்குப் பின் உருவாகிய ஆரியன் (Arian heresy) பிரிவினை வாதமும் திருச்சபை ஆயர்களின் பொதுச் சங்கங்கள் ஊடாகத் தீர்வு காணப்படுவதையும், திருச் சபையின் ஒற் றுமை பாதுகாக் கப்படு வதையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

ஆனால் கி.பி. 1054ல் ஏற்பட்ட பிளவு திருச்சபையைக் கிழக்கு மேற்காகத் துண்டாடிப் பாரிய பிளவினை ஏற்படுத் தியது. 9ம் சிங்க ராயர் பாப்பரசர் காலத்தில் கொன்ஸ்ரான்ரி நோபிள் (Constanti nople) நகரின் குலமுது ஆயர் மைக்கல் செறுள்ளா றியுஸ் (Patriarch Michael Cerullarius) பாப்பரசரின் மேலதிகாரத்தை ஏற்க மறுத்தபோது,

அங்கு பிரசன்ன மாயிருந்த பாப்பரசரின் பிரதிநிதி கருதினால் 'ம்பேட் அவர்கள் குலமுது ஆயரை திருச்சபையிலிருந்தே வெளியேற்றம் (Excommu-nication) செய்தார். உடனே குலமுது ஆயர் மைக்கல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செறுள்ளாறியுஸ் அவர்களும் பாப்பரசரைத் திருச்சபை யிலிருந்து வெளியேற்றம் செய்தார். இந்த வேதனை மிகுந்த நிகழ்ச்சி யூலை மாதம் 16ம் நாள் 1054ல் நடைபெற்றது. அதுவரை ஆயிரம் ஆண்டு களாகப் பாரிய பிரி வினைகள் எதுவுமின்றி ஒன்றாயிருந்த திருச் சபை அந்நாளி லிருந்து இரண்டாகப் பிளவு பட்டது, கிழக்கு மேற் காகப் பிரிந்து போனது. ஆயினும் கிழக்குத் திருச்சபையின் ஒரு பகுதி உரோமை யில் இருந்து பிரியாமல் இணைந்து நின்றது. பிரிந்து போனவர்களை (Eastern Orthodox Chruch) ஈஸ்டன் ஒத்தொடக்ஸ் திருச்சபை என்று அழைக்கப்பட்டனர்.

இதன் பிறகு 16ம் நூற்றாண்டிலே மேற்குத் திருச்சபை யில் ஏற்பட்ட மதச் சீர்திருத்தப் பிரச்சாரங்களினால் மேற்குத் திருச் சபை இன்னும் பல கூறுகளாகப் பிரிந்தது. இவ்வாறு மாட்டின் லூத்தர், சுவிங்கிளி, கல்வின், இங்கிலாந்தின் 8ம் ஹென்றி மன்னன், ஜோண் வெஸ்லி ஆகியோரன் தலைமையின் கீழ், லூதரன் சபை என்றும், புரட்டெஸ்டான்ட் சபை என்றும், கல்வின் சபை என்றும், அங்கிளிக்கன் சபை என்றும், பல சபைகள் உருவாகின.

15ம் நூற்றாண்டில் அமெரிக்காவும் இந்தியாவும் ஐரோப்பியர்களால் கண்டு பிடிக்கப்பட்ட போது, இப்பகுதிகளுக்குப் புதிய கடல் வழிப்பாதைகள் திறக்கப்பட்டன. இதன் பின்னர் ஐரோப்பியர்கள் புதிய நாடுகளைக் கைப்பற்றவும் வியாபாரத்தில் ஈடுபடவும் இப்பகுதிகளை நோக்கிப் புறப்பட்டனர். இவ்வாறு போனவர்கள் ஆரம்பத்தில் கத்தோலிக்க நாடுகளான போர்த்துக்கல்; ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாயும் அந்நாட்டு அரச உதவி கொண்டவர்களாயும் இருந்ததினால், இவர் களுடன் கத்தோலிக்கக் குருமாரும் மறைபரப்பவெனப் புறப்பட் டனர். கைப்பற்றிய நாடுகளிலெல்லாம் கத்தோலிக்க மதத்தை நிலைநாட்டினர், கத்தோலிக்க திருச்சபையை உருவாக்கினர். பிற்காலத்தில், ஹொலன்ட் (ஒல்லாந்து), இங்கிலாந்து, ஜேர்மனி, ஆகிய நாடுகளும் ஒன்றன் பின் ஒன்றாகப் புதிய நாடுகளைக் கைப்பற்றிய வேளை அந்நாட்டின் பிரிவினைச் சபைகளின் போதகர்களும் ஆங்கே சென்று மறைப்போதனையில் ஈடுபட்டுத் தத்தம் சபைகளை உருவாக்கினர். இதனால் கிறிஸ்தவ மறைப் போதகர்கள், குருக்கள் மத்தியிலே பாரிய போட்டி மனப்பான்மை ஏற்பட்டது. எல்லாச் சபைகளும் தங்கள் சபைக்கு ஆட்களைச் சேர்ப் பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தனர். இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு யாவரும் நல்ல முறைகளையும் நலமற்ற முறைகளையும் கையாண்டனர் என்பதை இன்று நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்நிலையானது மறைபரப்புப் பணிக்கு உதவி செய் வதற்குப் பதிலாகத் தடைச்சுவராகவே இருந்தது. ஏனெனில் இவர் களுடைய போட்டி மனப்பான்மை, மக்கள் மத்தியிலே ஒரு வகை யான தயக்கத்தையே ஏற்படுத்தியது. இக்கிறிஸ்தவர்கள் ஒரே இயேசு க்கிறிஸ்துவைக் கடவுள் என்றும் ஆண்டவர் என்றும் ஏற்றுக் கொண்டு, ஒரே திருமுழுக்குடன், ஒரே விவிலியத்தைத் தங்கள் புனித நூல் என்று சொல்லிக்கொண்டு, தங்களுக்குள் பல வகையான பிரிவுகளைக் கொண்டிருக்கிறார்களே என்று மக்கள் ஆச்சரியப்படவும் இவர்களில் யாரை நம்புவது, யார் பக்கம் செல்வது என்று தெரியாமல் தத்தளிக்கவும் செய்தது.

இந்நிலையில் 1857ல் அங்கிளிக்கன் சபையினர் மத்தியில் ஒக்ஸ்போட் இயக்கம் (Oxford Movement) என்னும் பெயரில் ஒரு குழு இலண்டனில் உருவானது. இக்குழு கிறிஸ்த வர்கள் மத்தியில் பிரிவினைக்குப் பதிலாக ஒற்றுமையை உருவாக் குவதையே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் கிறிஸ்தவ ஒற்றுமைக்காக மன்றாடும் செபக்கூட்டமாகவே இது தொடங்கியது. பல சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும் இக் குழுவில் அங்கம் வகித்தனர். கத்தோலிக்கர்களும் அங்கத்தவர்களாய் இருந்தனர். ஆனால் 1867ல் உரோமையில் இருந்து ஆங்கிலேய கத்தோலிக்க ஆயர்களுக்கென விடுக்கப்பட்ட ஒரு மடலில் இவ் வியக்கம் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடத்தால் கண்டிக் கப் பட்டதைத் தொடர்ந்து கத்தோலிக்கர்கள் இதிலிருந்து விலகிக் கொண்டனர்.

அதே சமயம் 1862ல் ஜேர்மனியில் கிறிஸ்தவ ஒற்று மையை ஊக்குவிக்குமுகமாக; சால்மென்புண்ட் (Psalmenbünd) எனும் பெயருடன் இன்னுமொரு இயக்கம் உருவாகியது. இந்த இயக்கம் லூதரன் சபையைச் சேர்ந்த ஜூலி வொண் மஸ்ஸோ (Julie Von Massow) எனும் பெண்மணியால் ஆரம்பமானது. சில காலத்துக்குப் பின் இப்பெண்மணி, லூதரன் சபையை விட்டுக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து கொண்டார்.

1894ல். கிறிஸ்தவ ஒன்றிப்பை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் 13ம் சிங்கராயர் பாப்பரசர், அங்கிளிக்கன் சபையின் குருத்துவ நிலையை ஆழமாகப் படித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஓர் ஆணைக்குழுவை ஏற்படுத்தினார். அக்குழு ஓராண்டு காலம் ஆய்வு நடாத்தியபின் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ் வறிக்கையிலே அங்கிளிக்கன்சபையின் குருத்துவம் அப்போஸ்தல வழிமரபைக்கொண்டிருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனால் அங்கிளிக்கன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக் குருமாரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு இரு சபைகளையும் ஒன்று சேர்க்கும் பணியைக் கத்தோலிக்க திருச்சபை யினாற் செய்ய முடியாமற் போய் விட்டது. பதிலாக 1895ல், பிரிந்து போன கிறிஸ்தவர்களை மீண்டும் ஒப்புரவாக்கவென உரோமையில் புதிய ஓர் ஆணையம் நிறுவப்பட்டது.

1908ம் ஆண்டிலே அங்கிளிக்கன் சபையைச் சேர்ந்த ஸ்பென்சர் ஜோன்ஸ் (Spencer Jones) என்பவரும் அமெரிக்க எப்பிஸ்கோப்பேலியன் (Episcopalian Church) சபையைச் சேர்ந்த போல் லூயி வட்சன் (Paul Louis Wattson) என்னும் போதகரும் இணைந்து கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக் காகச் செபிக் கவெனக் கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தை ஆரம் பித்தனர். ஆனால் 1909ம் ஆண்டிலே வட்சன் அடிகள் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து கொண்டார். இதனால் பரிசுத்த தந்தை புனித 10ம் பத்திநாதர், வட்சன் ஆரம்பித்த கிறிஸ்தவ ஒற்றுமை வாரத்தைக் கத்தோலிக் கர்களும் கடைப்பிடித்துக் கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக மன்றாட வேண்டுமெனப் பணித்தார். இவ்வாறு மற்றக் கிறிஸ்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஒற்றுமை வாரம் கத்தோலிக்க திருச்சபையாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருடந்தோறும் ஜனவரி மாதம் 18ம் தேதி முதல் 25ம் தேதி வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இன்று இக் கிறிஸ்தவ ஒற்றுமை வாரம், அகில உலக மெங்கும் உள்ள எல்லாக் கிறிஸ்தவ சபைகளினாலும் கடைப்பிடிக் கப்பட்டு, கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒற்றுமைக்காக மன்றாடும் வாரமாகத் திகழ்கின்றது. நமது மறைமாவட்டத்திலும் இக் கிறிஸ்தவ ஒற்றுமை வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை யாவரும் அறி வீர்கள் என நினைக்கின்றேன். கடந்த வருடம் ஜனவரி மாதம் பல கிறிஸ்தவ சபையினரும் ஒன்று சேர்ந்து புனித மரியாள் இணைப் போராலயத்தில் ஒன்றாய்க்கூடி மன்றாடியது பலருக்கு ஞாபகம் இருக்கும். அதே போன்று 2002ம் ஆண்டிலும் நமது மறைமாவட்டத்திலும் ஜனவரி 18 முதல் 25 வரையான காலப் பகுதியில் கிறிஸ்தவ ஒற்றுமைக்காக மன்றாட அனைவரையும் திருச்சபை அழைக்கின்றது. இக்காலப் பகுதியில் மற்றக் கிறிஸ்த வர்களுடன் இணைந்து ஆண்டவர் இயேசு விரும்பிய ஒற்றுமைக் காக மன்றாடுதலும், சூழலுக்கேற்ப ஒன்றுசேர்ந்து சில செயல்களில் ஈடுபடுதலும் முக்கியமானதாகும். இவ்விடயங்களில் பங்குத் தந்தையரின் ஆலோசனை பெற்றுச் செயலாற்றுதல் சாலச் சிறந்தது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரிவினைகளுக்கும் பிளவு களுக்கும் கத்தோலிக்கர்களும் காரணமாய் இருந்திருக்கிறார்கள் என்று 2ம் வத்திக்கான் சங்கம் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்டுள்ளது. கத்தோலிக்கர்கள் அன்று விட்ட தவறுகளுக்காகப் பாப்பரசர் 2ம் அருள்சின்னப்பர் ஜுபிலி ஆண்டிலே மன்னிப்புக் கேட்டது யாவரும் அறிந்த விடயமே. அத்துடன் 1054ல் நடைபெற்ற கிழக்கு மேற்கான பிளவைச் சரிப்படுத்துமுகமாக 1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7ம் நாள் பரிசுத்த தந்தை 6ம் சின்னப்பர் குலமுது ஆயர் 1ம் அத்தனாகொறாஸ் (Patriarch Athanagoras I)அவர்களைச் சந்தித்து, இருவரும் சமாதானம் செய்து, பரஸ்பர மன்னிப்புக் கேட்டு, மன்னிப்பு அளித்து, முன்னர் செய்யப்பட்ட திருச்சபை வெளியேற்றச் சாபக்கேட்டையும் வாபஸ் பெற்றனர்.

இவ்வாறு இன்று கத்தோலிக்க திருச்சபை கிறிஸ்தவ ஒற்றுமையை முன்னெடுத்துச் செல்லும் பணியில் கூடிய அக்கறை கொண்டு இதற்காகத் தன்னையே புதுப்பித்துத் தன்னைக் கிறிஸ்து வின் திருமுக ஒளியைப் பிரதிபலிக்கும் அவரது திருச்சபையாக மாற்றியமைக்க முயற்சிக்கின்றது. இப்பணியிலே எல்லாக் கத்தோலிக்கர்களுக்கும் முக்கியமான ஒரு பங்கு உண்டு. இப்போது கிறிஸ்தவ ஒற்றுமை முயற்சிகள் என்பது ஒருசிலருக்கு மட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஒரு விசேட பணியன்று. மாறாக அகில உலகத் திருச்சபையின் எல்லா மக்களுக்கும் உரிய ஒரு முக்கிய மானதும் முதன்மையானதுமான பணியாகும். கத்தோலிக்கர்கள் இப்பணியில் ஈடுபடுவதற்குத் தங்களைத் தயாரிக்கு முகமாக 2ம் வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவ ஒற்றுமை பற்றி வெளியிட்ட அறிக் கையை நன்கு வாசித்துப் புரிந்து கொள்ளுதல் அவர்களின் தலையாய கடமையாகும். சங்கம் முடிந்த பின்பும் ஏராளமான அறிக் கைகளும் செயற்பாடுகளும் அகில உலகத் திருச்சபை மட்டத்திலும் பிராந்திய ரீதிகளிலும் உலகமெங்கும் நடைபெற்றுக் கொண்டே வரு கின்றன. இவை பற்றியும் அறிந்திருப்பது கட்டாயமாகும். அனைத் திற்கும் மேலாகக் கிறிஸ்தவ ஒற்றுமைச் செயற்பாடுகளில் பங்கெ டுப்பதற்கு ஏற்ற ஒரு மனப்பான்மையைக் கொண்டிருத்தல் அவசியம். ◆

*Rev. Dr. Dominic Saminathan*
*Eastern University – Sri Lanka,*

**முட்டையில் அரை வேக்காடு நல்ல தென் கிரார்கள் ஆனால் அறிவில் அரை வேக்காடு ஆபத்தானது. அது முட்டாளுக் குரியதாகும். அறிஞருக்குரியதல்ல, முட்டாள்தான் ஆபத் தானவன் என எல்லோரும் எல்லோரும் எண்ணு கின்றனர் ஆனால் அரைகுறை அறிஞனும் ஆபத்தானவன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை - அன்புவழிபுரம் தூய சதாசகாய அன்னை ஆலயத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா.

திருகோணமலை நகரில் யாத்திரை ஸ்தலமாக இருந்துவரும் பாலையூற்று ~ தூய லூர்து அன்னை ஆலயத்தின் இணைப்பங்கான அன்புவழிபுரம்~தூய சதாசகாய அன்னை ஆலயம் திறந்து திறந்து வைக்கப் பட்டது. 17.11.2001 அன்று 10வது ஆண்டு நிறைவை அடைந்துள்ளது.

கடந்த 17.11.2001 அன்று 10வது ஆண்டு நிறைவு விழாவை மிகவும் சிறப்பாக கொண் டாடும் முகமாக மறுநாள் அதாவது 18.11.2001 அன்று காலை 10வது ஆண்டு நிறைவு நினை வுச்சின்னமாக பங்குத்தந்தையின் முயற்சி யில் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிக்கப்பட்ட அரங்கு திரு கோணமலை மறைக் கோட்ட முதல்வர் அருள்தந்தை லீயோ அடிகளாரால் திற ந்து வைக்கப் பட்டது.



இந்த 10வது ஆண் டு நிறைவு நினைவுச் சின்னத்தின் பெயர் "De மசனெட் அரங்கு" இதன் உட் பொருள் ~ கடந்த வருடங்களாக பாலை யூற்று மண்ணில் தமது நற்செய் திப்பணியினை தொடர்ந்து வரும் அமலமரித் தியாகிகள் (O.M.I) சபை குருக்களின் ஸ்தாப கரான தூய இயூஜின் டீ மசனெட் அடிகளின் பெயரை மையமாக வைத்து "De மசனெட் அரங்கு" என்னும் பெயர் பங்குத்தந்தை ஜீவன தாஸ் அடிகளால் திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்ட புதிய அரங்கில் 18.11.2001 அன்று காலை 7.15 மணியளவில் மறைத் தூறலிலும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் அருள்தந்தை லீயோ அடிகள், பங்குத்தந்தை ஜீவனதாஸ் O.M.I, உதவிப் பங்குத்தந்தை யூஜின் O.M.I அடிகள் மூவரும் சேர்ந்து கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

இத்திருப்பலிக்கு அண்மைக்காலமாக எமது பங்கில் பணியாற்றிவரும் திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரிகள் கலந்து கொண்டனர். அத்துடன் எமது ஆலயத்தைச்சுற்றி உள்ள இந்து சகோதரர்கள் எப்போதும் எமக்கு உதவிசெய்து வருகின்றனர். அவர்களும் எமது 10வது ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டாத்தில் பார்வை யாளராகக் கலந்து கொண்டனர்.

இன்னும் 10வது ஆண்டுநிறைவு நினைவுச் சின்னம் அமைப்பதில் பங்குத்தந்தையின் ஆலோசனையில் பங்கு மக்களே முழுப்பொறுப்புக்களையும் ஏற்று அதை நிர்மாணித்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் விழாவின் இரண்டாவது நிகழ்வாக 18.11.2001 அன்று மாலை 5.30 மணியளவில் புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்ட அரங்கில் திருமலை உவர் மலைப்பங்குத்தந்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சீனக் குடா பங்குத்தந்தை அடிக ளுடன் கலைநிகழ்ச் சிகள் அரங்கேற்றப் பட்டன.

காலை நிகழ்ச் சியில் பலரத ரசனைக்கு விருந் தான பல நிகழ்ச் சிகள் அரங்கேற்றப் பட்டன. இதில் குறிப்பிடுவ தென்றால் தூய சதாசகாய அன்னை ஆலய (C.Y.A) க.இ. ஒன்றிய உறுப்பினர்கள் வேடர்களின் உடையில் மிலேனிய சினிமாப்பாடலுக்கு நடனமாடியது. மற்றும் தூய லூர்து அன்னை ஆலய க.இ.ஒன்றிய (C.Y.A) உறுப்பினர்கள் வழங்கிய "அழிகிறதே இளம் சமுதாயம்" என்னும் விழிப்புணர்வு நாடகத்தை அரங்கேற்றினர், அதுவும் சிறப்பாக இருந்தது மேலும் தூய அலோசியஸ் பீடப் பணியாளர் சபை (S.A.A.S) உறுப்பினர்களும் ஒரு நகைச் சுவை கலந்த நாடகத்தினை அரங்கேற்றினர். மற்றும் பரதநாட்டியம், மேற்கத்தைய பாடல்களுக்கு நடனம் வழங்கியது போன்ற நிகழ்ச்சிகள் அரங்கேறின.

இன்னும் இந்த கலைநிகழ்ச்சி, பார்வையாளர்கள் முகங்களில் ஒரு சந்தோசமான, வித்தியாசமான உணர்வு களை ஏற்படுத்தியது. அதாவது இன்றைய பொழுதை நன்றாகக் கழித்தோம் என்ற உணர்வு இருந்ததை எம்மால் உணர முடிந்தது.

இந்த நிகழ்வுகளுடன் அன்புவழிபுரம் ~ தூய சதாசகாய அன்னை ஆலயத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா நிறைவு பெற்றது. ◆

தகவல்: M.Y. தவராஜ்
யாத்திரை ஸ்தலப்பங்கு மகன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம் கரைந்த கதை

ஆழியோன்

சாய்மனைக்கதிரையில் சாய்ந்துகிடந் தவாறு அருளப்பு மாஸ்டர் சுருட்டைச் சப்பிச் சப்பி புகையை இழுத்து இழுத்து வெளியே விட்டுக்கொண்டிருந்தார். வீடு வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. நந்தார் புத்தாண்டுக்கலகலப்பு எல்லாம் ஓய்ந்து விட்டிருந்தது. வீட்டிற்குப் பூசிய வர்ணத்தீந்தையின் மணம் இன்னும் வீசிக் கொண்டிருந்தது.

ஓய்வூதியக்காரரான அருளப்பு மாஸ்டர் புகையை இழுத்து வெளியே விட்டார். புகை மென்மையயாக ஆடி யோடி மேலெழுந்தது. அப்புகையைப் போலவே அவரின் மனமும்



இலேசாய், பாரமற்று பஞ்சு போல் காணப்பட்டது.

ஆம்! அவரின் இருபத்தெட்டு வருட மனப் பாரம், அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்த மன உழைச்சல் இப்போது அக ன்று போய் விட்டிருந்தது. இவ்வருட நத்தார் அதற்கு வழிசமைத்து விட்டிருந்தது. அப்பாரம் என்ன, அது எப்படி நீங்கியது என்ற விபரங்கள் அருளப்பு மாஸ்டருக்கும் இன்னொரு வருக்கும்ந் தான் தெரியும். (இனி உங்களுக்கும் தெரியவரும். மனதிற்குள் போட்டுப் புதைத்து விடுங்கள்)

காலடியில் வாலையாட்டிக் கொண்டிருந்த 'வீமா'வின் தலையைத் தடவிவிட்டபடி 'மாஸ்டர்' பழைய நினைவுகளில் மெல்ல மெல்லப் புதைந்தார்.

ஆறு பிள்ளை கட்கு தந்தையயான அருளப்பு மாஸ்டர் பூரணபத்திமான். கிறிஸ்தவ விழுமியங் கட்குக் கட்டுப் பட்டு வாழ்பவர். எல்லா வற்றிற்கும் மேலாக சிறப்பான ஆசிரியர் ஓர் அதிபர் தனது சம்பளத்திற்குள் சிக்கனமாகக் குடும் பத்தை நடத்துபவர். அவருக்கு, அவரது மனைவி மேரியம்மா வாழ்க்கையில் பூரண ஒத்துழைப்பு வழங்கி வந்தார்.

இப்படி அமைதியாகச் சென்று கொண் டிருந்த அவரது வாழ்க்கையில் ஒரு புயல் வீசியது. மேரியம்மா ஏழாவது வாரிசையும் வயிற்றில் சுமக்கத் தொடங்கினாள். இச்சம்பவம் அருளப்பு மாஸ்டரின் மனதில் பயம், வெட்கம் என்பனவற்றை அலையலையாக எழுப்பிவிட்டது. மனதில் சூறாவளி சுழன்றது.

மூத்தமகள் ஏ. எல் படிக்கிறாள்: அடுத்த மகன் ஓ. எல் படிக்கிறான். இப்படியாக தொடராகப் பிள்ளைகள் படிக்கிறார்கள். இப்பிள்ளைகள் விசயம் அறிந்தால் தன்னையும், மனைவியையும் ஏளனமாகப் பார்ப்பார்களே என்ற வெட் கம் அவரைப் புரட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதமாக மனதில் பிடிப்பில்லை: நித்திரையில்லை. ஒரே கவலை. தினசரி இரண்டு செபமாலைகள் சொல்லிப்பார்த்தார். விவிலியத்தில் சங்கீதங்கள் படித்தார் எனினும் அவரது விசுவாசம் மெல்ல மெல்ல தகரத்தொடங்கியது.

இறுதியாக ஒரு முடிவை எடுத்தார். எடுக்கக் கூடாத முடிவை எடுத்தார். கருவைக் கலைத்து விடத் துணிந்தார். இதிலும் ஒரு சிக்கல். மனைவி சம்மதிக்கமாட்டாள் என்று அவருக்குத் தெரியும். பொய்யும் சொல்லத் துணித்தார். 'இப்படியான வேலைகள்' செய்யும் வைத்தியர் ஒருவரைச் சந்தித்தார். 'சிம்பிள் வேலை, ஊசி போட்டுக்கரைக்கலாம்' என்றார் வைத்தியர். பணம் கைமாறியது. விற்றமின் ஊசிகள் என்று மேரியம் மாவிற்கு கூறப்பட்டது. அவளும் சந்தோ சமாக ஊசிகள் ஏற்றிக் கொண்டாள்.

அருளப்பு மாஸ்டர் நிம்மதியடைந்தார். என்றாலும் கொலைக் குற்றவாளிபோல் மனதில் மெல்லிய அரிப்பு. பாடசாலை வேலைகளில் மெல்ல மூழ்கிவிட்டார். ஒரு நாள் மேரியம்மா அவரின் காதினுள் மெல்ல முணுமுணுத்தாள் 'டாக்குத்தரின் ஊசி நல்ல சத்தான ஊசிதான். உடம்புக்கு நல்லாத் தான் இரிக்கி' அருளப்பு மாஸ்டரின் காதில் இடி இறங்கியதுபோல் இருந்தது 'இன்னும் அது நடக்க வில்லையே..?'

மீண்டும்வைத்தியரிடம் மந்திராலோசனை: மீண்டும் ஊசிகள். வெற்றியில்லை. திரும்பவும் வைத்திய ஆலோசனை. வைத்தியர் கையை விரித்து விட்டார். தொடர்ந்து முயற்சி செய்தால் தாய்க்கு ஆபத்து.

மாஸ்டர் சோர்ந்து விட்டார். இனி என்ன செய்வது கடவுள் விட்ட வழி. ஆனால் அடுத்த பயம்.

போட்ட ஊசிகள் பிள்ளையைப் பாதித்து இருந் தால்..? பயத்தையும் கவலையையும் மற்றவர் களிடம் பங்கு கொள்ளவும் முடியாது. மெல்லவும் முடியாது. அருளப்பு மாஸ்டர் பட்ட அவதிகள் அவருக்கு மட்டுந்தான் தெரியும்.

பெரிய ஆஸ்பத்திரியில் போய் தாயையும், பிள்யையும் பார்த்த பிறகுதான் அவர் மனம் அமைதியடைந்தது. ஏழாம் கால் ஆண்பிள்ளை. கொழுகொழுவென்று பூரணவளர்ச்சி பெற்ற பிள்ளை. மெதுவாகக்கிள்ளிப்பார்த்தார், அழுகின் றதா என்று ... தனது கைகளை தட்டிப்பார்த்தார் சத்தத்திற்கு பிள்ளை திரும்பிப்பார்க்கின்றதா என்று... அவருக்கு நல்ல திருப்தி.

காலம் கடுகிவிரைந்தது. பிள்ளைகள் கடவுள் கிருபையில் வளர்ந்து நல்ல நல்ல உத்தி யோகமாகி, நல்ல இடங்களில் திருமண மாகி.. அருளப்பு மாஸ்டரும் பென்சனியர் ஆகிவிட்டார். இப்போது கடைசி மகனும் வளர்ந்து, அவனா கவே விரும்பி, நன்றாகப்படித்து குருவானவராகி விட்டான்(ர்)

என்றாலும் தன்னுடைய 'பாதர்' மகனைப் பார்க்கும்போது. அருளப்பு மாஸ்டருக்கு பழைய 'ரகசியங்கள்' மனதைவாட்டும். ஒரு குற்ற உணர்வு மனதை அரிக்கும். மற்றவர்களிடம் பகிரக் கூடிய ரகசியமா அது? பகிர்ந்து கொண் டால்தான் இந்த இருபத்தெட்டு வருட மனப் பாரம் நீங்கும்.

'பளிச்சென' ஓர் ஐடியா! இம்முறை நத்தார் விடுமுறைக்கு எல்லாப்பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் வந்திருந்தார்கள். இம்முறை நத்தார்பூசை அவரது பாதர் மகன்தான்.



நத்தாருக்கு முதல் நாள் 'பாதர் மகன்' தேவாலயத்திற்குச் சென்றிருந்தார். அருளப்பு மாஸ்டரும் கோயிலுக்குச் சென்றார். மகனைக் கூப் பிட்டார்.

'பாதர் நான் கொமிசம் செய்யனும்' என்றார்

'வேற பாதர் நிக்கிறார் அவரிட்ட போங்க...'

'இல்ல நீங்கதான் வேனும்..'

பாதர் மகன் ஆச்சரியப்பட்டார்

'சரிவாங்க'

பாவசங்கீர்த்தனத் தட்டியில் வைத்து மகனிடம் எல்லா ரகசியங்களையும் மெல்ல மெல்லச் சொன்னார்: பாவமன்னிப்புக் கேட்டார். கண்களில் கண்ணீர் ததும்பியது: எல்லாம் முடிந்ததும் பாதர் மகன் மெல்ல எழுந்து வந்து தகப்பனாரின் கைகளை அன்புடன் பற்றி. நெற்றியில் முத்தமிட்டார் புன்முறுவலுடன். அருளப்பு மாஸ்டருக்கு தான் அக்கணமே குழந்தைப் பிள்ளையாகிவிட்டது போல் ஓர் உணர்வு. மனப் பாரமெல்லாம் பஞ்சாயிற்று.

'வீமா குரைத்த சத்தம்கேட்டுநிமிர்ந்தார் 'இந்தாங்க தேத்தண்ணி..' மேரியம்மா. தேநீர்க் கோப்பையை ஒரு கையால் வாங்கியவாறு மறு கையால் மனைவியின் கையைப் பற்றிப் பிடித்து மென்மையாக முத்தமிட்டார்.

'இந்த மனிசனுக்கு என்ன நடத்திற திது?' என்று எண்ணியவாறு தனது தோள் களைக் குலுக்கிக் கொண்டாள் மேரியம்மா.

அவரின் பாரம் கரைந்த கதை அவளுக்கு எப்படிப் புரியும்?


க.பொ.த. உயர்தரம்
கிறிஸ்தவம்
(புதிய பாடத்திட்டம்)

விரைவில் வெளிவருகின்றன.

இரட்சணிய வரலாறு
- கடந்தகால வினாக்கள்
- புவியியல் வரலாற்றுப் படங்கள்

இலங்கைத்திருச்சபை வரலாறு
- கடந்தகால வினாக்கள்
- புவியியல் வரலாற்றுப் படங்கள்

உலகத் திருச்சபை வரலாறு
- கடந்த கால வினாக்களுடன்

புனித பவுலின் நிருபங்கள்
- விளக்கங்கள்
- கடந்தகால வினாக்கள்

நூல்களின் ஆசிரியர் -

அருட் திரு. S.A.I. மத்தியு
140, கார்மேல் பாத்திமாக் கல்லூரி வீதி,
கல்முனை.
தொலை பேசி : 067 - 21906



# ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத ஜனநாயகவாதிகள்!

அண்மையில் நடந்து முடிந்த 12வது பாராளுமன்றத் தேர்தல் நமது நாட்டில் நடைபெறுகின்ற ஜனநாயகத் (?) தேர்தல் என்பதன் உண்மையான முகத்தை மிகப் பிரகாசமாக வெளிப்படுத்தியுள்ளது.

'இனவாதிகளை மக்கள் ஓரங்கட்டியுள்ளனர்'

'சமாதானத்துக்கு மக்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்,

'உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதை மக்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்,

என்ற கோஷங்கள் ஒருபுறம் இருக்க, இவைகளை எல்லாம் எடுத்துக் காட்டிய இத்தேர்தல் எவ்வாறு நடை பெற்றது என்று எண்ணிப்பார்ப்பதும் அவசியமானது என்றே கருதுகிறேன்.

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் என்றுமே இல்லாத அளவுக்கு வன்முறைகள், கொலைகள், பலாத்காரங்கள் ஊழல்கள், மோசடிகள், அனைத்துக்கும் மேலாக கிட்டத்தட்ட ஒரு இலட்சம் வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டமை போன்ற ஒடுக்குமுறைகளுக்கு மத்தியிலேயே இத்தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது. இத்தேர்தலில் எத்தனை கள்ள வாக்குகள் எத்தனை நல்ல வாக்குகள் என்பது அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம். இந்த நிலையில் இதனை ஒரு ஜனநாயகத் தேர்தல் என்றும், இந் நாட்டை ஒரு ஜனநாயக நாடு என்றும் சொல்லிக் கொள்வதில் அர்த்தமுள்ளதா? ஜனநாயகம் என்பது சர்வாதிகாரத்துக்கும், அதிகார துஷ்பிரயோகத்துக்கும் போட்டுக் கொள்ளும் ஒரு முகமுடியாகவே காணப்படுகிறது.

ஜனநாயகம் என்பதன் அர்த்தத்தை, அதன் பெறுமதியை நமது அரசியல் தலைவர்களும் சரி, மக்களும் சரி ஏற்றுக் கொண்டதாகவோ, புரிந்து கொண்டதாகவோ தெரியவில்லை.

தேர்தல் என்று வந்தால் ஆளுங்கட்சியினர் தமது கடந்த கால ஆட்சியின் செயற்பாடுகளை, சாதனைகளை, இனிவருங்காலங்களில் தாங்கள் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்களை முன்வைத்து மக்களிடம் ஆதரவு தேடவேண்டும் எதிர்க் கட்சியினரும், மற்றவர்களும், தமது கொள்கைளளை நடைமுறையிலுள்ள குறைபாடுகளை, பிரச்சினைகளை கடந்த கால ஆட்சியிலுள்ள தவறுகளை, அதற்கான தீர்வுகளை முன்வைத்து பிரசாரம் செய்ய வேண்டும்.

மக்கள், தமக்கு முன்வைக்கப்படும் கொள்கைகளையும், விளங்கங்களையும் சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் உண்மைகளைக் கண்டறிந்து பொருத்தமானவர்க்கு, தகுதியானவர்க்கு வாக்களித்துத் தெரிவு செய்ய வேண்டும். இதுவே சரியான ஜனநாயகத் தேர்தற் செயற்பாடாகும். ஆனால் நமது நாடு உட்பட ஜனநாயக நாடுகளில் நடக்கும் தேர்தல்கள் எப்படி உள்ளன?

ஆளுங்கட்சி, தேர்தல் என்று வந்ததும் விலைவாசிகளைக் குறைக்கும், சம்பளத்தை அதிகரிக்கும் சலுகைகளை அறிவிக்கும், இவ்வாறு மக்களைக் கவர்ந்து வாக்குகளைப் பெற நினைக்கும் இவை போதாதென்று தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும், ஆள்பலத்தையும் பயன்படுத்திச் செய்யக் கூடிய எல்லாவித மோசடிகளையும் செய்து பணத்தை தண்ணீராக இறைத்து வெற்றி பெறமுனையும்.

எதிர்கட்சிகளும், அதிகாரம் இல்லாத குறையொன்றைத்தவிர ஏட்டிக்குப் போட்டியாக அனைத்து மோசடிகளையும், வன்முறைகளையும் செய்து வென்றுவிடத் துடிக்கும், இத்தேர்தல் கலாச்சாரத்தில் மக்களும் அள்ளுப்பட்டு அரசியல் வாதிகள் அவிழ்க்கும் புளுகு மூட்டைகளையும், பொய்களையும் நம்பி சாராய போத்தல்களுக்கும், சாறிகளுக்கும், சலுகைகளுக்கும், பதவிகளுக்கும், பயத்துக்கும் பலியாவதே தேர்தல் ஜனநாயகமாகிவிட்டது. மக்களின் விருப்பப்படி மக்களால் தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகள் ஊடாக மக்கள் தம்மைத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமே ஆட்சி செய்வதே மக்களாட்சி: அதுவே ஜன நாயகம் என்பது காதுக்கு இனிக்கும் கருத்திய லானாலும், நடைமுறையில் வசதி படைத்த முதலா ளித்துவ சுரண்டும் வர்க்கம், தமது பொருளா தார பதவி நலன்களுக்காக மக்களை ஏமாற்றியும், வஞ்சித் தும், பயமுறுத்தியும், அற்ப சொற்ப சலுகைகளை அளித்தும் மக்கள் ஆதரவைப் பெற்று ஆதரவு தந்த மக்கள் மீதே ஐந்து ஆண்டுகளுக்குச் சவாரி விடுவதே ஜனநாயகத் தேர்தலின் விதியாகிவிட்டது. மொத்தத்தில் இந்த அரசியல் வாதிகளுக்கு ஜனநாயகத்திலும் நம்பிக்கை இல்லை: மக்களிலும், நம்பிக்கையில்லை: தேர்தலிலும் நம்பிக்கை இல்லை. ஆனால் இவற்றை எல்லாம் நம்புவதாக நடித்துக் கொண்டிருக்கிறார்களே இந்த நடிப்புக்குப் போடப்பட்ட முகமூடிதான் ஜன நாயம். மக்கள் அரசியல் விழிப்புணர்வு அடையும் வரை இந்த முகமூடிகள் கிழியப் போவதில்லை மக்கள் விழிப்புணர்வு அடைய இந்த அரசியல் வாதிகள் விடப்போவதுமில்லை. ◆

❁ *மலர்வேந்தன்*

# புத்தாண்டுக் கனவுகள்

இனச்சண்டை எனும்கொடிய இருள் கலைந்து மக்களெல்லாம்
மனம்விட்டுச் சிரித்திருக்க முத்தமிழ்த்தாய் - மனம்திறந்து
வாழ்த்தி நின்றாள்; விண்ணுலகும் வாழ்த்தி மலர் சொரிய
வாழக் கிடைத்ததம்மா வழி!

பறவைகளாய் மக்களெல்லாம் பறந்தார்கள் சுதந்திரமாய்
உறவுகளைச் சந்தித்தார்; உவகை கொண்டார் - பிறகென்ன
இரவு பகல் கொண்டாட்டம்! எங்குமே மகிழ்ச்சியொலி!
திருவிழாத் தேரோட்டம்தான்!

தட்டிப் பறிப்பதற்கும், தள்ளிப்போ என்பதற்கும்
வெட்டிப் புதைப்பதற்கும் வில்லரில்லை - சுட்டு
பொசுக்கியவர்கைகளிலே பூச்செண்டு வைத்திருந்தார்
திசையெட்டும் தமிழ்மலரில் தேன்!

பயந்தோடி வெளிநாட்டில் புகுந்த தமிழரெல்லாம்
பயம் நீங்கித் தாய்நாடு பறந்து வந்தார் - புயலடித்து
அழிந்ததுபோல் சீர்கெட்ட அவர்வாழ்ந்த பூமியெல்லாம்
மிளிர்ந்தது காண் எழிற்கோலம் மீண்டும்!

மனம்குளிர நிம்மதியாய் மறுமலர்ச்சி பெற்று வாழ்வில்
சனம் வாழும் வாழ்வதனைச் சலிப்பில்லாமல் - தினம் தினமாய்
நான் பார்த்து எனை மறந்து நடக்கையிலே என்னுடைய
தேன் கனவு கலைந்தம்மா தேய்ந்து!

என்கனவு கலைந்தாலும் என்றோ ஒருநாளில்
மண்மிசையில் சமாதானம் மலரும் :- அன்றேதான்
உண்மையான அர்த்தமுள்ள உயர்வாழ்வு எமக்கெல்லாம்
என்று திடம் கொள்வோம் இன்றே!

*கவிஞர் செ. குணரத்தினம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபம்

இறைவனை நம்புகின்ற எந்த மனிதனுக்கும் செபம் ஒரு முதன்மையான, முக்கியமான பக்தி முயற்சியாக அமைகின்றது. எந்த ஒரு மனிதனும் தெய்வத்தின் முன்நின்று தனது உள்ள ஆதங்கங்களை, ஆவல்களை வெளிப்படுத்தாமல் இல்லை. சாதாரண மனிதனுக்கு கல்லு கல்லுத்தான்; ஆனால் பக்தனுக்கு அது கடவுளின் சாயல். "கல்லைக் கடவுளாய்க் காண்பவன் அந்தக்கல்லிடம் தனது நியாயங்களைச் சொல்லி முறையிடுவது நியாயம்தானே" என கண்ணதாசன் பக்தனுக்குப் பரிந்து பேசுகிறான். செபம் ஒவ்வொரு சமயத்திலும், வெவ்வேறு விளக்கங்களில் வெவ்வேறு வடிவங்களில் வெளித்தெரிகின்றது. தங்களது நியாய, சமய, தத்துவ கொள்கைகளுக்கேற்ப ஒவ்வொரு சமயமும் செபத்திற்கு விதம் விதமான வரைவிலக் கணங் களை கொடுக்கின்றது. கத்தோலிக்க சமயத்தில் செபம் ஓர் அச்சாணியாக, அடிநாதமாகப் புலப்படு வதால் கத்தோலிக்கம் செபத்துக்கு பொருத்த மான வரைவிலக்கணம் கொடுக்கின்றது.



செபம் நன்றியின் வெளிப்பாடு, அடக்கத்தின் புலப்பாடு. மனித விசுவாசத்தின் நம்பிக்கையின் சாரம் செபம். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள தொடர்பாடல் செபம். இது ஒரு தனி உரையாடல் அல்ல. (Monoloque) மாறாக மனிதனுக்கும் மனிதன் யாரை முதலாக முடிவாக எண்ணு கிறானோ அவருக்கும் இடையே உள்ள உரையாடல் (Dialoque) செபம் ஒரு பாலம். இப்பாலத்தில் மனிதன் பயணம் செய்து தனக்கு மன நிம்மதி யைத் தேடிக்கொள்கிறான். செபம் ஒரு கலை. இது மெல்ல மெல்ல கற்க வேண்டியது மட்டுமல்ல, மாறாக படிப்படியாக உள்வாங்கப்பட வேண்டிய கலை. செபம் எமது தாய் மொழியை வளர்க்கும் கலாசார ஊடகம் அல்ல. மாறாக இலகுவான எளிமையான மொழியில் புலப்படுத்த வேண்டியது. செபம் உதட்டிலே உதயமாகி, உண்மைகள் சாராத வார்த்தையாகி, உடனுக் குடன் கருகிப் போவதல்ல. மாறாக இதயத்தில் உதயமாகி, இதய ஏக்கப்பெருமூச்சுகளோடு, தனிமை, விரக்தி, மன அழுத்தம், சோகம் அனைத்தும் உதடுகளின் உதவியுடன் உண்மையானவனை நோக்கி உயரப்பறக்க வேண்டும். செபத்திற்கு வார்த்தைதான் முக்கியம் என சிலர் வாதிடுகிறார்கள். ஆனால் மௌனமே செபமல்லவா !

கிறிஸ்தவர்களுள் பலர் செபத்தை கடின சுமையாகவே எண்ணுகிறார்கள். ஆதலால் தான் ஆலயத்துள் வருகின்ற கிறிஸ்தவர்கள், செபங்களை மனனப்பாணியில் உச்சரித்து வெளி அலங்கார ஆடம்பரங் களில் கண்களை அலையவிட்டு உள்ளத்தில் அமைதியின்றி வீடு செல்கிறார்கள். செபிப்பது கடினம்தான். செபிப்பதற்கு உடல் மட்டும் ஆலயத்துள் அமரக்கூடாது. உள்ளமும் எங்களோடு அமர வேண்டும். பின்பு தேவ ஆவியின் துணையோடு செபிக்கவேண்டும்.

"நம் வலுவற்ற நிலையில் நமக்கு ஆவியானவர் துணை நிற்கிறார்" ஏனெனில் செபிக்க வேண்டிய முறையில் செபிப்பதெப்படி என நாம் அறியோம். ஆவியானவர் சொல்லொணாப் பெருமூச்சுக் களோடு பரிந்து பேசிச் செபிக்கிறார் (உரோ 8:26) என புனித சின்னப்பர் செபத்தின் இயலாமையை சுட்டுகின்றார்.

புனித வேதாகமம் ஒரு செபப்புத்தகம். அதிலே செபத்தைப் பற்றிய எத்தனையோ உதாரணங்களை, உவமைகளை, உருவகங்களைப் பார்க்கலாம். வேதாகமம் என்ற கடலில் மூழ்க ஆயக்காரனும், பரிசேயனும் என்கின்ற முத்தான உவமையை எடுத்து செபம் என்கின்ற கருவை நன்கு ஆராய்வோம். (லூக் 18:9-14) இங்கு பரிசேயன், ஆயக்காரன் என்கின்ற இரு துருவங்களைப் பார்க்கின் றோம். இந்த இரு கதாபாத்திரங்களுள் எது முக மூடி அணிந்து ஒப்பனையை மிகைப்படுத்தி ஆடம் பரமாக அரங்கேற்றியது என்றும் எது ஒப்பனையின்றி உண்மை தாற்பரியங் களோடு, வாழ்வின் சுயநிலைகளோடு அரங்கேறியது என்றும் பார்ப்போம்.

முதலில் பரிசேயனை எமது கண் முன் கொண்டு வருவோம். யூத மக்களிடையே பரிசேயருக்கு என்று தனியிடம் இருந்தது. பரிசேயர் என்றாலே "தனித்து இயங்குதல்" என்று சில இறையிய லாளர்கள் அணி செய்வார்கள். இவர்கள் கடவுளின் கட்டளைகளைக் குறையின்றி நிறைவேற்றுபவர்கள். சட்டத்துக்காக மனிதன் என்கின்ற சாரமற்ற கொள்கை களின்படி வாழும் சட்டப்பிரியர்கள். மனிதம் என்கின்ற உண்மையை மறைத்து சட்டம் என்கின்ற பட்டத்தை நெற்றியில் அணிந்து உலாவருகின்ற உலகியல் மனிதர்கள். இவர்கள் தான தருமங்கள் செய்வதில் சளைத்தவர்கள் அல்ல. தாராள மனப்பான்மையோடு இரக்கும் ஈகைப் பண்பு இவர்களிடம் தாராளமாகவே மலிந்து கிடந்தது. இவர்கள் செபிப்பதற்கென பிரத்தி யேகமான நேரத்தை ஒதுக்கி காலம் தவறாமல் கடவுளை தியானித் தவர்கள். ஆனால் இவர்கள் செபிக்கும் போது அந்தச் செபத்தில் உண் மையில்லை. ஒரு பரிசேயன் செபத்திலே தன்னையும், வாழ்வின் சுய நிலைகளின் உண்மைத்தத்துவங்களையும் பிரித்து செபிக்க முற்படு கிறான். கடவுளைக் கூவியழைத்து தனது சாதனைகளை அவருக்குச் சொல்லி தன்னை முதன்மையானவனாக்கி உண்மைகளின்று வேறு பட்டு செபிக்க முற்படுகின்றான். அதாவது இவனது செபம் ஒரு தனி உரையாடல் (Monoloque).

எமது அடுத்த பாத்திரமான ஆயக்காரனிடம் செல்வோம். ஆயக்காரர்கள் விபச்சாரிகளுக்கு நிகராக மதிக்கப்பட்ட வர்கள். காரணம் என்ன வென்றால் மக்களைத் துன்புறுத்தி உரோம அரசுக்கு வரியினை சம்பாதித்து வாரி இறைக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிப்படைப்புகள். இவர்கள் பாவிகள் என்பது இவர்களுக்கும் புரியும். உலகுக்கும் தெரியும். ஆதலால் இவர்களுக்கு சமுதாயத்திலே பிரத்தியேக இடமில்லை. ஆனால் பாவிகள் என்கின்ற சின்னம் இவர்கள் மேல் ஒட்டப்பட்டு இருந்தது. ஆயக்காரன் ஒருவன் செபிக்க ஆலயத்துள் நுழைகின்றான். ஆலயத்தில் எங்கோ ஒரு மூலையில் நின்று கொண்டு கடவுளைக் கூவிஅழைக்கவும் துணியாமல் தனது வாழ்வின் நிலையினை ஏற்றுக்கொண்டு அடக்கத்தோடு மன்னிப்புக் கேட்கிறான். இங்கே இவனது வாய் பேசவில்லை; இதயம் பேசுகின்றது. இந்த உண்மை இதயத்தின் அழுகை ஒலியைக் கேட்க ஆண்டவரும் ஆயத்தமாகி இருப்பார். இது தான் செபம். இதுதான் உண்மை வெளிப்பாடு.

கிறிஸ்தவர்களது செபமும் இவ்வாறே இருக்க வேண்டும். நிகழ்கால வாழ்வின் உண்மை நிலைகளைத் தனிமைப்படுத்தி வெறும் கிறிஸ்தவனாகச் செபிக்கக்கூடாது. மாறாக நிகழ்கால வேதனை இழப்புகள், விரக்திகள், சோகங்கள் அனைத்தையும் ஆலயத்துள் கொணர்ந்து அவற்றோடு செபிக்கவேண்டும். எமது நொந்த இதயங்களால் செபிக்க வேண்டும். அப்போதுதான் நல்ல ஆறுதல் கிடைக்கும். நல்ல விமோசனம் பிறக்கும். புதுவாழ்வு இதயத்தில் உதயமாகும்.

**ப. விமல்**
டி மசெனட் குருமடம் (OMI)
மக்கோனா

# நீர் இறைமகனென்றால்

நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும் என்றான்.

ஆண்டவர் அவ்வாறு அற்புதம் செய்து இறைமகன் என்பதை நிரூபிக்கவில்லை.

ஆண்டவரே! நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும் (லூக் 5:12)

ஆண்டவர் அவர் மீது பரிவுகொண்டு 'அழாதீர்' என்றார் (லூக் 7:13)

தொழுகைக் கூடத்தலைவர் ஒருவர் இயேசுவிடம் வந்தார். அவர் பெயர் யாயிர். அவர் இயேசுவின் காலில் விழுந்து தம்முடைய வீட்டுக்கு வருமாறு வேண்டினார். ஏனெனில் பன்னிரண்டு வயதுடைய அவருடைய ஒரே மகள் சாகும் தறுவாயிலிருந்தாள். (லூக் 8:41-42)

இவ்வாறான வேண்டுதல்களை இயேசு நிறைவேற்றினார்.
இன்று நம்மில் பலர் நீர் உண்மையான தெய்வமானால் எனக்கு இந்தச் செய்ய வேண்டும். இந்த நோய் நீங்க வேண்டும். அப்போது நான் இதை உமக்கு நேர்த்தியாகத் தருவேன் என்கின்றோம்.

இதுவும் அலகையின் வார்த்தையும் ஒன்றே. இவ்வாறான வேண்டுதல்களை நிறைவேற்றி ஆண்டவர் தமது உண்மைத்தன்மையை நிரூபிக்க மாட்டார்.

உலகு சார்ந்த பிறஇனத்தவரே இவற்றையெல்லாம் தேடுவர். உங்களுக்கு இவை தேவையென உங்கள் தந்தைக்குத் தெரியும். (லூக் 12:30)

**C. பிலிப்**
கோமாரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப்போட்டி !

**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி 28. 02.2002**

**விவிலியம் கற்போம் - 14**

## கானான் நாடு மீண்ட சகோதரர்கள்

(தொடக்க நூல் 42: 25 – 38, 43: 1 – 11)

**பொருத்தமானதைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யோசேப்பு சகோதரர்களிடம் தம்மை இன்னார் என்று காட்டிக் கொள்ளாமல் அவர்களுக்கு நிறையத் தானியங்கள் கொடுத்து, அதற்குரிய பணத்தையும் அவரவர் பையிலிட்டு, வழிக்குவேண்டிய ................................ கொடுத்து அனுப்பிவைத்தார். அவர்கள் ................................ நாட்டில் தந்தை யாக்கோப்பிடம் நடந்தவற்றைக் கூறி, கொண்டுவந்த தானியங்களையும் காட்டிய போது, அதிலே அவரவர் பணம் இருக்கக்கண்டு பயந்துவிட்டார்கள். எனினும், யாக்கோபு நடந்தவற்றைக் கேட்டு, 'யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை, இப்போ ................................ கூட்டிக்கொண்டு போகவிருக்கிறீர்களே! என்று கவலையடைந்தார். அதற்கு அவர்கள், 'நீங்கள் அவனை அனுப்பாவிடின் நாங்கள் போகமாட்டோம். ஏனெனில், அந்த ஆள் 'உங்கள் சகோதரன் உங்களுடன் வராவிடில் நீங்கள் ................................ விழிக்கவேண்டாம்' என்று சொல்லிவிட்டார்! என்றார்கள். அதற்கு யாக்கோப்பு, 'உங்களுக்கு இன்னுமொரு ................................ இருக்கிறான் என அம்மனிதருக்குத் தெரிவித்து, ஏன் எனக்கு ................................ வருவித்தீர்கள்' என்று முறையிட்டார். அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் இணங்கவில்லை, நாட்டில் ................................ மிகக் கடுமையாய் இருந்தது, ................................ வாங்கி வந்த உணவுப் பொருள்கள் தீர்ந்து விட்டன. இதனால் யாக்கோபு மக்களை எகிப்துக்குப் போய்வரும்படி சொல்ல, அதற்கு யூதா, எங்கள் ................................ நீங்களும் நாங்களும் சாகாமல் உயிரோடிருக்க வேண்டுமானால் ................................ என்னோடு அனுப்பி வையுங்கள்' என்றார். யாக்கோபு வேறு வழியின்றிச் சம்மதித்தார்.

| | |
|---|---|
| உணவுப்பொருட்கள் | பென்யமின்னையும் |
| என் முகத்தில் | சகோதரன் |
| துன்பம் | பஞ்சம் |
| எகிப்திலிருந்து | குழந்தைகளும் |
| இளைஞனை | கானான் |

குறிப்பு :– **வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும். வேறுவகையில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 28. 02.2002

# பரிசுப்போட்டி!

## அறிவை வளர்ப்போம் – 14

(சரியான விடையைத் தெரிவு செய்து அடிக்கோடிடுக)

1. முத்தமிழ்க் காப்பியம் என்று சொல்லப்படுவது
   (சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை)

2. இவ்வாண்டுக்கான (2001) சாஜாக்கிண்ண ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற நாடு
   (சிம்பாப்வே, பாக்கிஸ்தான், இலங்கை)

3. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர்
   (கோபாலகிருஷ்ணபாரதி, முத்துத்தாண்டவர், முத்துசுவாமிதீட்சிதர்)

4. இம்முறை இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் கிரிக்கட் காப்டன் இவர்
   (அரவிந்த டி சில்வா, அர்ஜுனா ரணதுங்க, துலிப்பெண்டிஸ்)

5. மனித உடலில் கபச்சுரப்பி உள்ள இடம்
   (நெஞ்சு, கழுத்து, தலை )

6. 'பாவேந்தர்' என்று பாராட்டப் பெற்றவர்
   (பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன்)

பெயர் ..............................................................................................

முகவரி ..............................................................................................

அனுப்ப வேண்டிய முகவரி

**விவிலியம் கற்போம் – 14 / அறிவை வளர்ப்போம் 14**
**தொண்டன்**
அ . பெ . எண் - 44
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலியம் கற்போம் - 12 விடைகள்

1. இறையாவி 2. மதிநுட்பமும் ஞானமும், 3. அரண்மனையின், 4. கணையாழியைக், 5. இரண்டாம் தேரில் 6. சாபனாத்து பனேகா, 7. உணவுப்பொருள்களையும், 8. களஞ்சியங்களை, 9. தானியம்,

---

## அறிவை வளர்ப்போம் - 12 விடைகள்

1. 1948, 2. வ. உ. சிதம்பரனார் 3. வால்மீகி, 4. அவுஸ்திரேலியா அணி, 5. எகிப்து, 6. சிரசு,

**100/- பரிசு பெறுவோர்**

F.X பிரசன்னா
76/1 கோவிந்தன் வீதி
மட்டக்களப்பு.

S.N. கிறிஸ்மீனா
இக்பால் வீதி
மூதூர் - 07

**50/- பரிசு பெறுவோர்**


அ. சியாமளா
18/1 பாக்கியம் ஒழுங்கை,
பெரிய உப்போடை,
மட்டக்களப்பு.

P. அன்ரனி டிலிமா
பொத்துவில் வீதி,
அக்கரைப்பற்று -09

போட்டியில் பங்கு கொண்ட அனைவருக்கும்
எமது நன்றி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.



# காற்றில் கலந்துவரும்...

## கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள், தமிழ்
## பெப்ரவரி – 2002

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – காலை 5.50 மணி**

நாள் :- 09, 10, 11, 12, 13, 14, 15
23, 24, 25, 26, 27, 28

**சிறுவர் நிகழ்சிகள் (சிறுவர் உலகம்) மாலை 7.45 மணி**

நாள் :- 05, 19

**வளர்ந்தோர் நிகழ்ச்சிகள் (புதிய உலகம்) மாலை 7.00 மணி**

நாள் :- 03, 17

**சிறப்பு நிகழ்ச்சிகள்**

பெப்ரவரி : 13 திருநீற்றுப்புதன்
பெப்ரவரி : 15 தவக்கால முதல் வெள்ளி
பெப்ரவரி : 22 தவக்கால 2வது வெள்ளி

**நிகழ்ச்சித் தொகுப்பு: மலர்வேந்தன்**
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் – 44 மட்டக்களப்பு.

**தொடர்ந்துவரும் தவக்கால வெள்ளிகள் தோறும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும்**




# உயிர்ப்பு விழாப்பாடல்கள்

**உயிர்ப்பு விழாத் திருப்பலிப்பாடல்கள் வாத்திய இசையுடன் தயாராகின்றன. ஆலயப் பாடகர் குழுக்களுக்குப் பயன்படும் இவ்விசை நாடாவைப் பெறவிரும்புவோர் முன்கூட்டியே பதிவுசெய்து கொண்டு இறுதிநேர ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.**

தொடர்பு : சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் – 44
மட்டக்களப்பு.





St. Ignatius Type Setting - 28, Sinnalebbe Street, Batticaloa.
Printing & Cover Designation - St. Joseph's Catholic Press, Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org